PUBLIC LIBRARY
JAFFNA
384114

# எங்கள் தேசம்

மாதம் இரு முறை

QD/13/NEWS/2014

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

Engal Thesam  එංගල් දේසම්

மலர்: 13 | இதழ்: 08 | 2014 ஏப்ரல் 20 – 30 | ஹிஜ்ரி: 1435 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00 | 267



### கலாநிதி அஷ்ஷெய்க் நாதிர் நூரி காலமானார்

இஸ்லாமிய உலகில் தாக்கம் செலுத்திய ஆளுமையும் சிந்தனையாளரும் சமூக நலப்பணிகளின் முன்னோடியுமான குவைத் நாட்டைச் சேர்ந்த கலாநிதி அஷ்ஷெய்க் நாதிர் நூரி காலமானார்.

சிறுபான்மை முஸ்லிம் அவதானம், அழைப்புப் பணி, அதன் புதிய பரிமாணம், இஸ்லாமிய சமூக மாற்றம், அழைப்பாளர்கள் தம்மை நவீன சமூக மாற்றங்களுக்கு ஏற்ப வடிவமைத்தல் தொடர்பான ஆழமான சிந்தனை பாரம்பரியத்தை கட்டமைத்தவர்தான் கலாநிதி நாதிர் நூரி. இவர் இளைஞர்களின் எழுச்சியில் பாரிய தாக்கம் விளைவித்தவர்.

இனவாத தீயில் பற்றியெரியும் வில்பத்து காடு 05

சீப்பை மறைத்துவிட்டால் ஒருபோதும்திருமணம் நின்றுவிடப் போவதில்லை 07



மாபெரும் துரோகத்திற்கு முன்னால் துருக்கியின் எதிர்காலக் கனவு 13

# மறிச்சுக்கட்டி முஸ்லிம் குடியேற்றம் வில்பத்து சரணாலய எல்லைக்குள் இல்லை




## உறுதியளிக்கிறார் பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன்

“ தங்களுக்கு சொந்தமான காணிகளிலேயே முஸ்லிம்கள் மீள்குடியேறியுள்ளனர்

மறிச்சுக்கட்டி முஸ்லிம் குடியேற்றம் முறைப்படி பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளிலேயே இடம்பெற்றுள்ளதாகவும் வில்பத்து சரணாலய எல்லைக்குள் இக்குடியேற்றம் இல்லையென்றும் வெளி இடங்களைச் சேர்ந்த எவரும் இக்குடியேற்றத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை என்றும் முசலி பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் உறுதியாகக் குறிப்பிட்டுள்ளார்.

➜ 17

## நோம்புக்கு சவூதி பேரீச்சம் பழம் வராது?

சவூதி அரசாங்கத்தினால் அனுப்பப்பட்ட 200 மெட்ரிக் தொன் பேரீச்சம் பழம் புதுவருட காலத்தில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்ததாக செய்தி வெளியாகியுள்ளது.

வழமையாக ரமழான் மாதத்துக்காக அனுப்பப்படும் பேரீச்சம் பழம், இம்முறை நேரகாலத்துடன் சவூதி அரசாங்கத்தினால் அனுப்பப்பட்டுள்ளதாகவும் இப்பேரீச்சம் பழங்களே தற்போது விநியோகிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

➜ 16

## பயங்கரவாத அமைப்பு பட்டியலில் பொதுபல சேனா




சர்வதேச அளவில் அரசியல் வன்முறைகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ளும் அமைப்பொன்று பொதுபல சேனாவை ஒரு பயங்கரவாத அமைப்பாக பெயரிட்டுள்ளது.

உலக நாடுகளில் அரசியல் வன்முறை தொடர்பில் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு செய்யும் சர்வதேச நிபுணர்களைக் கொண்ட ஓர் ஆய்வுமையமான

➜ 17

## நூற்றுக்கணக்கான முஸ்லிம்களின் புதைகுழி பொஸ்னியாவில் சிக்கியுள்ளது

பொஸ்னியா நாட்டில் கடந்த 1990 ஆம் ஆண்டில் தொடங்கி சில ஆண்டுகள் போர் நடந்தது. அந்தக் கால கட்டத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல் போனார்கள். இவர்கள் குறித்து அந்த நாட்டில் ஓர் அமைப்பு சார்பில் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பொஸ்னியாவின் மத்திய பகுதியில் உள்ள டோன்ஜி வாகூப் பிரதேசத்தில் சில தினங்களுக்கு முன் மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது.

147 பேரின் எலும்புக் கூடுகள் கிடைத்தன. இவற்றை ஆய்வாளர்கள்கைப்பற்றி பரிசோதனை நடத்தி வருகிறார்கள்.

இது குறித்து அந்த அமைப்பின் செய்தி தொடர்பாளர் லேஜ்லா செனிக் கூறுகையில்;

➜ 16



முசலி மறிச்சுக்கட்டி கிராமத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம்களால் அமைக்கப்பட்டுள்ள குடிசைகளை படத்தில் காணலாம். இம் மீள்குடியேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் பொதுபல சேனா முஸ்லிம்கள் வில்பத்து சரணாலயத்தை ஆக்கிரமித்து கட்டிடங்களை அமைத்து வருவதாக போலிக் குற்றம் சாட்டி வருகிறது.

## வெள்ளைமணல் காணியும் பறிபோகிறது

### கிழக்கு முதலமைச்சரின் போன் ஓப்

திருகோணமலை மாவட்டம் சீனக்குடாவை அண்மித்த வெள்ளைமணல் கடலோர பகுதியில் பொதுமக்கள் தேவைக்காக பயன்படுத்தப்பட்டு வந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் விமானப் படையினரால் திடீரென கையகப்படுத்தப்பட்டுள்ளன.

மபுள்பீச் தொடக்கம் கருமலையூற்று வரையிலான நிலப்பகுதியை விமானப்படை சுவீகரிப்பதற்கான எல்லைகள் அடையாளமிடப்பட்டு, முட்கம்பி வேலிகளும் போடப்பட்டு,

➜ 17




## சுதந்திரத்துக்கு முன் ஒரு முஸ்லிம் கட்சியேனும் இருக்கவில்லை

### –அமைச்சர் குணசேகர–

ஏனைய இனங்களை மதித்து நடக்கக்கூடிய மனிதத்துவத்தை பெற முடியாவிட்டால், இலங்கையில் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியாது என்று அமைச்சர் சி.இ.டபிள்யு. குணசேகர தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்களுக்கு மாத்திரமன்றி, ஏனைய மக்களுக்கும் சுயமரியாதையும் கௌரவமும் உண்டு. இலங்கையில் சுதந்திரத்துக்கு முன்னர் ஒரு முஸ்லிம் அரசியல் கட்சியேனும் இருக்கவில்லை. ஆனால், தற்போது 10 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அதேபோன்று தமிழ், சிங்கள கட்சிகளும் அதிகரித்துள்ளன. அனைத்து இன மக்களும் அவரவரின் இனங்களை பெருமையாக கருதுகிறார்கள்.

இந்நிலையை புரிந்துகொண்டு இன நல்லுறவுடன் வாழ்ந்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

➜ 17

## 2240 பேருக்கே ஹஜ் வாய்ப்பு

### திணைக்கள பணிப்பாளர் எம். எச். எம். ஸமீல்

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இம்முறை 7500 இற்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ள போதும் 2240 பேருக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் எம். எச். எம். ஸமீல் தெரிவித்துள்ளார்.

மக்காவில் விஸ்தரிப்பு பணிகள் இடம்பெற்று வருவதால் ஹஜ் யாத்திரிகர்களின் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 2240 பேருக்கே கோட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும் 7500 விண்ணப்பதாரிகளில் முன்னுரிமை அடிப்படையில் தகுதியானவர்களை தெரிவு செய்வதாகவும் கூறினார்.

முதற்தடவையாக ஹஜ் கடமைக்கு செல்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாக கூறிய பணிப்பாளர், ஹஜ் முகவர்கள் இதுவரை தெரிவு செய்யப்படவில்லை என்றும் யாத்திரிகர்கள் முகவர்களிடம் ஏமாற வேண்டாம் என்றும் தெரிவித்துள்ளார்.

## நடிகர் ஜெய் இஸ்லாத்தில்

தென்னிந்திய திரைப்பட நடிகர் ஜெய் இஸ்லாத்தில் இணைந்து கொண்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரபல இசையமைப்பாளர் யுவன் சங்க ராஜா அண்மையில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். இதனையடுத்து திரையுலக பிரபலங்கள் பலரும் இஸ்லாத்தில் இணைய இருப்பதாக செய்தி வெளியாகி இருந்த நிலையிலேயே நடிகர் ஜெய் இஸ்லாத்தை ஏற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்தத்தை அழிக்கும் காவி உடைக்காரர்கள்

## The Island தி ஐலன்ட் பத்திரிகை தெரிவிப்பு



இலங்கையில் காவி உடை தரித்தவர்களால் சிங்கள பௌத்தம் அழிக்கப்பட்டு வருவதாக பிரதான ஆங்கில பத்திரிகையான தி ஐலன்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது. அண்மையில் பௌத்த அடிப்படைவாத அமைப்பான பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், ஜாதிக பலசேனாவின் பௌத்த மதகுருவான மூத்த மதகுரு ஒருவரை தகாத வார்த்தைகளால் திட்டியதும் அவரின் பத்திரிகையாளர் சந்திப்பை தடுத்த சம்பவத்தையும் கொண்டு இந்த ஆங்கில பத்திரிகை அதன் அரசியல் பகுதியில் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுவரை, குறிப்பாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பத்திரிகையாளர் சந்திப்பு கூட மாற்று தரப்பினரால் பிரச்சினைக்கு உட்படுத்தப்படவில்லை. இப்படி இருக்கும் போது, பௌத்த மதகுரு என்று சொல்லப்படுகின்ற ஞானசார தேரரால் இன்னொரு பௌத்த குருவின் பத்திரிகையாளர் சந்திப் பொன்று குழப்பப்பட்டிருக்கிறது.

பௌத்த மதத்தை பாதுகாப்பதாக கூறும் இந்த ஞானசார தேரர் போன்றோர் பௌத்த மத வளர்ச்சிக்காக இதுவரை எதனை செய்திருக்கிறார்கள்?

கடந்த இரண்டு வருடகாலப் பகுதிக்குள் அறிமுகப்பட்ட பொதுபல சேனா, சிங்கல ராவய, இராவணா பலய போன்ற பௌத்த அமைப்புகளுக்கு நிதிகள் எங்கிருந்து வருகின்றன?

இலங்கையின் பௌத்த வரலாற்றில் பண்டார நாயக்கவை புத்திரக்கித மற்றும் சோமராம ஆகிய தேரர்கள் கொலைசெய்த போது பௌத்த பிக்குகளுக்கு மாசு கற்பிக்கப்பட்டது.

இதையடுத்து இந்த பௌத்த கலாசாரத்தை தற்போதுள்ள பொதுபல சேனா போன்ற அமைப்புகள் முன்கொண்டு செல்வதாக அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்த அமைப்புகள் பெரும்பாலும் சிறுபான்மை இனத்தவர்களை தாக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றன. இதனால் சிறுபான்மையினரை விடவும் சிங்கள பௌத்த மதத்துக்கு பாரிய பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

ஒரு பௌத்த பிக்குவை பார்த்து மினியோ என்று கூறும்போது அங்கு பௌத்த பிக்குவின் கௌரவம் எந்தளவு பாதுகாக்கப்படுகின்றது என்பதைக் காணமுடிகிறது.

அசோக மன்னர் கூறிய பௌத்த சிந்தனைகளை பொறுத்தவரை, பொறுமையும் சகிப்பு தன்மையுமே பௌத்தத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. எனினும், தற்போது இலங்கையில் அந்த இரண்டும் இல்லாதுபோய் பௌத்தம் பாரிய பிரச்சினைக்கு உள்ளாகியுள்ளது.

இலங்கையின் பௌத்த மதத்தின் தலைவர்களாக கருதப்படும் அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகா நாயக்கர்கள், குறித்த தீவிரவாத அமைப்பு சார்ந்த பிக்குகளை கட்டுபடுத்த முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

இலங்கையில் கசினோ ஒழிக்கப்படும் போது சமூகத்தில் ஒழுக்கம் பேணப்படும் என்று அவர்கள் கூறியுள்ளனர். அவர்கள் பிரதான பிரச்சினை பற்றிப் பேசவில்லை. இவர்கள் தமக்கு கீழுள்ள பௌத்த பிக்குகளை கட்டுப்படுத்த முடியாதிருக்கும் போது, நிறைவேற்று அதிகாரத்தை குறைகூறி எதுவும் நடக்கப்போவதில்லை.

குறித்த பௌத்த அமைப்புகள் அரசியல் நோக்கத்துடன் செயற்படுவதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில், அரசியல்வாதிகள் இந்த பௌத்த அமைப்புகளின் அராஜகத்தை கண்டு மௌனமாகவே உள்ளனர்.

கலகொட அத்தே ஞானசார தேரரை பொறுத்தவரை அவர் இறுதிப்போருக்கு என்ன பங்களிப்பை செய்திருக்கிறார்?

எதனை வைத்துக்கொண்டு அவர் சிங்களத்தையும் பௌத்தத்தையும் காக்கப்போவதாக கூறிவருகிறார்?

## ராஜபக்ஷ குடும்பத்தின் சொத்துகளல்ல

### இப்படிக் கூறுகிறார் ஞானசாரர்

நாடு முழுவது பிரிவினைவாதத்தை கொண்டு செல்லும் முஸ்லிம் கடும்போக்கு அமைப்புகள் மற்றும் அவ்வமைப்புகளுக்கு பணம் வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இறுதி ஆண்டாக மலரும் புத்தாண்டு அமைய அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்போம் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

றிஷாட் பதியுதீன் வில்பத்து வனப் பகுதிக்கு சொந்தமான காணியில் முஸ்லிம் மீள்குடியேற்றங்களை அமைக்க அனுமதி கொடுத்தது பஷில் ராஜபக்ஷதான். இது ராஜபக்ஷ குடும்பத்தின் பெற்றோரின் சொத்துகளல்ல.

இந்த நாட்டில் தீவிரவாத கடும்போக்கு இயக்கங்களுடன் அரசும் ஊடகங்களும் இணைந்திருக்கின்றன. எங்களை இல்லாதொழிக்க அவர்களுக்கு முடியும். நாங்கள் அதற்கு தயார். என்றாலும் எங்களை இல்லாதொழிப்பதில் பயனில்லை. ஏனென்றால் எங்களைவிட வேகமாக இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பலரை நாம் தயார் செய்திருக்கிறோம். அவர்கள் யார் என விரைவில் தெரியவரும் எனவும் அவர் தெரிவித்தார்.

الكلية الإصلاحية العربية

# இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி - மாதம்பை

## DIPLOMA IN ARABIC & ISLAMIC STUDIES

## கற்கை நெறிக்கான புதிய மாணவர் அனுமதி - 2014

இக்கல்லூரியிலிருந்து 2013 ஆம் ஆண்டு முதன் முறையாக G.C.E. (A/L) பரீட்சைக்கு வர்த்தகத்துறையில் தோற்றியோரில் 93% ஆனோர் சித்தியடைந்துள்ளனர்.

**கற்பிக்கப்படும் பாடங்கள்**

♣ இக்கற்கை நெறியின் போது அல்குர்ஆன், ஹதீஸ், பிக்ஹ், அகீதா, அரபுமொழி, இஸ்லாமியக் கலைகள், ஆங்கில மொழி, தகவல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களுடன் G.C.E. உயர்தரப் பரீட்சைக்கான கணக்கீடு, வியாபாரக்கல்வி, பொருளியல் ஆகிய பாடங்களும் கற்பிக்கப்படும்.

**கற்கை நெறிக் காலம்:** மூன்று வருடங்கள் (3)

**அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகள்**

- G.C.E. (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 5 பாடங்களில் C தரச் சித்தியுடன் தமிழ், உட்பட குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
- 1996/01/01ம் திகதிக்குப் பின்னர் பிறந்திருத்தல்.

**மேலதிக விபரங்களுக்கு :**

**ISLAHIYYAH ARABIC COLLEGE**
Chandrik Silva Mawatha, Old Town, Madampe
Tel: 0773171718, 0775052735, 0715262026
Fax: 032 2247786 Email: islahiyyah@gmail.com

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் Diploma என டைப் செய்து 0777345367 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு 20.04.2014 ஆம் திகதிக்கு முன்னர் SMS பண்ணவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA



# முள்ளுக்கொப்பில் விழுந்த சேலையாய் முஸ்லிம்கள் சீரழிக்கப்படுகிறார்கள்



## அமைச்சர் பஷீர் சேகுதாவூத்

**பணிந்துபோய் கையாள்வதா?**

**எகிறிக் குதித்து அடர்ந்தேறுவதா?**

**விமோசனத்துக்கான வழிமுறைகளை கண்டுபிடிப்பதா?**

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

இன்று முஸ்லிம்கள் முள்ளுக் கொப்பில் விழுந்த சேலையாய் இனவாதிகளின் நெருக்கடிக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக் கிறார்கள். தங்களை எதிர்கொண்டி ருக்கும் பிரச்சினைகளை பணிந்து போய் கையாள்வதா அல்லது எகிறிக் குதித்து அடர்ந்தேறுவதா அல்லது விமோசனத்துக்கான வழிமுறைகளை புதிதாகக் கண்டு பிடிப்பதா? என்பதுதான் இன்று முஸ்லிம் சமூகத்தின் முன்னா லுள்ள கேள்வி என பிரதி அமைச் சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித் தார்.

இலங்கை நிருவாக சேவைக்குத் தெரிவாகி உதவிப் பிரதேச செய லாளர்களாக கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஏறாவூரைச் சேர்ந்த அதிகாரிகளை பாராட்டும் விழாவில் கலந்துகொண்டு உரை யாற்றிய போதே இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; வட மாகாணத்தில் மறிச்சுக்கட்டி என்ற இடத்தில் தொடங்கி கிழக்கு மாகாணத்தில் அறுகம்பை வரை யும் முஸ்லிம்களுக்குக் காணிப் பிரச்சினை இருக்கின்றது. காணி வரலாற்றைத் தெரிந்துகொள் ளாத சக்திகள், முஸ்லிம்களை காணிக் கொள்ளையர்கள் என்று அவமானப் பட்டம் சூட்டி இன்று தமிழர்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இடையிலும் முஸ் லிம்களுக்கும் சிங்களவர்களுக் கும் இடையிலும் பகைமையை ஏற்படுத்துகின்ற வேலையில் இறங்கியுள்ளன.

புதிதாக ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையை எவ்வாறு எதிர்கொள்வது என்று நாம் எல் லோரும் இணைந்து ஆழமாகச் சிந்திக்கவேண்டும். அதிகாரிகள் மட்டத்தில் துவங்கி ஆய்வாளர் கள் வரை இந்த விடயங்களை அவசரமாக ஆராயவேண்டும்.

# பொதுபல சேனாவை தடைசெய்யக் கோரும் இணையதள மகஜர்

change.org

பொதுபல சேனா அமைப்பை தடைசெய்யுமாறு கோரும் மகஜர் ஒன்றுக்கான இணைதளம் மூலம் கையெழுத்து பெறும் நடவடிக் கையொன்று மேற்கொள்ளப் பட்டு வருகிறது. change.org என்ற இணையதளத்தின் ஊடாக இந்த மகஜருக்கான பதிவுகள் பெறப்பட்டு வருகின்றன.

அதன் ஏற்பாட்டாளர்கள் பின் வருமாறு தெரிவித்துள்ளனர்:

நமது நாட்டின் யுத்தத்துக்குப் பிறகான சகவாழ்வையும் அமைதி யையும் குலைப்பதற்காக பொதுபல சேனா மேற்கொள்ளும் வன் முறைமிக்க நடவடிக்கைகள் இன, மத, பேதமின்றி நாட்டின் அனை வரையும் அசௌகரியத்துக்கு உள் ளாக்கியிருக்கின்றன. இந்நிலையில் அரசாங்கமோ அல்லது சம்பந்தப் பட்ட அரச நிறுவனங்களோ அவர் களைப் பாதுகாப்பதைத் தாண்டி சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இன்னமும் காலந் தாழ்த்திக் கொண்டேயிருக்கின் றன.

இந்நிலைமை இப்படியே நீளும் பட்சத்தில், நிச்சயமாக நாட்டில் மதங்களுக்கிடையிலான நிரந்தர மான பகையை உண்டாக்கிவிடும். முஸ்லிம் சமூக அரசியல்வாதி களோ அல்லது புத்திஜீவிகளோ இது பற்றிய பேச்சுக்களைத் தாண்டி ஆக்கபூர்வமான முன் னெடுப்புக்களை மிக அரிதாகவும் காலந்தாழ்த்தியுமே செய்ய முனை கின்றனர்.

இதனை உணர்ந்தே இப்பிரச் சினை பற்றிய பாரதூரத்தை, ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ உட்பட அனைத்துத் தரப்பினருக்கும் இன வாத நடவடிக்கைகளை நிறுத்தக் கோரும் மக்கள் சக்தியின் அழுத்த மாகப் பிரயோகிக்கும் நோக்கில் இந்த இணையதள கையெழுத்து மகஜரை உருவாக்கியிருக்கிறோம். எனத் தெரிவித்தார்.

# நூல்களின் விபரப்பட்டியல் கோரல்

1868 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் வரை இலங்கையில் முஸ்லிம்களினால் வெளியிடப்பட்டுள்ள நூல்களின் விபரப்பட்டியல், 'சுவடி ஆற்றுப் படை' எனும் பெயரில் கல்விமான் எஸ்.எச்.எம். ஜெமீலினால் தொகுக்கப்பட்டு நான்கு பாகங் களாக வெளிவந்துள்ளது. 2000 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை முஸ்லிம்களினாலும் அவர்களது விடயங்களைப் பற்றி ஏனைய இலங்கையரினாலும் வெளியி டப்பட்டுள்ள நூல்களை ஆவணப் படுத்தும் பணி தற்போது ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

எழுத்தாளர்களும் வெளியீட் டாளர்களும் 2000 ஆம் ஆண்டுக் குப் பின்னரான தமது நூல்களைப் பற்றிய பின்வரும் விபரங்களை அனுப்புமாறு வேண்டப்படுகின் றனர். நூலாசிரியர் பெயர்; நூலின் பெயர்; வெளியீட்டாள ரும் முகவரியும்; எத்தனையாவது பதிப்பு; வெளியிட்ட ஆண்டு, மாதம், திகதி; மொத்தப் பக்கங் கள்; விலை; நூலின் அளவு மற் றும் ஏழுவரிகளுக்கு மேற்படாது நூலின் உள்ளடக்க விபரம் என்பனவே அவ்வாறு அனுப்ப வேண்டிய விபரங்களாகும்.

எஸ்.எச்.எம். ஜெமீல், 44 ஏ, ஆசிறி மாவத்தை, களுபோவில, தெஹிவளை.

என்ற முகவரிக்கு விபரங்களை அனுப்பி வைக்கவும். மேலதிக தகவல்களை 0718618210 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக் கொள்ளலாம்.



இனங்களுக்கிடையில் ஒற்றுமை, சகவாழ்வு, சமாதானம் ஆகியவற்றை ஏற்படுத்தும் நோக்கில் அநுராதபுரம் ஹிதோகம பொலிஸாரும் சிவில் பாதுகாப்புக்குழுவும் இணைந்து ஏற்பாடு செய்த தமிழ்-சிங்கள புதுவருடக் கொண்டாட்டம், ஹிதோகம பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிஸாந்த கஸ்தூரி ஆராய்ச்சி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சர்வமத தலைவர்கள் மற்றும் மூவின மக்களும் கலந்துகொண்டனர்.

படமும் தகவலும்: ஏ.ஆர்.எம். ரபியுதீன்

# மத்திய மாகாணசபை உறுப்பினராக ஏ.எச்.எம். இப்றாஹீம்

மத்திய மாகாணசபையின் உறுப் பினராக மாத்தளை மாவட்டத் தில் இருந்து தெரிவான சஞ்சீவ நவரத்தின மரணமடைந்ததை அடுத்து அவ்விடத்துக்கு விருப்பு வாக்கு அடிப்படையில் அடுத்த நிலையிலுள்ள ஏ.எச்.எம். இப் றாஹீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மத்திய மாகாணசபைத் தேர்தலில் மாத்தளை மாவட்டத் தில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக இவர் தெரிவு செய்யப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது.

# பேஸ்புக் துஷ்பிரயோகம் அதிகரிப்பு

facebook

பேஸ்புக் சமூக வலைத்தளம் ஊடாக சிறுவர்கள் துஷ்பிரயோ கத்திற்கு உட்படுத்தப்படுவது நாட்டில் அதிகரித்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிக்கின்றது. கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப் பட்ட விசாரணையில் இந்த விட யம் தெரியவந்துள்ளதாக அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திஸா நாயக்க குறிப் பிட்டார்.

இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடும் இருவர் சந்தேகத்தின் பேரில் தற்போது கைது செய்யப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வெளி நாட்டவரால் இவ்வாறான குற்றங் கள் இழைக்கப்பட்ட போதிலும் தற்போது இலங்கையரே இவ்வா றான குற்றங்களில் அதிகளவில் ஈடுபடுவதாக சட்டத்தரணி அனோமா திஸா நாயக்க மேலும் சுட்டிக்காட்டினார்.

# திருமலையில் அதிக வரட்சி

எப். முபாரக்

திருகோணமலை மாவட்டத் தில் நிலவும் கடும் வரட்சி காரண மாக கந்தளாய், கிண்ணியா போன்ற பிரதேசங்களிலுள்ள கிணறுகள், ஆறுகள் நீர் நிலை களிலும் நீர்வற்றிக் காணப்படு கின்றது.

அதேபோன்று அதிகமான உஷ்ணத்துடன் கூடிய வெயில் நிலவுவதால் சிறுவர்கள், பாட சாலை செல்லும் மாணவர்களுக் கும் ஒருவகையான கடி, சிரங்கு ஏற்பட்டுள்ளதையும் காணக் கூடியதாகவுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட அதிகமான சிறுவர்கள் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

# ஜெமீலுக்கு தூதுவர் நியமனம் பஷில், ஹக்கீமுக்கு நெல்சன் மண்டேலா விருது



அஸ்லம் எஸ்.மௌலானா

உலக சமாதான அமைப்பின் சர்வதேச மாநாடும் சமாதானத் தூதுவர்கள் நியமனமும் சமாதான விருது வழங்கும் வைபவமும் அவ் வமைப்பின் தலைவர் ஆபித் அலி ஆபித் தலைமையில் கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடை பெற்றது.

இதன்போது உலக சமாதான அமைப்பின் இலங்கைக்கான சமா தானத் தூதுவராக கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் சபையின் முஸ்லிம் காங்கிரஸ்குழு தலைவரு மான ஏ.எம்.ஜெமீல் உத்தியோக பூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார். அமைச்சர்களான பஷில் ராஜபக்ஷ மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோ ருக்கு நெல்சன் மண்டேலா சமா தான விருதும் வழங்கி கௌர விக்கப்பட்டது.

அத்துடன் உலகளாவிய ரீதியில் இன ஐக்கியத்திற்காகவும் சமா தானத்திற்காகவும் அரும்பணி யாற்றி வருகின்ற மூவின சமூ கத்தையும் சேர்ந்த அரசியல் தலை வர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதி நிதிகள் ஆறு பேர் இதன்போது விசேட சமாதான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அமைச் சர்களான ராஜித சேனாரட்ன, எஸ்.பி. திஸா நாயக்க, இலங்கை சமாதான பேரவையின் பணிப் பாளர் ஜொஹான் பெரேரா, தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் வேந்தர் ஜெஸீமா இஸ் மாயில், கொழும்பு பல்கலைக் கழக சட்ட பீட பீடாதிபதி வி.ரி. தமிழ்மாறன், ஜனநாயக பேரவை யின் பணிப்பாளர் புஞ்சிஹேவா ஆகியோரே இந்த ஆறு பிரதி நிதிகளுமாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேசம்

மலர் : 13 இதழ் : 08 ஏப்ரல் 20-30

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com


## மது அரசுகள் ஒழிக்கப்படுவதை விட்டுவிட்டு மாட்டிறைச்சிக்குப் பின்னால் ஓடுவது தீமையொழிப்பல்ல

புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் வரும்போது நாட்டின் விலைவாசி குறித்து விவாதிக்கப்படுவதுண்டு. நுகர்வோருடன் தொடர்புபட்டது என்பதால் புதுவருடச் செலவுகளில் விலைவாசி முக்கிய இடத்தை வகிக்கும் என்பதில் இரு வேறு கருத்துக்கள் இல்லை. சிங்கள, தமிழ் புத்தாண்டு முடிந்த கையோடு பேசப்பட வேண்டிய மற்றுமொரு முக்கிய விடயமுண்டு. அதுதான் புத்தாண்டு காலத்தில் ஏற்பட்ட விபத்துகளும் கொலைகளும்.

புதுவருட காலத்தில் ஏற்பட்ட விபத்துகள், கைகலப்புகள் மற்றும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 40 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். 10 ஆம் திகதி காலை ஆறு மணி முதல் 15 ஆம் திகதி காலை ஆறு மணி வரை 417 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் 30 விபத்துகள் மிகவும் அபாயகரமானவை என்றும் இக்காலப் பிரிவில் நடைபெற்ற சண்டை சச்சரவுகளில் மட்டும் 11 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்ற விடயமும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. புதுவருடக் கொண்டாட்ட தினங்களான 13, 14 ஆம் திகதிகளில் மட்டும் கொழும்பு, சுற்றுப்புறங்களில் விபத்துக்குள்ளான 354 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என அதன் பணிப்பாளர் டாக்டர் கபில விக்கிரம நாயக்க குறிப்பிட்டுள்ளார். இதுவரை அறியப்பட்டதன்படி, குடிபோதையில் வாகனம் ஓட்டியதால் மட்டும் புதுவருட காலத்தில் 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அதேபோல் 10, 14 ஆம் திகதிகளுக்கிடையில் குடிபோதையில் வாகனம் ஓட்டிய 877 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸில் பிடிபடாத அல்லது பிடிபட்டும் பல வழிகளில் நழுவிப் போனவர்களின் எண்ணிக்கை இந்த கணக்கில் அடங்காதது குறிப்பிடத்தக்கது.

மேற்படி வீதி விபத்துகள், அடிதடிச் சண்டைகள், கொலைகளில் செல்வாக்குச் செலுத்தியுள்ள ஒரு பொது விடயம் குடிபோதையாகும். தனிநபர் மதுபாவனையில் இலங்கை சர்வதேச ரீதியில் நான்காம் இடத்தை வகிக்கிறது. சில வருடங்களுக்கு முன்பு இலங்கைக்கிருந்த முதலாம் இடத்தை யாரோ தட்டிக்சென்று விட்டார்கள். பிரான்ஸ், ஜேர்மன், சீனா என்ற நாடுகள் முதல் மூன்று இடங்களையும் பெற்றுள்ளன. புதுவருட விபத்துகளுக்கும் இந்த நான்காம் இடத்துக்கும் தொடர்பு இருக்கிறதா, இல்லையா என்பதை விட இலங்கை பெருங் குடிகாரர்களைக் கொண்ட நாடு என்பது என்னவோ உண்மைதான். இதற்கு மத்தியில்தான் இறைச்சிக்காக மாடறுப்பது இலங்கையில் நடைபெறும் மிகப் பெரிய தீமையாகவும் அதனை ஒழிப்பது நம் தலையாய கடமையென்றும் பல சேனாக்கள் பேராடுகின்றன. ஐரோப்பிய நாடுகளில் மதுபானங்கள் அரச அங்கீகாரம் பெற்ற லேபல்களில் வரும் அதேவேளை, இலங்கையில் கசிப்பு பானங்கள் என்றும் தென்னங்கள். வடி சாராயம் என்றும் இன்று எத்தனை பெயர்களிலெல்லாம் வருகின்றன? கள்ளச்சாரத்தை கணக்கெடுக்கும் போது இலங்கையின் முதலாம் இடத்தை உலகின் எந்த நாட்டினாலும் தட்டிப்பறிக்க முடியாது என்பது உறுதியாகிவிடும்.

குடிபோதையில் மனிதன் செய்யும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, வாகனவிபத்து, சிறுவர் துஷ்பிரயோகம், குடும்பத்தகராறு, திருமண முறிவு போன்ற கொடுமையான தீமைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தல், மாட்டிறைச்சி சாப்பிட்டுவிட்டு யாராவது கொள்ளையடித்தல், கொலை செய்தல், கற்பழிப்புகளில் ஈடுபடுகின்றார்களா? சொந்த மனைவிக்கு அடி உதை, பெற்ற குழந்தைகளையே வல்லுறவுக்குட்படுத்துதல் போன்ற கொடுமைகள் இறைச்சி தின்பவர்களால் எப்போதாவது நடந்துள்ளதா? அப்படி நடந்திருந்தால் அது குடியோடு சம்பந்தப்பட்டதாகத்தான் இருந்திருக்கும்.

மதுவை தடைசெய்ய, மக்கள் மனங்களிலிருந்து மது அரசுகள் ஒழிக்கப் பாடுபடுவதை விட்டு விட்டு வெறித்தனமாக மாட்டிறைச்சிக்குப் பின்னால் ஓடுவது தீமை ஒழிப்பல்ல. நாட்டில் ஒழிக்கப்பட வேண்டிய முதற் தீமை மதுதான் என்பதற்கு இந்தப் புதுவருட புள்ளிவிபரம் ஒன்றே போதும். இவர்கள் என்னவோ மாடுகளைக் காப்பாற்றி விட்டால் எல்லாத் தீமைகளும் அகலும் என்று நினைக்கிறார்கள் போலும்.

## இஸ்ரேலை புறக்கணிக்க ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை



பலஸ்தீன் பகுதிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக குடியிருப்பு, கட்டுமான பணிகளை நடத்திவரும் இஸ்ரேலை புறக்கணிக்க வேண்டும் என்று ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சட்டவிரோத கட்டுமானப் பணிகளுக்கு உதவுவதும் அப்பகுதியில் செயல்படும் இஸ்ரேல் நிறுவனங்களுடன் வியாபாரம் நடத்துவதும் சர்வதேச சட்டங்களை மீறுவதற்கு சமமானது என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

சட்டவிரோத குடியிருப்பு மையங்களில் இயங்கும் இஸ்ரேலிய நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிப்பதை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே தடை செய்திருந்தது. பலஸ்தீன் மக்களை கொடுமைப்படுத்துவதை கண்டித்து இஸ்ரேல் கல்வி நிறுவனங்களை புறக்கணிக்க அமெரிக்க ஸ்டடீஸ் அசோசியேசனும் ஐரோப்பிய கல்வி நிறுவனங்களும் தீர்மானித்துள்ளன.






புலிப் பூச்சாண்டியை தொடரவிட்டால் எதிர்க்கட்சிகளுக்குக் கூட ஆபத்து

–சரத் பொன்சேகாவிடம் மனோ கணேசன்



அரசாங்கத்தின் கபட நாடகத்தினால் சிங்கள மக்கள் ஒருபோதும் ஏமாறமாட்டார்கள்.

–மனோ கணேசனுக்கு பொன்சேகா



சர்வதேச விசாரணையை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பிரதிநிதிகளால் மேற்கொள்ளப்படும் போது நாம் பூரண ஆதரவளிப்போம்.

–கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ்



அமெரிக்காவின் இறுதி இலக்கு மனித உரிமைகளோ, தமிழர் உரிமைகளோ இல்லை. அவர்களது உண்மையான இலக்கு இலங்கையில் இராணுவத்தளம் நிறுவுவதே.

–தாமரா மணிமேகலை குணநாயகம்



■ அஸ்ஸலாமு அலைக்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களே. பங்களாதேஷுக்கு செல்ல முடிந்த உங்களால் மன்னாருக்கு செல்ல முடியவில்லையா?

–பொறியியலாளர் அப்துர் ரஹ்மான்

வஅலைக்கு முஸ்ஸலாம். தம்பி, இது றோங் நம்பர்...



■ அமைதிச் சூழலிலேயே தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும்.

–அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

அமைதிச் சூழல் எப்போது வருமையா...?


**எங்கள் தேசம் சந்தா விபரம்**

உள்நாடு
தனிப்பிரதி: 30.00
வருட சந்தா: 1200.00
ஆறு மாதங்கள்: 600.00

வெளிநாடு
இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்:3600.00
மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00
அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00
இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam, தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.
Accont Name: SLJEI | Bank Account No: BOC: 372132 | Commercial Bank: 1320009182

தொடர்புகளுக்கு: 077 2992220


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனவாத தீயில் பற்றியெரியும் வில்பத்து காடு

-பஷீர் அலி

பட்ட காலிலேயே படும் என்பார்களே, அது இலங்கை முஸ்லிம் சமூகத்தின் விடயத்தில் உண்மையாகவே இருக்கிறது. புலிகளால் அடித்து விரட்டப்பட்டு இரண்டு தசாப்தங்களாக அகதிமுகாம் களில் அலைந்து திரிந்து சொந்த ஊர் திரும் பும் வடக்கு முஸ்லிம்களை மாடேறி மிதிக்க ஆரம்பித்திருக்கிறது.

ஹலாலில் கை வைத்து பள்ளிவாசல் களுக்கு கல்வீசிய மஞ்சளாடைகள் இப் போது வடக்கையும் தன் கோர நகங்களால் கீறிப் பார்க்க புறப்பட்டிருக்கின்றன.

1990 இல் புலிகளால் பலவந்தமாக விரட்டியடிக்கப்பட்டு நாடுபூராகவும் அகதி களாய் அலைக்கழித்து மீள்குடியேறச் சென்றுள்ள மன்னார் மறிச்சுக்கட்டி முஸ் லிம்கள் இந்த தீவிரவாதிகளின் பார்வையில் ஆக்கிரமிப்பாளர்களாம்.

வடமாகாணம், மன்னார் மாவட்டத்தின் தென்மேற்கில் அமைந்திருக்கும் முசலி பிர தேசத்திலுள்ள 20 கிராம சேவையாளர் பிரிவு களில் ஒன்றே மறிச்சுக்கட்டி கிராமமாகும்.

1990 ஆம் ஆண்டு புலிகளால் விரட்டி யடிக்கப்படும் போது இங்கு 180 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக புத்தளம் உட்பட வெளி ஊர்களில் வாழ்ந்த இக்குடும் பங்கள், தற்போது 600 வரை அதிகரித்தி ருக்கின்றன.

தற்போதைய சமாதான சூழ்நிலையை அடுத்து அவர்கள் தமது பூர்வீக கிராமத்தில் குடியேறச் சென்றனர். அவர்களுக்கு உதவும் வகையில் மன்னார் மாவட்டத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் அமைச்சர் றிஷாட் பதியுதீன் மீள்குடியேற்றத்துக்கான ஏற்பாடு களை செய்துகொடுத்தார்.

அங்கு சென்று பார்த்தபோது தாம் வாழ்ந்த கிராமத்தின் 700 ஏக்கர் குடியிருப் புக் காணிகளும் மையவாடியும் முள்ளிக் குளக் கிராமத்திலுள்ள பல ஏக்கர் காணி களும் அரசாங்கத்தினால் கடற் படையின ருக்காக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தன. மீதியுள்ள காணிகளும் காடுமண்டிக் காணப் பட்டன. முறைப்படியான அரச அங்கீ காரத்துடன் அக்காணிகள் துப்பரவு செய் யப்பட்டு தற்காலிக குடியிருப்புகளும் அமைக்கப்பட்டன.

இதனை அவதானித்த பொதுபல சேனா வில்பத்து சரணாலயம் முஸ்லிம்களால் அழிக்கப்படுவதாகவும் அங்கு திட்டமிட்ட முஸ்லிம் வலயம் ஒன்று உருவாக்கப்படுவ தாகவும் அதற்கு றிஷாட் பதியுதீன் உடந் தையாக இருப்பதாகவும் பொய்யைக் கட்டவிழ்த்து விட்டன.

வெளி மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்பட்டு முஸ்லிம்கள் குடியேற்றப்படுவ தாகவும் அபாண்டம் சுமத்தினர்.

இதே வசனங்களை அச்சொட்டாகக் கொண்ட அவதூறினை சில மாதங்களுக்கு முன்னர் முல்லைத்தீவில் மீள்குடியேறச் சென்ற முஸ்லிம்களுக்கும் அமைச்சர் றிஷாட் பதியுதீனினுக்கும் எதிராக தமிழ் தரப்பினர் பிரயோகித்திருந்தனர். எனவே, முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை விரும் பாத தீய சக்திகள் இதனை திட்டமிட்டு காய் நகர்த்துவதாகவே சொல்ல வேண்டியுள்ளது.

பிறந்த மண்ணைத் துறந்து அகதிகளாகி, 24 வருடங்களாக வெளிமாவட்டங்களில் வாழும் இளைஞர், யுவதிகளுக்கு வெளி மாவட்ட பதிவுகளிலான அடையாள அட் டைகளே இருக்கும். இதனை வைத்துக் கொண்டு வெளிமாவட்டத்தை சேர்ந்தவர் களைக் கொண்டு சென்று குடியேற்றிய தாக பொய்ப் பிரசாரம் செய்வதன் நோக் கந்தான் என்னவென்று புரியவில்லை.

முஸ்லிம்கள் காடுகளை அழித்து குடியி ருப்புகளை அமைப்பதாகவும் இது இயற்கை வளங்களை அழிக்கும் நாசகார வேலையென்றும் பொய்யான கோஷங் களை முன்வைத்து, சிங்கள பௌத்தர் களையும் தமிழர்களையும் முஸ்லிம்களுக்கு எதிராக திசைதிருப்பும் இனவாதிகள் சிங்கள, தமிழ் மக்களின் மீள்குடியேற்றத்திற்கு காடுகள் அழிக்கப்படுவதை ஏனோ வசதி யாக மறந்துவிட்டனரா? அல்லது வேண்டு மென்றே மறைத்துவிட்டனரா?

வவுனியா இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கவென பல நூறு ஏக்கர் காணிகள் அழிக்கப்பட்ட போதும் வில்பத்து வன பிர தேசத்தில் 5000 ஏக்கர் காடுகளை அழித்து கொண்டச்சி கஜு பாம் உருவாக்கப்பட்ட போதும் இயற்கை வளத்துக்காக முதலைக் கண்ணீர்விடும் இந்த இனவாதிகள் எங்கு சென்றிருந்தனர்?

மறிச்சுக்கட்டி கிராமத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தே

➡ 16

# பாராளுமன்ற பகிஷ்கரிப்பும் பம்மாத்துக் காட்டுதலும்



-பஷீர் அலி

தோரணம் கட்டப்பட்டு கல் யாணவீடே அமர்க்களமாய் இருக்கிறது. அந்த கல்யாணத் தால் ஊருக்கே மகிழ்ச்சி. திரு மணம் கைகூடாமல் நீண்டகாலம் முதிர் கன்னியாய்க் கிடந்த அந்த மணப் பெண்ணை பார்த்து ஊரே இழக்காரமாய் சிரித்துக் கொண்டதற்கு இன்றுடன் முற் றுப்புள்ளி. ஊர் முழுக்க அந்தத் திருமணம் பற்றித்தான் பேச்சு. ஆனால், கடைசி நேரத்தில் மாப்பிள்ளை கேட்டானாம் யாருக்கு கல்யாணம்? யார் சொன்ன கட்டுக்கதை இது? இப்படி ஒரு கல்யாணப் பேச்சே நடக்கவில்லையே. இது திட்ட மிட்ட அபாண்டம்...

இப்போது அந்த கல்யாண வீட்டின் நிலையை கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இலங்கை முஸ்லிம்களின் தற்போதைய நிலையும் இந்த பெண் வீட் டாரின் நிலைதான்.

பொதுபல சேனா உட்பட சில தீவிரவாத அமைப்புகள் அண்மைக்காலமாக முஸ்லிம் களுக்கு எதிராக மேற்கொண்டு வரும் இனவாத நடவடிக்கைகளுக்கு அளவே இல்லை. போகிற போக் கில் இன்னுமொரு ரோஹிங்கியா வாக இலங்கை மாறிடுமோ என்று அச்சப்படுமளவு அவர்களின் நட வடிக்கை காணப்படுகிறது.

இதன்போதெல்லாம் நமது முஸ் லிம் அரசியல் கட்சிகளும் அரசியல் வாதிகளும் சொல்லும்படியாக எதனையும் உருப்படியாக செய்ய வில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது. குறிப்பாக, அரசாங்கம் சார்ந்த முஸ்லிம் கட்சிகளும் அரசி யல்வாதிகளும் பெரும்பாலும் மௌனமாகவே இருந்து வந்துள்ள னர். பேருக்கு அவ்வப்போது விடும் ஓரிரு அறிக்கைகளுக்கு மேலால் அவர்களால் எதையுமே செய்யமுடி யாது போனது.

முஸ்லிம் அரசியல் தலைவர் களின் இந்த கையாளாகாத்தனமும் ஒருவேளை, இனவாதிகளுக்கு உற் சாகத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

இதனால் அந்த இனவாதிகள் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத நடவடிக்கைகளை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்ற னர். அதன் உச்சகட்டமாக, இரண்டு தசாப்த அகதி வாழ்க்கையை அனுப வித்த வடபுல முஸ்லிம்கள் மீள் குடியேறச் சென்றபோது அதனை இனவாத, ஆக்கிரமிப்பு சாயம் பூசி விரட்டியடிக்க அனைத்து முயற்சிகளையும் செய்து வருகின்ற னர்.

இந்நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் முஸ்லிம்கள் பக்க நியாயத்தை தெரிவிக்கவும் என அண்மையில் கொழும்பு நிபோன் ஹோட்டலில் ஜாதிக பலசேனா என்ற அமைப்பு ஏற்பாடு செய்தி ருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் புகுந்த பொதுபல சேனா அதனைக் குழப்பியதுடன் ஏற்பாட்டுக்குழு வில் இருந்த பௌத்த பிக்கு களையும் மௌலவிமார்களையும் தகாத வார்த்தைகளால் திட்டி விரட்டியடித்தனர். மிகப் பெரிய மனித உரிமை மீறலான இச்செயற் பாட்டை எதிர்த்து பல அமைப்பு களும் கண்டனம் தெரிவித்தி ருந்தன. இது குறித்து கொம்பனித் தெரு பொலிஸில் முறைப்பாடு கூட செய்யப்பட்டிருந்தது. முஸ் லிம் சிவில் அமைப்புகள் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புச் செயலாளர் உட்பட உயர்மட்டங்களுக்கு இது குறித்து முறைப்பாடுகளைத் தெரி வித்திருந்தன. ஆனால், இதுவரை நாசகார வேலையில் ஈடுபட்ட பொதுபல சேனாவில் இருந்து எவரும் கைது செய்யப்படவில்லை.

இத்தருணத்திலேயே இவ்விட யத்தை உரிய தரப்பின் கவனத்துக்கு கொண்டுவரவும் பொதுபல சேனா வின் அடாவடித்தனங்களை சர்வ தேசத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டவும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மாதகாலம் பாராளுமன்ற பகிஷ் கரிப்பில் ஈடுபட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இதனை அமைச்சர் றிஷாட் பதியு தீன் உட்பட முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் சில முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் உறுதிப்படுத்தி னர். இது குறித்த செய்திகள் ஊடகங் களில் பிரபலமாக பேசப்பட்டன.

இதனைக் கேள்வியுற்ற முஸ்லிம் கள் மகிழ்ச்சியடைந்தனர். முது கெலும்புள்ள முஸ்லிம் அரசியல் வாதிகள் என அவர்களை மெச்சி னர். எப்போது பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்கப் போகிறார்கள் என்று ஆவலுடன் எதிர்பார்த்தனர். இது வரை காலமும் பொதுபல சேனாவின் அடாவடித்தனங்களை பார்த்து மௌனம் காத்துக்கொண்டிருந்த முஸ்லிம் தலைவர்களின் இந்த அதி ரடி நடவடிக்கையை பெருமை யுடன் பேசிக்கொண்டனர்.

ஆனால், தற்போது இவ்விவகாரம் நான் ஆரம்பத்தில் சொன்ன முதிர் கன்னியின் குழம்பிப்போன கல் யாணமாகத்தான் ஆகிப்போயிருக் கிறது.

பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எச்.எம். அஸ்வர் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்று ஆச்சரியமாக இருக்கிறது.

இந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களெல்லாம் நமக்கு படம் காட்டுகிறார்களா? என்று எண்ண வைத்திருக்கிறது.

➡ 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வதேச பாடசாலைகள் வேண்டுமா? வேண்டாமா?

அஷ்ஷெய்க் எம்.யூ. மதனி உவைஸ் (இஸ்லாஹி)

சர்வதேச பாடசாலைகள் பற்றி சமூகத்தில் பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றன. சிலர் சர்வதேச பாடசாலைகளை முழுமையாக எதிர்க்கின்ற நிலையில் மற்றும் சிலர் அவற்றை வரவேற்கின்றனர். இன்னும் சிலர் சர்வதேச பாடசாலைகள் நமது மார்க்க, ஒழுக்க விழுமியங்களுக்கு பாரிய சவாலாக இருப்பதாக விசனப்படுகின்றனர்.

மறுபக்கம், தமது பிள்ளைகளை அரச பாடசாலைகளுக்கு அனுப்புவதா அல்லது சர்வதேச பாடசாலைகளுக்கு அனுப்புவதா? இவற்றில் எது சிறந்தது? எனத் தடுமாறும் பெற்றோர் நகர்ப்புறங்களில் மட்டுமன்றி, கிராமப்புறங்களிலும் இருக்கின்றனர்.

இத்தகையு சூழ்நிலையில் சர்வதேச பாடசாலைகள் பற்றிய ஆய்வுக்கும் கலந்துரையாடலுக்குமான முற்குறிப்பொன்றை வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### தோற்றம்

இலங்கையில் 1980 களில் திறந்த பொருளாதாரச் சிந்தனையுடன்தான் சர்வதேச பாடசாலைகள் தோற்றம் பெற்றன. ஆரம்பத்தில் தலைநகரை மையமாகக் கொண்டு ஓரிரு பாடசாலைகளே இருந்தன. அப்போது இப்பாடசாலைகள் வெளிநாட்டு தூதுவர்களாகவும் வேறு அரச மற்றும் தனியார் தொழில் நிமித்தம் இலங்கையில் வசித்த வெளிநாட்டவரின் பிள்ளைகளுக்காகவே உருவாக்கப்பட்டன. பின்னர் வசதி படைத்த நம் நாட்டவரும் இப்பாடசாலைகளுக்கு தமது பிள்ளைகளை அனுப்பலாயினர். 1990 களின் இறுதிப்பகுதியில் தலைநகரில் மட்டுமன்றி, புற நகரங்களிலும் சர்வதேச பாடசாலைகள் தோற்றம் பெறலாயின.

இவற்றுள் முஸ்லிம் வர்த்தகர்களும் முஸ்லிம்களை இலக்காகக் கொண்டு இஸ்லாமிய சர்வதேச பாடசாலைகளை ஆரம்பித்தனர். இவற்றில் அநேகமானவை வியாபார நோக்கம் கருதி ஆரம்பிக்கப்பட்டாலும், ஒரு சில பாடசாலைகள் சமூக நோக்கம் கருதியும் உருவாகின. இதனால் வசதிபடைத்தவர்கள் மட்டுமே தமது பிள்ளைகளை ஆங்கில மொழிமூலம் கற்பிக்கலாம் என்றிருந்த நிலை மாறி, சாதாரணதர வர்க்கத்தினராலும் தமது பிள்ளைகளை ஆங்கில மொழிமூலம் கற்பிக்கலாம் என்ற நிலை உருவானது. அவை சாதாரணதர வர்க்கத்தினராலும் தாங்கிச் செலுத்தக்கூடிய மாதாந்த கட்டணங்களை அறவிட்டமையே இதற்குரிய காரணமாகும்.

இன்று சுமார் 100 இற்கும் மேற்பட்ட சர்வதேச பாடசாலைகள் உள்நாட்டில் இயங்கி வருகின்றன. இப்பாடசாலைகளில் சுமார் ஓர் இலட்சம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். சர்வதேச பாடசாலைகள் பற்றிய துல்லியமான தரவுகளை பெறுவது அசாத்தியமானது. ஏனெனில், சர்வதேச பாடசாலைகள் பற்றிய முறையான எந்தவோர் ஆய்வும் இதுவரை அரசினாலோ, தனியார் துறையினராலோ மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. அத்தோடு சர்வதேச பாடசாலைகள் தனியார் கம்பனிகளாகவே இன்றுவரை பதிவு செய்யப்பட்டுகின்றன. இதனால், எவருக்கும் எந்நேரமும் ஒரு பாடசாலையை ஆரம்பித்து விடலாம் என்ற நிலைமையே நிலவி வருகிறது. இன்று நகர்ப்புறங்களில் வியாபார வாய்ப்புத் தேடும் பலர் இறுதியில் ஒரு சர்வதேச பாடசாலையை ஆரம்பிக்கும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது. இதனால், பல பாடசாலைகள் தரமற்றதாக காணப்படுகின்றன. எனினும், தரமான பாடசாலைகளும் இருக்கவே செய்கின்றன.

### சர்வதேச பாடசாலைகளின் வகைகள்

சர்வதேச பாடசாலைகளை கல்வி மற்றும் அவை கொண்டுள்ள வளங்களுக்கேற்ப மூன்று வகையாகப் பிரிக்கலாம்:

1. முதலாம் நிலை சர்வதேச பாடசாலைகள்
2. இரண்டாம் நிலை சர்வதேச பாடசாலைகள்
3. மூன்றாம் நிலை சர்வதேச பாடசாலைகள்

### முதலாம் நிலை சர்வதேச பாடசாலைகள்

அதிக கட்டணங்களை அறவிட்டு தேவையான சகல வசதிகளையும் மாணவர்களுக்கு வழங்கும் பிரபல பாடசாலைகளாகும். இவை தமது கல்வித்தரத்தை முறையாகப் பேணி வருகின்றன. இங்கு கற்பிக்கின்ற ஆசிரியர்கள் பட்டதாரிகளாகவோ அல்லது பயிற்றப்பட்ட அனுபவம் வாய்ந்தவர்களாகவோ இருக்கின்றனர்.

### இரண்டாம் நிலை சர்வதேச பாடசாலைகள்

பெரிய வசதிகளைக் கொண்டிராத போதும் ஒரு பாடசாலைக்கு தேவையான அத்தியவசிய வளங்களைக் கொண்டதாக (உதாரணம்: வாசிகசாலை, கணினி நிலையம், விஞ்ஞான ஆய்வுகூடம், மைதானம், கேட்போர் மண்டபம் போன்ற வசதிகள்) இருக்கின்றன. இங்கும் தரமான ஆசிரியர்களே கற்பிக்கின்றனர். இவற்றின் கல்வித் தரம் மத்திமமான நிலையில் பேணப்படுகிறது.

### மூன்றாம் நிலை பாடசாலைகள்

இவை அடிப்படை வசதிகள்கூட இல்லாத பாடசாலைகளாகும். இவை மிகக் குறைந்த கட்டணங்களை அறவிடுவதால் சமூகத்தின் கீழ்மட்டத்திலுள்ள குடும்பங்களின் பிள்ளைகள் இங்கு அதிகம் கற்கின்றனர். இதனால், ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றில் பெரும் வீழ்ச்சி காணப்படுகின்றது. இப்பாடசாலைகளில் ஆண் பிள்ளைகளை விட பெண் பிள்ளைகள் தரமான பெறுபேறுகளைப் பெறுகின்றனர். ஒரு சில பாடசாலைகள் குறைந்த வளங்களுடன் இயங்கினாலும் கல்வித்தரத்தை இயன்றளவு பேணி வருவதையும் அவதானிக்க முடிகிறது. எனினும், தகைமையற்றவர்களை ஆசிரியர்களாக இணைத்துக் கொள்வதாக சிலரால் முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டு இவ்வகைப் பாடசாலைகளையே சாரும்.

### பாடவிதானம்

"சர்வதேச பாடசாலைகள்" என அழைக்கப்படுவதற்கு சர்வதேச அங்கீகாரம் உடைய IB Diploma, Edexal O/L, Advance Sub sidiary (A/S), Advance Level + (A2), Cambridge போன்ற பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றமையே காரணமாகும். எனினும், தற்போது அநேக பாடசாலைகள் National Curriculum அல்லது Local Syllabus என பொதுவாக அழைக்கப்படுகின்ற உள்நாட்டு பாடத்திட்டத்தையே செயற்படுத்துகின்றன. ஏனெனில், சர்வதேச பாடத்திட்டத்தோடு ஒப்பிடுகையில் இதற்குரிய செலவு குறைவானதாகும். இப்பாடத்திட்டம் மூலம் மேலும், இலங்கையிலேயே பல்கலைக்கழகம் வரை உயர் கல்வியைத் தொடர முடிவதோடு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலும் இப்பாடத்திட்டம் அங்கீகாரம் பெற்றிருப்பதால் வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்பும் சாத்தியமாகின்றது. ஆனால், சர்வதேச பாடத்திட்டம் எமது நாட்டுப் பல்கலைக்கழகங்களில் அங்கீகாரம் பெறாத காரணத்தினால் சர்வதேச பாடத்திட்டத்தைக் கற்றவர்கள் பெரும்பாலும் உயர் கல்விக்காக வெளிநாடுகளில் உள்ள கல்வி நிலையங்களையே நாடவேண்டியுள்ளது. தவிரவும் சர்வதேச பாடத்திட்டத்திற்குரிய நூல்கள் மற்றும் பரீட்சைக் கட்டணங்களின் தொகை அதிகமானதாகும்.

### சர்வதேச பாடசாலை பற்றிய அரசின் கொள்கை என்ன?

உண்மையில் சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் அரசாங்கம் பராமுகமாக இருப்பதாக அதனை ஆதரிப்போரும் எதிர்ப்போரும் குற்றம் சுமத்துகின்றனர். சர்வதேச பாடசாலை முறையை எதிர்ப்பவர்கள், கல்வித்துறை பற்றிய எவ்வித அறிவும் அனுபவமும் இல்லாதவர்கள் தாம் நினைத்தவாறெல்லாம் பாடசாலைகளை ஆரம்பிப்பதாகவும் சர்வதேச பாடசாலைகளின் தரம், ஆசிரியர்களின் தகைமைகள், பாடத்திட்டம் மற்றும் அவை கொண்டுள்ள வசதிகள், அவை பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் சம்மந்தமாக எவ்வித கட்டுப்பாடுகளையோ, சட்ட திட்டங்களையோ கல்வியமைச்சு விதிக்காமல், அவற்றைக் கண்காணிக்காமல் அரசாங்கம் செயற்படுவதாக குற்றம் சுமத்துகின்றனர்.

51 சர்வதேச பாடசாலைகள் அங்கம் வகிக்கும் சர்வதேச பாடசாலைகளுக்கான கூட்டமைப்பு International School Association, நீண்டகாலமாக இலங்கையின் கல்வித்துறைக்கு கணிசமான பங்காற்றும் சர்வதேச பாடசாலைகளை அரசாங்கம் கண்டுகொள்ள இல்லையென்றும் அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு பதிலாக அவற்றிடமிருந்து VAT மற்றும் NBT போன்ற வரிகளை அறவிடுவதாகவும் விமர்சிக்கிறது. மட்டுமன்றி, சர்வதேசப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் தனியார் பரீட்சார்த்திகளாகவே சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதாகவும் அங்கு சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு அரசு எவ்வித பயிற்சிகளையும் இதுவரை வழங்கியதில்லையென்றும் கலாநிதி பட்டம் பெற்ற அதன் அதிபர்களது உறுதிப்படுத்தல்கள் கூட சாதாரண கிராம உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலின் பின்னரே அங்கீகாரம் பெறுவதாகவும் அரசுக்கு எதிராக விமர்சனப் பட்டியலையே முன்வைத்து வருகின்றது.

1997ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட ISA கூட்டமைப்பு சர்வதேச பாடசாலைகளுக்கிடையே மாணவர்களின் விருத்தி கருதி குறிப்பிடத்தக்க பல போட்டிகளையும் பரீட்சைகளையும் நடத்தி வருகின்றது. அவ்வாறே The International School of Sri lanka என்ற அமைப்பும் 23 சர்வதேச பாடசாலைகளை இணைத்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய விமர்சனங்கள் பரவலாக முன்வைக்கப்பட்டாதையடுத்து கல்வியமைச்சு கடந்த 2013 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் சர்வதேச பாடசாலைகள் உடனடியாக சிங்களம், தமிழ், சமயம் மற்றும் இலங்கை வரலாறு போன்ற பாடங்களை கட்டாய பாடமாக கற்பிக்கவேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தது. அதன் பின்னர் தற்போதைய கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன அவர்கள் சர்வதேச பாடசாலைகள் கல்வியமைச்சின் கீழ் பதியப்பட்டு அமைச்சின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கவேண்டும் என்பதோடு இதன் பிறகு அவை கம்பனிகளாக பதியப்படுவதும் தடைசெய்யப்பட வேண்டும் என்ற ஒரு மசோதாவை பாராளுமன்றத்தில் கொண்டுவந்தார். அது அமைச்சரவையின் பூரண அங்கீகாரத்தையும் பெற்றது.

### அரச பாடசாலைகளின் பெறுமதி என்ன?

இலங்கையில் அரச பாடசாலைகள் மூலம் மாணவர்களுக்குக் கிடைக்கும் கல்வி, ஆளுமை விருத்தி, கட்டுப்பாடுகள் மற்றும் ஏனைய வழிகாட்டல்கள் என்பன சர்வதேச பாடசாலைகளை விட சிறப்பானது.

அரச பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் ஒன்றில் பட்டதாரிகள் அல்லது பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களாவர். இவர்களின் கற்பித்தல் முறையும் வழிகாட்டல்களும் சர்வதேச பாடசாலைகளில் கிடைக்குமா என்பது கேள்விக்குறியே.

பிள்ளைகளின் வயதுக்கேற்ற கல்வியும் எதிர்கால தொழில்வாய்ப்புகளுக்கு ஏற்ற பாடக் கொள்கைகளும் அரச பாடசாலைகளிலேயே வழங்கப்படுகின்றன.

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பார்வை



எம்.எச்.எம். ஹஸன்

# சீப்பை மறைத்துவிட்டால் ஒருபோதும் திருமணம் நின்றுவிடப் போவதில்லை



ஜெனீவாவிலும் மாகாணசபைத் தேர்தல்களிலும் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என்ற கருத்து இப்போது பலராலும் முன்வைக்கப்படுகிறது. மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் பற்றிய விமர்சனம் விவாதத்துக்கிடமானது என்றாலும் ஜெனீவாவில் இலங்கைக்கு ஏற்பட்ட தோல்வி திட்டவட்டமானது. ஜெனீவா தேர்தலில் ஆதரவாக, எதிராக அளிக்கப்பட்ட வாக்குகள் மட்டுமே கணக்கில் எடுக்கப்படுவதேயன்றி, அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கூறுவதுபோன்று வாக்களிப்பில் கலந்து கொள்ளாத நாடுகளின் நிலைப்பாடு வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதில் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இதனடிப்படையில் 23:12 என்பது தெளிவான தோல்வி என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்.

இதன் பெறுபேறாக இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்யும் உரிமை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவைக்கு சட்டப்படி கிடைத்துள்ளது. இது நீதிமன்றத்தில் சாட்சிக்கூண்டில் நடைபெறும் ஒரு விசாரணையன்று. மாறாக, மனித உரிமைப் பேரவை இலங்கை பற்றி ஓர் அறிக்கையைத் தயார் செய்வதாகும். 2011 இலும் இப்படியோர் அறிக்கை தாருஸ்மான் தலைமையில் தயாரிக்கப்பட்டது. ஆனால், அத்தகைய ஓர் அறிக்கை தயாரிக்கும்படி ஐ.நா. வின் எந்த நிறுவனமும் செயலாளர் நாயகம் பங்கீ மூனைக் கேட்டிருக்கவில்லை என்பதால் அது உத்தியோகபூர்வ ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்பட இல்லை. ஆனால், இம்முறை தயாரிக்கப்படும் அறிக்கை ஐ.நா. வின் உத்தியோகபூர்வ அறிக்கையாக ஏற்றுக்கொள்ளப்படும் தகுதியைக் கொண்டதாக அமையும் என்பது தெளிவு.

எவ்வாறாயினும் இந்த விசாரணை இப்போது இலங்கைக்கு பெரும் தலையிடியாக மாறியுள்ளது. இந்த விசாரணைக்கு இலங்கை அரசோ, நிறுவனங்களோ, தனிமனிதர்களோ எந்த உதவியும் ஒத்துழைப்பும் வழங்கக்கூடாது என்ற பலமான கருத்து நிலவும் அதேவேளை, விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கி உண்மையை அறிய முயற்சிக்க வேண்டும் என்ற கருத்தும் யதார்த்தத்துக்கு முகங்கொடுக்க வேண்டும் என்ற கருத்தும் பலமானதாகவே உள்ளன. சர்வதேச விசாரணை உத்தியோகத்தர்களுக்கு வீசா வழங்காதுவிடும் இறைமை அதிகாரம் இலங்கையிடமுண்டு. ஆனால் இலங்கையும் அங்கம் வகிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகத்தர்களை தடைசெய்வது எத்தகைய விளைவுகளைஏற்படுத்தும்என்பதையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது.

2009 இல் யுத்தம் முடிந்தவுடன் ஐ.நா. செயலாளர் பாங் கீ மூன் இலங்கைக்கு வந்து இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து ஓர் அறிக்கை வெளியிட்டது ஞாபகத்தில் இருக்கலாம். அதிகாரப் பரவலாக்கம், உரிமை மீறலுக்கான விசாரணை, துரித மீள்குடியேற்றம் என்பனவே அதன் உள்ளடக்கமாக இருந்தன. இன்று ஐந்து வருடங்களாகியும் இந்த விடயங்களில், குறிப்பாக மனித உரிமை மீறல் விசாரணைகளில், திருப்தியளிக்கும் அளவு முன்னேற்றம் இல்லை என்பதுதான் இம்முறை பிரேரணையின் சுருக்கமாகவுள்ளது. 2012, 2013 ஆம் ஆண்டுகளில் மனித உரிமைப் பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தின்படியோ, பாங் கீ மூன் நியமித்த மர்சூக்கி தாருஸ்மான் அறிக்கையின்படியோ, இலங்கை ஜனாதிபதி தானே நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும்நல்லிணக்கஆணைக்குழுவின்சிபாரிசுகளின்படியோ இலங்கை நேர்மையாகச் செயலாற்றவில்லை என்பது 2014 இன் பிரேரணைக்கானஅடிப்படையாகஅமைந்தது.

மனித உரிமைகள் விசாரணையாளர்களைத் தடுத்தும் சாட்சிசொல்ல இருப்பவர்களை தேசத் துரோகம் குற்றஞ்சாட்டியும் உள்நாட்டில் கருமமாற்ற சுயாதீன இலங்கை அரசால் முடியும் என்பதில் கருத்து வேறுபாடில்லை. சீப்பை மறைத்து வைத்துவிட்டால் திருமணமே நின்று விடும் என்று யோசிப்பது அறிவுடைமையாகாது. ஏற்கனவே பல விசாரணைகள் நடைபெற்றுள்ளன. நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயத்தின் போது கிடைத்த தகவல்கள், தாருஸ்மான் விசாரணை அறிக்கையின் உள்ளடக்கம், சனல் 4 ஆவணப்படங்களின் காட்சிகள், அவ்வப்போது இலங்கை வந்த மற்றும் இலங்கையில் தூதுவர்களாகக் கடமையாற்றியவர்களின் அறிக்கைகள், இலங்கை ஜனாதிபதியே நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் அரசியல் கட்சிகள் வழங்கியதாக கூறப்படும் அறிக்கைகள், மனித உரிமை ஆர்வலர்களும் ஊடகவியலாளர்களும் வழங்கிய தகவல்கள், உலகம் பூராகவுமுள்ள தமிழ் டயஸ்போரா சேர்த்து வைத்துள்ள ஆவணங்கள் என்று இந்த விசாரணையை நடத்தத் தேவையான எல்லா தகவல்களும் ஏலவே கிடைத்துள்ள நிலையில், வீசா பெற்று இலங்கைக்குள் வந்துதான் விசாரிக்க வேண்டுமா என்ன? உலகில் இதுபோன்று வெளியில் இருந்து கொண்டே விசாரித்துத் தீர்ப்பு வழங்கிய எத்தனையோ சந்தர்ப்பங்களுண்டு. இலங்கைக்கு அவர்கள் வருவதில் உள்ள அனுகூலம் இலங்கை தமது பக்க நியாயங்களையும் எடுத்துக்கூற சந்தர்ப்பம் கிடைப்பதுதான். அவ்வாறின்றி ஒரு தலைப்பட்சமாக விசாரித்தால் பாதிக்கப் படப்போவது இலங்கை ஒன்றுதான்.

விசாரணைகள் முடிந்து இலங்கைக்கு எதிராக தண்டனை அல்லது நடவடிக்கை எடுக்க மனித உரிமைப் பேரவையால் முடியாது என்பது உண்மை. அதற்காக ஐ.நா. பாதுகாப்பு சபையின் அனுமதி பெறப்பட வேண்டும். சீனாவும் ரஷ்யாவும் இலங்கையின் பக்கம் இருப்பதால் அப்படியொரு பிரேரணை ஒருபோதும் பாதுகாப்புச் சபையில் நிறைவேற வாய்ப்பில்லை என்பது இலங்கையின் மெத்தனப் போக்குக்கும் ஒரு காரணம் என்பது பலரும் சுட்டிக்காட்டும் விடயம். மிகப் பெரிய வல்லரசு நாடான ரஷ்யாவே கிரிமியா ஆக்கிரமிப்பு விடயத்தில் பொருளாதார தடைகளை எதிர்நோக்கும் ஆபத்து வந்தபோது வீராப்புகளை விட்டுவிட்டு அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைக்குப் போனதை நாம் அண்மையில் கண்டோம். ஈரான் எவ்வாறு அடம்பிடித்த போதும் அணுசக்தி செறிவூட்டல் விடயத்தில் சர்வதேசத்துடன் இணங்கிப்போக வேண்டியேற்பட்டது. சூடான், பர்மா போன்ற நாடுகளின் அனுபவங்களும் இதனையொத்ததே. கிரிமியா விடயத்தில் தானே மாட்டிக்கொண்டுள்ள நிலையில் எத்தகைய தீர்மானத்துக்கு வரும் என்பது இப்போதே எதிர்வுகூற முடியாது.

இலங்கையின் ஏற்றுமதிகளில் 60% ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்கே செல்லும் நிலை, உல்லாசப் பிரயாணத் தொழில் மற்றும் பல முக்கிய இறக்குமதிகள் முற்றிலும் அவர்களுடன் தொடர்புபட்டவை. அமெரிக்கா, கனடா உட்பட்ட இலங்கைக்கு எதிராக பிரேரணைக்கு ஆதரவளித்த 23 நாளில் 13 நாடுகளில் பொருளாதார முன்னேற்றமடைந்த மேலை நாடுகள், பாதுகாப்புச் சபை தீர்மானம் எடுக்காவிட்டாலும் இந்த 13 நாடுகளும் தனித்தனியே அல்லது நேட்டோ அமைப்பூடாக இலங்கைக்கு எதிராக எடுக்கும் தீர்மானங்கள் இலங்கையை மிக மோசமாகப் பாதிப்பதாக அமையும் என்பதில் இரு கருத்துகள் இல்லை. ஆடை இறக்குமதியில் ஐரோப்பா காட்டிய சலுகை இரத்து செய்யப்பட்டமையால் மட்டும் இலங்கையில் ஒரு லட்சம் பேர் வேலை இழந்துள்ளனர் என்று புள்ளிவிபரங்கள் கூறும்போது எதிர்கால விளைவின் அளவை நாமே கணித்துக்கொள்ள முடியும். இலங்கை தலைமை வகிப்பு காரணமாக பொதுநலவாய அமைப்புக்கு வழங்கும் ஒன்பது மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க கனடா மறுத்தது, இதன் ஆரம்பமாக இருக்கலாம்.

விசாரணையின் முடிவில் குற்றவாளிகள் எனக் கருதப்படுபவர்கள் விடயத்தில் சர்வதேசப் போக்குவரத்துகளில் தடைகள் வரலாம். அவர்களது பேரிலிருக்கும் வெளிநாட்டு வங்கிக் கணக்குகள் முடக்கப்படலாம். விசாரணை முடிவில் இருபது, முப்பது பேர் தண்டனை பெறும் நிலைகூட வரலாம். அல்லது குற்றமில்லை என்று நிரூபிக்கப்படலாம். அதற்காக முழு நாட்டையும் பணயம் வைத்து விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்காதிருப்பது இலங்கை மீதான மற்றுமொரு குற்றமாகவே கருதப்படவும் முடியும். தொடர்ந்து பல வருடங்கள் மனித உரிமைப் பேரவையில் கெடுபிடிகளுக்குள் வாழ்வது சுதந்திர இலங்கைக்குள்ள உண்மையான பிரச்சினை என்றும் உரிய நியாயங்கள் வழங்கப்படும் வரை இந்தப் பொறியிலிருந்து விடுபட முடியாதிருக்கும் என்றும் அமைச்சர் வாசுதேச நாணயக்கார கூறியிருப்பது ஈண்டு கவனிக்கத்தக்கவை.


Channel 4 News

**வீசா பெற்று இலங்கைக்குள் வந்துதான் விசாரிக்க வேண்டுமா என்ன?**

- நவிப்பிள்ளையின் அறிக்கை
- தாருஸ்மான் அறிக்கையின் உள்ளடக்கம்
- சனல் 4 ஆவணப்படங்களின் காட்சிகள்
- இலங்கையில் தூதுவர்களாக கடமையாற்றியவர்களின் தகவல்கள்
- நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை
- தமிழ் டயஸ்போரா சேர்த்து வைத்துள்ள ஆவணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்



மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

(தொடர் 37)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழிபெயர்ப்புத் தொடர்.

"நீங்கள் பசும்பாலைப் பருகுங்கள் அது நிவாரணமாகும். வெண்ணெய் மருந்தாகும். மாட்டிறைச்சி நோயாகும்"

இந்த ஹதீஸ் ஸஹீஹானது என்ற ஹாக்கிம் மற்றும் அல்பானியுடைய தீர்ப்பை நாம் ஏற்றுக்கொண்டால் அதற்கான எமது விளக்கம் யாது?

இதுபோன்ற ஹதீஸ்கள் மார்க்கரீதியான சட்டவியலாக அமையுமா? மனோ இச்சைப்படி பேசாத செய்தியை அது தாங்கியுள்ளதா? மாட்டிறைச்சி நோயை ஏற்படுத்தும் என்ற ஹதீஸின் உண்மை நிலை என்ன? இந்த ஹதீஸ் நடைமுறையுடன் பொருந்திச் செல்கின்றதா?

இந்த ஹதீஸ் மார்க்க விவகாரங்களில் ஒன்றாக இருந்திருந்தால் அது அனைத்து வகையிலும் நடைமுறையுடன் இயைந்து செல்வதாக இருந்திருக்க வேண்டும். இன்னும் குறிப்பிட்ட ஹதீஸின் அடியாக சட்டங்களும் பொறுப்புகளும் விளைந்திருக்கும். மாட்டிறைச்சி நோயை ஏற்படுத்தும் என்றிருந்தால் ஆரம்பமாக தீங்கிழைக்கவும் கூடாது. பழிக்குப் பழிவாங்கும் வகையில் தீங்கிழைக்கவும் கூடாது என்ற அடிப்படையில்,

"மாட்டிறைச்சி சாப்பிடுவதையிட்டு உங்களை எச்சரிக்கின்றேன்"

என்ற இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களின் ஹதீஸின் மூலம் மாட்டிறைச்சி தடுக்கப்பட்டுள்ள நிலையில் தீங்கை தவிர்க்கும் வகையில் அது ஹராமாக்கப்பட்டிருக்கும். ஆகக் குறைந்தது மக்ரூஹ் தஹ்ரீமி என்ற சட்டத்தையாவது பெற்றிருக்கும்.

**மாட்டிறைச்சி சாப்பிடுவதையிட்டு உங்களை எச்சரிக்கின்றேன்**

**நாட்டுப்புறத்து முதியோர் மற்றும் மூதாட்டிகளிடமிருந்து பரம்பரையாக பெறப்பட்ட சில மனிதர்களின் அனுபவங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட மருத்துவமே அரபிகளிடம் காணப்பட்டது.**

நடைமுறையில் நாம் இஸ்லாமிய உலகம் உட்பட முழு உலகிலும் மக்கள் மாட்டிறைச்சி சாப்பிடுவதைக் காண்கின்றோம். கடந்த பல நூற்றாண்டுகளாக முஸ்லிம்களும் அதனை சாப்பிட்டு வருகின்றனர். அவர்கள் அதனை சாப்பிடுவதை குற்றமாகவோ, சங்கடத்திற்குரிய அம்சமாகவோ கருதவில்லை. அவ்வாறே இறைச்சி சாப்பிடுவதால் நோய் ஏற்படுவதாகவும் அவர்கள் அனுபவத்தில் கண்டுகொள்ளவில்லை. மாறாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உழ்ஹிய்யா மற்றும் ஹத்யுவின்போது மாடு அறுப்பதை சட்டமாக ஆக்கினார்கள். ஏழு நபர்கள் சேர்ந்து ஒரு மாட்டை உழ்ஹிய்யாக் கொடுக்கலாம் என்று கூறிய நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தமது குடும்பத்தினருக்காக மாடு அறுத்து உழ்ஹிய்யாக் கொடுத்துள்ளார்கள்.

"நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மாடுகள் குறித்து பொதுமையாகச் சொல்லவில்லை. குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட ஒரு வகை மாடு குறித்தே அப்படிச் சொன்னார்கள்"

என இப்னுல் கைய்யும் 'ஸாதுல் மஆதில்' அல்லது 'அல்மிப்தாவுவில்' கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ளா விட்டால் இந்த ஹதீஸுக்கான எமது விளக்கம் என்ன? நாம் அப்படி விளக்கம் கொடுக்காவிட்டால் சூரத்துல் மாயிதா, சூரத்துல் அன்ஆம் மற்றும் அல்குர்ஆனின் ஏனைய இடங்களில் மாட்டிறைச்சி சாப்பிடுவது ஹலால் என கூறப்பட்டுள்ளவற்றுடன் ஹதீஸ் முரண்பாடுவதாக அமையும்.

மருத்துவத்துடன் தொடர்பான ஹதீஸ்கள் குறித்த இப்னு கல்தூனின் கருத்து,

சுன்னாவில் சொல்லப்பட்டிருக்கின்ற மருத்துவமானது தூதுத்துவத்தை எத்திவைக்கும் வகையில், திஹ்லவி கூறுவதுபோல அமைந்தவையல்ல. மாறாக வழக்காறு, இயல்பு என்பனவற்றின் அடிப்படையில் அமைந்தவையாகும். அவர் தனது பிரபல்யமான புத்தகமான முகாத்திமாவில் பின்வருமாறு கூறுகின்றார்:

நாட்டுப்புறத்து முதியோர் மற்றும் மூதாட்டிகளிடமிருந்து பரம்பரையாக பெறப்பட்ட சில மனிதர்களின் அனுபவங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட மருத்துவமே அரபிகளிடம் காணப்பட்டது. சிலபோது அதன் சில விடயங்கள் சரியாக இருக்கலாம் என்றாலும் அம்மருத்துவம் இயற்கை விதியின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டதாகவோ, சுபாவத்துடன் இயைந்து செல்லக்கூடியதாகவோ இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கவை. அரபுகளிடத்தில் இப்படியான மருத்துவம் அதிகம் காணப்பட்டன. ஹாரிஸ் பின் கலதா போன்ற பிரபல்யமான மருத்துவர்கள் அவர்களிடத்தில் இருந்தனர்.

الكلية الإصلاحية العربية

## இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி - மாதம்பை

**புதிய மாணவர் அனுமதி – 2014/ஹிஜ்ரி –1435**

## LICENTIATE COURSE IN ARABIC & ISLAMIC STUDIES

ஆழமான இஸ்லாமிய அறிவும் ஆன்மிகப் பண்புகளும் துறைசார்ந்த அறிவு, திறமைகளும் கொண்ட சிந்தனையாளர்கள், சமூகத்தலைவர்கள், திட்டமுகாமையாளர்கள், ஊர்மட்டத் தலைவர்கள், வழிகாட்டிகள், சமூக ஆய்வாளர்கள் போன்றோரை உருவாக்கும் பணியில் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக ஈடுபட்டுவரும் இஸ்லாஹிய்யா அரபுக்கல்லூரியில் நீங்களும் இணைந்துகொள்ளலாம்!

- இக்கற்கை நெறியின் போது தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், அகீதா, உலூமுல் குர்ஆன், உஸூலுல் ஹதீஸ் உஸூலுல் பிக்ஹ், உஸூலுத் தஃவா, அரபுமொழி, இஸ்லாமியக் கலைகள், ஆங்கில மொழி, தகவல் தொழில்நுட்பம், தேர்வுப்பாடங்கள் (Optional Subject), போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுவதுடன் G.C.E. உயர்தரப் பரீட்சை, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் ஒன்றில் கலைமானி பட்டப் பரீட்சை (B.A.) (வெளிவாரி) என்பவற்றுக்கும் மாணவர்கள் தயார்படுத்தப்படுவார்கள்.
- திறமையான மாணவர்களுக்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைத் தொடர்வதற்கான புலமைப்பரிசில்கள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஏற்கனவே திறமையான மாணவர்கள் பலர் அல்அஸ்ஹர் பல்கலைக்கழகம் (எகிப்து), ஜாமிஅதுல் ஈமான் (யெமன்), உம்முல் குரா (மக்கா) ஆகிய பல்கலைக்கழகங்களில் உயர் கல்விக்கான புலமைப் பரிசில்களைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

**கற்கை நெறிக் காலம்:** ஐந்தரை வருடங்கள் (5½)

**அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகள்**

- G.C.E. (O/L) பரீட்சையில் மூன்று பாடங்களில் C தரச்சித்தியுடன் தமிழ், கணிதம் உட்பட மொத்தம் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
- 1996/01/01 ம் திகதிக்குப் பின்னர் பிறந்திருத்தல்.

**மேலதிக விபரங்களுக்கு :**

**ISLAHIYYAH ARABIC COLLEGE**
Chandrik Silva Mawatha, Old Town, Madampe
Tel: 0773171718, 0775052735, 0715262026
Fax: 032 2247786 Email: islahiyyah@gmail.com

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் Licentiate என டைப் செய்து 0777 345367 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு 20.04.2014ம் திகதிக்கு முன்னர் SMS பண்ணவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




-மலைஞானி

# தமிழ் வாக்குகளை சிதறடிக்க வந்தோருக்கு

## பாடம் புகட்டிய வாக்காளர்கள்

செருப்பை கையில் கொடுத்து அடி வாங்கிக்கொள்வது என்று சொல்வார்கள். மேல் மாகாணத்தில் சேவல் சின்னத்தில் வேட்பாளர்களை நிறுத்திய இ.தொ.கா. வுக்கு நிகழ்ந்திருப்பது இதுதான். மேலும், தீர்க்கதரிசனமின்மை, அரசியல் கணக்கு போடத்தெரியாத தலைமை, ஆணவம், தலைக்கனம், மக்களை விட்டு தூரவிலகி நிற்கும் நிலை, தலைமையை சுற்றி தாளம் போடும் சலாம் கூட்டம் என்பனவற்றையே இப்படுதோல்வி சுட்டி நிகழ்கிறது.

சப்ரகமுவ மாகாணத் தேர்தலில் இ. தொ.கா. வெற்றி பெற்று இரண்டு உறுப்பினர்களை பெற்றுக் கொண்டதற்கான பின்னணியும் மத்திய மாகாணத்தில் இ. தொ.கா. எட்டு உறுப்பினர்களைப் பெற்ற பின்னணியும் வெவ்வேறானவை. இரண்டையும் இ.தொ.கா. நிறுத்தும் வேட்பாளர்களுக்கு எல்லாம் வாக்களிக்கும் என்று இ. தொ.கா. தலைமை கணித்தது மகா தப்புக் கணக்கு என்பதை இப்போதாவது தலைமைக்கு விளங்கியிருக்குமா?

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் இ.தொ.கா. வெற்றிலைச் சின்னத்தல் வேட்பாளர்களை நிறுத்தியது. அப்போது இ.தொ.கா. வேட்பாளர்கள் பெற்ற மொத்த வாக்குகள் 1586 ஆகவே இருந்தன. இப்படி ஒரு பின்னடைவு இருக்கும்போது எந்தத் துணிச்சலில் மேல் மாகாணத்தில் இ.தொ. கா. தனித்து போட்டியிட முடிவெடுத்தது என்பது புரியாத புதிர்.

கொழும்பில் அல்லது மேல் மாகாணத்தில் இ.தொ.கா. வின் அடையாளச் சின்னங்களாக விளங்கியவர்களே, எம்.எஸ். செல்ல சாமியும் யோகராஜனும். மக்கள் இவர்களின் மீது நம்பிக்கை வைத்து தமது உறுப்பினர்களாகத் தெரிவு செய்தார்கள்.

1977ஆம் ஆண்டு தேர்தலில் எம்.எஸ். செல்லசாமி சேவல் சின்னத்தில் போட்டியிட்டார். அது தொகுதி அடிப்படையிலான தேர்தல். மத்திய கொழும்பு அப்போது மூன்று அங்கத்தவர் தொகுதி. ஆர்.பிரேமதாச, ஜாபிர் ஏ காதர், ஹலீம் இஷாக் ஆகியோர் தெரிவு செய்யப்பட, 26 ஆயிரத்து 964 வாக்குகளைப் பெற்று செல்லசாமி நான்காம் இடத்துக்கு வந்தார். அவர் தெரிவு செய்யப்பட இல்லையாயினும் இ.தொ.கா.வைப் பொறுத்தவரை அது ஒரு வெற்றி நிகழ்வாகவே கருதப்பட்டது. இன்றைக்கு இ.தொ.கா. கொழும்பு மாவட்டத்தில் அள்ளிக் குவித்த வாக்குகளின் எண்ணிக்கை 3885 மட்டுமே. 26 ஆயிரமாக இருந்த செல்வாக்கு நிலை, மேல் மாகாணத்தில் நான்காயிரம் கூட இல்லை என்பதாக சுருங்கிவிட்டது. இ.தொ.கா. வின் 37 வருட வளர்ச்சியில் ஏற்பட்ட பிரதிபலனே இது!

ஒரு கட்சி, அதுவும் சிறுபான்மை மக்கள் நலன் சார்ந்த கட்சிக்கு வளர்ச்சி என்பது மிக முக்கியம். வளர்கிறதோ, தேய்கிறதோ? வளர்ச்சிக்கான முயற்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரவேண்டும். செல்லசாமி காலத்தில் கொழும்பு நிறுவனங்களிலும் இ.தொ.கா. அங்கத்தினர்களைக் கொண்டிருந்தது. எலிபன்ட் ஹவுஸ் நிறுவனத்தில் இ.தொ.கா. அங்கத்தினர்களைக் கொண்டிருந்ததோடு, ஒட்டி வேலைநிறுத்த போராட்டம் நிகழ்ந்ததாகவும் ஞாபகம்.

பழங்கதை பேசுவதில் பலன் இல்லைதான். ஆனால், தெனியாய, இரத்தினபுரி, கேகாலை, பதுளை, கழுத்துறை, கொழும்பு என மலையகப் பகுதிகளெங்கும் செல்வாக்கு பெற்றிருந்த இ.தொ.கா. வின் செல்வாக்கு இளைய தொண்டமான் பொறுப்பேற்ற பின்னர், எப்படியெல்லாம் குறுகி வருகிறது என்பதை, இந்த 3885 வாக்குகள் தெட்டத் தெளிவாக்கி இருக்கின்றன.

இ.தொ.கா. தன் கோட்டை கொத்தளங்களைப் படிப்படியாக இழந்து வருகிறது என்பதற்கு இதுவொரு நல்ல சாட்சி. ஆனால், அவர்கள் இதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. மேல் மாகாணத்தில் இ.தொ.கா. மொத்தமாக 8216 வாக்குகளையே பெற்றிருக்கும் அதே சமயம், திடீர் நட்சத்திரமான கிருஷ்ணாவின் நவோதயா மக்கள் முன்னணி மொத்தமாக 5655 வாக்குகளைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது மட்டுமல்ல, பழம்பெரும் தொழிலாளர் கட்சியான இ.தொ.கா. வுக்கு அதிர்ச்சியையும் அளித்திருக்கிறது. இலவசங்களை அள்ளித்தரும் தந்திரத்தின் மூலம் நவோதயாவுக்கு இத்தனை வாக்குகளை சேகரிக்க முடிந்திருக்கிறது என்பது உண்மையானாலும், மக்களின் மனதைக் கவர ஏன் இ.தொ.கா. வினால் முடியவில்லை என்பதை அக்கட்சித் தலைமை அலசி ஆராய வேண்டாமா?

இ.தொ.கா. யானை சின்னத்தில் அல்லது வெற்றிலைச் சின்னத்தில் தேர்தலில் வாக்கு கேட்பதைக் கைவிட வேண்டும். எந்தக் கட்சியுடன் இணைந்திருந்தாலும் தன் தனித்துவத்தையும் தன் சின்னத்தையும் எக்காரணத்துக்காகவும் கைவிட்டுவிடக் கூடாது. ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொரு சின்னத்தில் நிற்பது, பாரம்பரிய செல்வாக்கு இருக்கக் கூடிய இடங்களை ஒதுக்கிவைத்து விட்டு திடீர் ஞானோதயத்தின் பேரில் அங்கெல்லாம் வாக்கு கேட்பதும், சில பிரதேசங்களை அலட்சியப்படுத்தி கிடப்பில் போட்டுவிடுவதும் இ.தொ.கா. தொடர்ச்சியாக செய்துவரும் தவறுகளாகும்.

நுவரெலிய மாவட்டத்தில் இ.தொ.கா. செல்வாக்கு செலுத்துவது முற்றிலும் வேறு விஷயம். ஆனால் அங்கும் திகாம்பரத்தின் செல்வாக்கு படிப்படியாக அதிகரித்து வருவதும்,

➡ 16

**திடீரென ஒரு குரங்கைப் பிடித்துவந்து இதுதான் பிள்ளையார் என்றால் வாக்காளர்கள் அதை நம்புவதற்கு முட்டாள்களா? யோகராஜனை போஷித்து வைத்துக் கொள்ளாமல் திடீரென ஒருவரைப் பிடித்துவந்து இவருக்கு வாக்களியுங்கள் என்றால் வாக்கு கிடைக்குமா?**

# கும்பி கூழுக்கு அழுகிறது;

## கொண்டையோ பூவுக்கு அழுகிறது



வடபுலத்தான்

நீராலானது இந்த உலகம் என்று சொன்னாலும் நீரில்லாத உலகமே உருவாகி வருகிறது.

எங்கும் வரட்சி அல்லது பெருவெள்ளம். இரண்டிலும் சிரமமும் பாதிப்புமே அதிகம். இயற்கையின் சமநிலை குலைந்தால் இதுதான் விதி. இயற்கையின் சமநிலையைக் குலைப்பதில் இயற்கையின் புத்திரர்களில் பல கில்லாடிகள் மனிதர்கள்தான்.

எதிலும் சமநிலையைக் குலைத்து பெயர் எடுப்பவர்களும் மனிதர்களே! அதனால்தான் பல சந்தர்ப்பங்களிலும் தாங்களே சமநிலை குலைந்து போகிறார்கள்.

இப்படித்தான் பூநகரிப் பிரதேச சபையிலும் ஒரு சமநிலைக் குலைப்பு நடந்து கொண்டிருக்கிறது.

அங்கே தற்போது பதவியிலிருக்கும் தவிசாளரை வீழ்த்துவதற்காக திரை மறைவிலும் திரைக்கு முன்னுமாக பெரும் போராட்டங்களை அதே கட்சியைச் சேர்ந்த இன்னொருவர் நடத்திக் கொண்டிருக்கிறார். வேடிக்கை என்ன என்று தெரியுமா? இருவரும் ஆனந்த சங்கரியின் விசுவாசிகள்.

விசுவாசிகளிடையே நடக்கும் மோதலை எப்படி வழிக்கு கொண்டுவருவது என்று சங்கரியருக்கு விளங்கவில்லை. ஆளுக்கு ஆள் போட்டி போட்டுக்கொண்டு சங்கரியருக்குக் கடிதமெழுதிக் கொண்டும் தொலைபேசியில் கோரிக்கைகளை விட்டுக்கொண்டும் இருக்கிறார்கள்.

தினமும் உலகமெல்லாம் கடிதம் எழுதி எழுதியும் களைக்காத சங்கரியாரை இவர்களின் கடிதங்கள் களைப்படைய வைத்து விட்டன.

தவிசாளரும் தவிசாளரைக் கவிழ்ப்பதற்காகச் சதித்திட்டங்களை தீட்டிக்கொண்டிருக்கும் இந்த உறுப்பினரும் பூநகரிப் பிரதேசவாசிகள் என்றபோதும், அந்தப் பிரதேசத்தில் வசிக்காதவர்கள். பதவிக்காக மட்டுமே சபைக்கு வந்து போகிறார்கள்.

இந்தப் பதவி ஆசைதான் கதிரைக்காக அடிபட வைக்கிறது.

இவர்கள் கதிரைக்காக சண்டை போடுகிறார்கள். பூநகரி சனங்களோ தண்ணீருக்காக அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

கறுக்காய்த்தீவில் ஒரு வாளி தண்ணீரைக்கூட பெறமுடியாமல் உள்ளது. வாரத்திற்கு ஒரு தடவை மட்டுமே பிரதேச சபையின் நீர் வருகிறது என்று சொல்கிறார் கறுக்காய்த்தீவுவாசி ஒருவர்.

யாழ்ப்பாணத்திலிருந்தும் கிளிநொச்சியிலிருந்துமே குடிநீரை வாங்கிக் கொண்டு போகிறொம் என்று சொல்லிக் கொண்டு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் தண்ணீர்க் கலன்களுடன் (கொள்கலன்) நின்றார் ஒருவர்.

இந்த மாதிரி நிலைமை நீடித்தால் மீளக்குடியேறிய சனங்கள் மீள இடம் பெயர்ந்து விடுவார்கள் என்று இன்னோர் உண்மையையும் சொன்னார்.

பிரதேச சபையிடம் முறையிட்டால், எதையும் செய்யவிடாமல் செயலாளரைக் கட்டுப்படுத்துகிறார் தவிசாளர். தவிசாளரைக் கட்டுப்படுத்துகிறார் தவிசாளராக வரவிரும்பும் கணேசப் பெருமான் என்றார் இன்னொருவர்.

எல்லாத்துக்கும் காரணம், கதிரை வியாதிதான்.

இந்த வியாதிக்காரரை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்குப் பதிலாக, சபையின் ஆட்சிக் கதிரையில் அமர்த்தியதால் வந்தது தான் இந்த வினை.

வினை விதைத்தவன் வினையே அறுப்பான். என்ற மாதிரி இவர்களைத் தேர்வு செய்ததால் வந்த வினையைத்தான் இப்பொழுது பூனகரிப் பிரதேச மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் தான் இப்படி தண்ணீருக்கு அலைய வேண்டிய நிலையும் வந்திருக்கு.

பூநகரியின் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நிரந்தரமாக நீக்குவதற்கு எடுக்கப்பட்ட அத்தனை முயற்சிகளுக்கு தடையை விதித்திருப்பதும் இந்த சபையினர்தான்.

இரணைமடு குடிநீர்த்திட்டத்தின் மூலம் பூநகரிக்கும் தண்ணீர் வருவதாக இருந்தது. அதைத் தடுத்துவிட்டனர்.

ஈழத்தமிழர் வரலாற்றில் ஒரு காலம் சிறப்பான ராஜ்ஜியமாக விரிந்து, வளம் கொழித்திருந்த (பூநகரி) தாய் மடியில் இன்று இந்தப் பயல்கள் ஆடுகின்ற ஆட்டமும் போடுகின்ற கும்மாளமும் கொஞ்சமல்ல.


என்ன செய்வது கும்பி கூழுக்கு அழுகிறது; கொண்டை பூவுக்கு அழுகிறது என்ற நிலைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்தோட்டம் என்கின்றபோது கூறப்படுவது நிலமில்லை என்பதுதான்

## City Garden நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றதிகாரி –ஹில்ர் எம். சித்தீக்

ஹில்ர் எம். சித்தீக், சிட்டி கார்டன் (City Garden) நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றதிகாரியாவார். இவர் மூலம் 1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் நாடுபூராகவும் சூழலியல் தொடர்பான பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானத் துறையின் பட்டதாரியான ஹில்ர் சித்தீக் வீட்டுத்தோட்டம் மற்றும் சூழலியல் பாதுகாப்பு தொடர்பான வேலைத்திட்டங்களை சமூக மட்டத்தில் அறிமுகப்படுத்தி அதனை திறன்பட அமுல்படுத்திய அனுபவம் கொண்டவர். அவருடன் மேற்கொண்ட நேர்காணலை எங்கள்தேசம் வாசகர்களின் நலன் கருதி தொகுத்துத் தருகிறோம்.



**கேள்வி: சிட்டி கார்டன் நிறுவனத்தினூடாக சூழல் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு வேலைத்திட்டங்களை நீங்கள் மேற்கொண்டு வருகின்றீர்கள். இவ்வாறான பணியை மேற்கொள்ள உங்களைத் தூண்டிய பின்னணி பற்றி கூற முடியுமா?**

**பதில்:** 1971 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானத் துறை பட்டதாரியாக வெளியேறினேன். பின்னர், நான் எடுத்த சில நடவடிக்கைகள் என்னுடைய எதிர்காலத்தை சிறந்தமுறையில் அமைக்க சாதகமாக அமைந்தன. நான் ஆய்வுப் பணியில் அதிக ஈடுபாடு கொண்டவன். எனவே, இலங்கை மத்திய வங்கியோடு இணைந்து இலங்கையில் விவசாய தோட்டங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன, அதில் தொழிலாளர்களின் ஈடுபாடு எவ்வாறுள்ளது? என்பவை தொடர்பாக ஆய்வினை மேற்கொண்டேன். இதனால் விவசாயம் தொடர்பாக ஆய்வினை மேற்கொள்ள நாடுபூராகவும் பயணிக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.

அத்துடன், ஹயா இன்டர்நெஷனல் நிறுவனத்துடன் இணைந்து 5 வருடங்களாக போசாக்கு தொடர்பாக நாடுபூராகவும் சேவையாற்ற வாய்ப்பும் கிடைத்தது. கல்வியமைச்சு மற்றும் சுகாதார அமைச்சுகளுடன் இணைந்து சுகாதார போசாக்கு தொடர்பான கல்வியை வழங்கினோம். பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் அவசரகால வேலைத்திட்டத்தின் கீழ் தாய்லாந்துக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது. யுத்தத்தினால் வெளியேறிய சுமார் 10 இலட்சம் மக்கள் தாய்லாந்து எல்லையில் குடியேறினர். நான் அங்கு போசாக்குள்ள உணவுகளை காடுகளில் அகதிகளாக வாழ்கின்ற மக்களுக்கு எப்படி கொடுக்கலாம் என்பதை ஆய்வு செய்வதற்காக சென்றேன். அங்குள்ள அகதி முகாமில் தினமும் 20 அகதிகள் போசாக்கு குறைபாடு காரணமாக உயிரிழந்தனர். அந்த அகதிகளுக்கான நிவாரண வேலைத்திட்டங்களில் 13 வருட காலமாக ஈடுபட்டேன். அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக விவசாயம், கைத்தொழில் தொடர்பான அறிவினைக் கொடுத்தோம். தாய்லாந்தில் நான் கடமையாற்றும் போது அங்குள்ள விவசாய முறைமை என்னை வெகுவாக கவர்ந்தது. அங்கிருந்து வந்தவுடன் சிட்டி கார்டன் என்ற நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு தூண்டுகோலாகவும் அது அமைந்தது.

**கேள்வி: நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் பல வீடமைப்புத் திட்டங்கள் காணப்படுகின்றன. இந்நிலையில் இங்கு வாழும் மக்கள் வீட்டுத் தோட்டங்களை எவ்வாறு மேற்கொள்ள முடியும்?**

**பதில்:** வீட்டுத்தோட்டம் என்கின்றபோது மக்களுக்கு நினைவுக்கு வருவது எமக்கு நிலம் இல்லை என்பதுதான். இன்று மக்கள் செறிவாக வாழ்கின்ற நகர்ப்புறங்களில் விவசாயம் செய்வதற்கு பல முறைமை அறிமுகப்படுத்தப்படுகின்றன. நிலம் மற்றும் வளங்கள் உள்ளவர்களுக்கு விவசாயம் செய்வதில் நாட்டம் குறைவாகவுள்ளது. ஒரு சிறப்பான வீட்டுத்தோட்டத்தை செய்வதற்கு பல காரணிகள் தேவையுடையதாக உள்ளன. அதாவது பாதுகாப்பு வேலி, நடும் பிரதேசம், சூரிய ஒளி, வளமான மண், நோய், பூச்சி தொற்றுதல் அற்ற இடம் என்பவையாகும்.

கிராமப்புறங்களில் நிலங்கள் இருந்தும் விவசாயம் தொடர்பான போதிய அறிவில்லாமல் இருக்கின்றார்கள். அவர்களுக்கு காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப எதனை நடலாம் என்பது தொடர்பாகவும் தமது மண்ணின் தன்மைக்கு ஏற்ப எவ்வாறான பயிரை தெரிவு செய்யலாம் என்பது தொடர்பாகவும் அறிவூட்டல் மேற்கொள்ள வேண்டும்.

நகர்ப்புறங்களில், மக்கள் செறிவாக வாழக்கூடிய பிரதேசங்களில் வீட்டுத்தோட்டம் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் பல உள்ளன. சீமந்து போச்சுகளில், சட்டிகளில், பெட்டிகளில், கழிவுப் பொருட்களை பயன்படுத்தியும் பயிரிட முடியும். ஏத்பேக்ஸ் என்ற முறைமையை பயன்படுத்துவதும் நீர் இல்லாமல் ஒருவார காலம் பாதுகாக்க முடியும்.

**கேள்வி: சுகாதார உணவு வகைகளை உட்கொள்வதில் மக்களுக்குள்ள விழிப்புணர்வு எவ்வாறுள்ளது?**

**பதில்:** இலங்கையில் உணவுப் பழக்க முறையில் குறைபாடுகள் இருக்கின்றன. கடந்த காலங்களில் மூலிகை கீரைகளை அதிகமாக பயன்படுத்தினோம். இன்று இதில் கவனம் செலுத்துதல் குறைவு. நாங்கள் மூலிகை தாவரங்களை ஒவ்வோர் உணவு வேளையிலும் சேர்க்க வேண்டும்.

நாங்கள் மரபணு மாற்றப்பட்ட புதிய வகை விதைகளைக் கொண்டுவந்ததால் அக்கால பாரம்பரிய மரக்கறிகள், பழங்கள், கீரை வகைகள் இந்த நிலத்திலிருந்து மறைந்து விட்டன. இன்றுள்ள தலைமுறைக்கு எத்தனையோ பல வகையின் பெயர்கள் தெரியாதிருக்கின்றன. சந்தையில் காணப்படும் கீரை வகைகளில் எது நச்சு தன்மையானது, எது போசாக்கானது? என்று தெரியாத நிலையில் நாங்கள் உள்ளோம். மலைநாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்ற மரக்கறிகள் இரசாயனத்தன்மை வாய்ந்தவை. இன்று உயர் குருதி அழுத்தம், சிறுநீரக செயலிழப்பு போன்ற கொடிய நோய்கள் வருவதற்கு பொதுவாக நாம் உட்கொள்ளும் உணவும் அருந்தும் நீருந்தான் காரணங்களாகும்.

சமூகமட்டத்தில் முன்வந்து சேதனை பசளைகள், இயற்கைத்தன்மை வாய்ந்த கிருமிநாசினிகள் போன்றவற்றை பயன்படுத்தி விவசாயம் செய்ய முன்வரும்போது இரசாயன மரக்கறிகளை இயற்கை மரக்கறிகளாக மாற்றலாம். இது தொடர்பான அறிவூட்டல் பணி மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

**கேள்வி: பாடசாலை மற்றும் பொது நிறுவனங்களில் காணப்படும் நிலங்கள் விவசாய மேம்பாட்டுக்கு பயன்படுத்தப்படுகின்றதா?**

**பதில்:** எமது நிறுவனத்தின் இலக்கு பாடசாலை தோட்டத்திலிருந்து வீட்டுத்தோட்டம், வீட்டுத்தோட்டத்திலிருந்து விவசாய நிலங்களை நோக்கியதாகும். இன்று பாடசாலைகளில் போதிய விவசாய ஆசிரியர்கள் இன்மையாலும் ஆசிரியர்கள் இருந்தால் அவர்களுக்கு ஒத்துழைப்பு கிடைக்காததாலும் விவசாய ஆசிரியர்களின் பொடுபோக்கினாலும் பாடசாலை நிலங்கள் பயன்படுத்தப்படாமல் கிடக்கின்றன. பாடசாலைகளில் மாணவர்களுக்கு விவசாயம் தொடர்பான அறிவைக் கொடுத்து பாடசாலை நிலப்பரப்பில் சிறிய அளவிலான பயிர்களை பயிரிடத் தூண்டினால் அவர்கள் மத்தியில் விவசாயத்தில் நாட்டம் ஏற்படும். அவர்களிடையே குழுவாக நின்று வேலை செய்யும் சேவை மனப்பாங்கும் வளர்ச்சியடையும்.

எமது பள்ளிவாசல்களுக்கும் அரபுக் கல்லூரிகளுக்கும் சொந்தமான பாரிய நிலப்பரப்புகள் பயன்படுத்தப்படாமல் தரிசு நிலங்களாக கிடக்கின்றன. இஸ்லாம், விவசாய நிலங்களை பயன்படுத்தாமல் இருப்பதை கண்டிக்கிறது.

இன்றுவரை அறவிடல் அல்லது வசூல் முறையில்தான் அரபுக் கல்லூரிகள் நடத்தப்படுகின்றன. சிறியளவிலான வருமானத்தை ஈட்டித்தரும் முயற்சிகளை நிலப்பரப்பில் செய்வதன் மூலம் செலவினை மிச்சம் பிடிக்கலாம். எத்தனை மத்ரஸாக்கள், பள்ளிவாசல் நிருவாகிகளிடம் நான் சென்று உங்களுடைய மத்ரஸாக்கள், பள்ளிவாசல்களுக்கான தோட்டத்தை செய்து தருகின்றேன் என்று கூறி இருக்கின்றேன்.

இவர்கள் முன்வருவதற்கு தயாறில்லாமல் இருக்கின்றனர். எமது சமூகத்தில் யாரும் ஒரு நல்ல வேலைத்திட்டங்களை கூறினால் அவரை சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்கள். பொதுவாக, ஐரோப்பிய சமூக அமைப்புக்கும் எமது சமூக அமைப்புக்கும் இடையிலான வேறுபாடு இதுதான். அங்கு ஒருவர் நல்ல திட்டங்களை முன்வைத்தால் அவருடைய திட்டங்கள் பாராட்டப்பட்டு அதனை எடுத்து நடக்க ஏனையோர் முன்வருவார்கள். எமது சமூகத்தவர்கள் விமர்சன பார்வையுடனும் சந்தேக போக்குடனும் பார்க்கின்றார்கள். இந்நிலை எமது சமூகத்திலிருந்து மாற்றப்பட வேண்டும்.

**கேள்வி: உங்களுடைய சிட்டி கார்டன் நிறுவனத்தின் மூலம் எவ்வாறான வேலைத்திட்டங்களை மேற்கொள்கிறீர்கள்?**

**பதில்:** முக்கியமாக மரம் நடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம். இதற்கான பொறுப்புணர்வுகளை சமூகமட்டத்தில் ஏற்படுத்துகின்றோம். சில தொழிநுட்ப முறைகளை அறிமுகப்படுத்துகின்றோம். அதில் ஒன்றுதான் குறைந்த காலத்தில் விரைவாக வளர்ச்சியடையக் கூடிய ஆபிரிக்கன் மகோகனியை அறிமுகப்படுத்துகின்றோம். இதனை இலங்கையில் எந்த பகுதியிலும் நட முடியும்.

இந்நிறுவனத்தினூடாக இரண்டு வகையான தொழிநுட்ப அறிவினை வழங்குகின்றோம். ஒன்று, நுண்ணுயிர் நீர்ப்பாய்ச்சல். இரண்டாவது, சுற்றாடலின் தாக்கத்திலிருந்து எவ்வாறு பாதுகாப்பான முறையில் விவசாயம் செய்யலாம் என்ற முறைமை.

இலங்கையை பொறுத்தவரையில் தொழிநுட்ப அறிவை நிவர்த்தி செய்வதற்காக கடந்த 5 வருடங்களாக நுண்ணுயிர் நீர்ப்பாய்ச்சல் தொடர்பாக ஒரு நாள் பயிற்சி நெறிகளை நடத்தி வருகின்றோம். ஒவ்வொரு மாதமும் நடைபெறும் இந்த பயிற்சிநெறியில் இதுவரை சுமார் 1400 பேரை பயிற்றுவித்துள்ளோம்.

**கேள்வி: இரசாயன உரங்கள் இன்று அதிகளவு பயன்படுத்தப்படுகின்றன. இதன் பாதிப்புகள் குறித்து தெளிவுபடுத்த முடியுமா?**

**பதில்:** இன்று பயன்படுத்தப்படும் பசளைகள்; பூச்சிநாசினிகள், விதைகள் என்பவற்றை எத்தனையோ தொழிற்சாலைகள் தயாரிக்கின்றன. இந்த நிறுவனங்கள் எந்தளவுக்கு உற்சாகமாக இயங்குகின்றதோ அந்தளவுக்கு இரசாயனமயப்படுத்தலும் நடைபெறும். நோய்களிலிருந்து பாதுகாக்க வேண்டிய இந்த பயிர்களை, இரசாயனங்களை பயன்படுத்தாமல் மாற்று முறைகளை பயன்படுத்தி எப்படி பாதுகாக்கலாம் என்பதைக் கொடுக்க விவசாய திணைக்களமும் அதன் அதிகாரிகளும் ஆசிரியர்களும் பெற்றோரும் தவறிவிட்டனர்.


உடனடியாக கிடைக்கின்ற இலாபத்தை எதிர்பார்த்து கம்பனிகளின் விளம்பரங்களுக்கு அடிமையாகி இரசாயனங்களை பயன்படுத்தி விவசாய நிலங்களை நச்சு நிலங்களாக மாற்றிவிட்டனர். அதனால் வரும் விளைவுகளை பல வருட காலம் விளங்காதவர்களாக இருந்தனர். ஆனால், இன்று விளங்க ஆரம்பித்துள்ளனர்.

இரசாயனங்களை பயன்படுத்துவதால் பூமி இறந்துவிடுகிறது. வாழுகின்ற பூமியாக இருந்தால் மண்ணில் உயிர் இருக்கும். அதில் எண்ணிலடங்காத, கண்ணுக்கு புலப்படாத பக்டீரியாக்கள், மண்புழுக்கள் இருக்கும். இதனை நாம் கொன்று, மரபணு மாற்றப்பட்ட செயற்கை விதைகளை நட்டுகின்றோம். இந்த செயற்கை விதைகள் இரசாயனமில்லாமல் வளராது. இறந்த மண்ணால் எவ்வாறு பயிர்களுக்கு உயிர்கொடுக்க முடியும்? அல்லாஹ் கூறுவதுபோல் இது மனிதன் தனக்காக தேடிக்கொண்ட அழிவாகும்.

நேர்காணல்:
எஸ். ஸஜாத் முஹம்மத் (இஸ்லாஹி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1938 ஏப்ரல் 21
## 76 வது நினைவு தினம்



# மகா கவி
# அல்லாமா முஹம்மத் இக்பால்

ஒரு மனிதன் எப்படிப் பிறந்தான் என்பதல்ல; அவன் எப்படி மரணித்தான் என்பதுதான் முக்கியம். எப்படி மரணிக்க வேண்டும் என்பதை ஒரு நாளில் உலகம் சொல்லும். அவன் பிரருக்காக செய்த தொண்டு வற்றாத நதியைப் போன்றது. உலகம் முடிகின்ற வரைக்கும் அது நீழ்கிறது. அவன் வாழ்வு தொடங்கிய புள்ளியிலிருந்து அவன் ஆயுள் முடிகின்ற புள்ளியுடன் முடிந்துபோகாது. சமூகத்தின் நினைவுப் படுக்கையிலும் அது விடுக்கின்ற ஒவ்வொரு குமிழிக் காற்றிலும் அவன் உயிர் வாழ்கிறான்.

இப்படி, உலகத்தை விட்டும் விடைபெற்ற பலரை இன்று சமூகம் திரும்பிப் பார்க்கிறது. இவர்களில் ஒருவர்தான் 20 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மகா கவி அல்லாமா இக்பால் அவர்களும்.

அல்லாமா இக்பால் உயிர் நீத்து 75 ஆண்டுகள் கடந்த பின்னரும் அவர் நினைவு கூரப்படுவதும் இவரைப் பற்றி மட்டும் 2150 நூல்கள் எழுதப்பட்டிருப்பதும் அவரது சமூகத் தொண்டுக்கு கிடைத்த வெற்றிதான்.

கலாநிதி முஹம்மத் இக்பால் அவர்கள் பாகிஸ்தான் பஞ்சாப் மாநிலத்தின் ஸியால் கோட் நகரில் 1877 நவம்பர் 9 ஆம் திகதி பிறந்தார். நல்லொழுக்கம், நன்னடத்தை, வாய்மை, நேர்மை, அன்பு, பண்பு, பணிவு போன்ற குணாதிசயங்களை இயல்பாகக் கொண்டு சிறுபராயத்திலிருந்தே அயலவர்களினதும் ஆசிரியர்களினதும் நன்மதிப்பைப் பெற்றார்.

அல்லாமா இக்பால் அவர்கள் இளமைக் கல்வியை ஸியால் கோட் நகரில் அறிவு மேதை பீர் ஹஸனிடம் கற்றார். சிறுவயதிலிருந்தே எழுதுவதிலும் தத்துவங்கள் பேசுவதிலும் மிகுந்த ஆர்வமுள்ளவர்தான் இக்பால் அவர்கள். இவரது புத்திக் கூர்மை ஆசிரியர்களை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. ஒரு நாள் பள்ளிக் கூடத்திற்கு தாமதமாகச் சென்றாராம்.

**ஓ... இளைஞனே!**
**இளைப்பாறுகிறாயா?**
**இளைப்பாறும் நேரம்**
**உனக்கெங்கிருக்கிறது?**
**உன் சமூகத்தை வழி நடத்த**
**வேண்டிய பொறுப்பு**
**உன் தோள்களில் உள்ளபோது**
**உன்னால் இளைப்பாற முடிகிறதா?**

ஆசிரியரோ, இக்பால் ஏன் இன்று தாமதம்? எனக் கேட்க; இக்பால் எப்போதுமே தாமதித்துதானே வரும் என்றாராம். இக்பாலுக்குரிய பேரும் புகழும் தாமதித்துதானே கிடைக்கும் என்பதுதான் அவரது கருத்தின் யதார்த்தம்.

லாஹூரின் அரச கல்லூரி ஒன்றில் தனது உயர் கல்வியை பூர்த்தி செய்தவர். அரபு, பாரசீகம், தத்துவம், ஆங்கிலத் துறைகளில் அதிவிசேட சித்தி பெற்று பட்டதாரியானார். லாஹூரில் இருந்த காலத்தில் தத்துவத்தில் எம்.ஏ. பட்டமும் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் முதுமானிப் பட்டமும் பரிட்டன் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்திலும் ஜேர்மனின் பிரபலமான மியுனிச் பல்கலைக்கழகத்திலும் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொண்டு அற மெய்யியல் துறையில் கலாநிதிப் பட்டத்தையும் அதனுடன் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் சட்ட நிபுணர் பட்டத்தையும் பெற்றார்.

தனது உயர் கல்விக்காக ஐரோப்பாவில் இருந்த 3 ஆண்டுகளும் மேற்கத்தேய சீர்திருத்தவாதிகளின் புயலாகப் பாய்ந்த மெய்யியல் சிந்தனை இக்பாலை கவர்ந்திழுத்தது. அங்கிருந்த காலத்தில் ஹெகல், சோபனாவ, நீட்சே, கார்ல் மார்க்ஸ் போன்றவர்களின் மெய்யியல் சிந்தனைகளை அவர் அதிகமதிகம் படித்தார். இது இக்பாலின் வாழ்விலும் சிந்தனையிலும் மிகப் பெரும் தாக்கத்தைச் செலுத்தியது. அல் குர்ஆனுடனும் அல் ஹதீஸுடனும் இவருக்கிருந்த இறுக்கமான உறவு இஸ்லாமிய சமூகவியலாளர்கள், மெய்யியலாளர்களது எழுத்துக்களிலும் கருத்துக்களிலும் தாகத்தை மிகைப்படுத்திற்று. அவைகளையும் தேடித் தேடிக் கற்றார்.

அல் குர்ஆனுடனான இவரது தொடர்பைக் கண்ட மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வியவர்கள்: குர்ஆனின் கவிஞர் என வர்ணித்தார். "உலகம் முழுவதும் பிரசித்துபெற்ற, குறிப்பாய் கூறத்தக்கதொரு கவிஞர் தான் இக்பால் அவர்கள்" என முஹம்மத் அலி ஜின்னாஹ் அவர்கள் இவரைப் பாராட்டியுள்ளார்.

'அஸ்ராரே குதி' என்ற இவரது கவிதை நூலின் ஆங்கில மொழி ஆக்கத்தைப் படித்த மேநாட்டு கவிஞர்கள்: இக்பால் கீழ் நாட்டின் இணையற்ற தத்துவ சாஸ்திரக் கவிஞர் என்று பாராட்டினர்.

மிகக் குறுகிய காலத்தில் இவரது அரச மொழிப் புலமையையும் சொல்வீச்சையும் கண்ட பிரபல கவிஞர் மிர்சா தாக்: இக்பாலின் கவிதைகள் திருத்தத்தையோ, மீள் பரிசீலணையையோ வேண்டாதவை என்றார்.

தத்துவ ஞானி, அரசியல் மேதை, வழக்கறிஞர், சிந்தனையாளர் எனப் பல்வேறு தளங்களில் வலம் வந்த அல்லாமா இக்பால் தனது முதிர்ந்த சிந்தனையில் விளைந்த கருத்துக்களை கனல் பறக்கும் வரிகளாக கவிதை வடிவில் எழுதி அவற்றை மக்கள் மன்றத்தில் வைத்தார்.

இந்திய நாடு வெள்ளையரை எதிர்த்து விடுதலை பெறவேண்டும் என்ற சுதந்திர தாகத்தை மக்கள் மனதில் விதைத்த பெருமை இவருக்குண்டு. இவர் எழுதிய பாடலொன்று 1947 இல் ஆங்கிலேயர் விரட்டியடிக்கப்பட்டு இந்திய நாடாளுமன்றத்தில் முதல் முதலாக ஒலித்தது.

மௌலானா அபுல் அலா மௌதூதியின் அறிமுகம் இவரது சிந்தனையை மேலும் மெருகூட்டியது. மௌதூதியின் அறிமுகத்தின் பின்னர் இக்பாலின் கவிதைப் பயணம் ஆத்மிக வெளிச்சம் மிகுந்த பாதை நோக்கி பயணித்தது.

**"முஃமினே! உன் பாதையின் வெளிச்சத்தை நீ உன் மண்ணிலிருந்தே பெற்றுக்கொள். பிறரிடமிருந்த, இரவில் பெற்ற வெளிச்சம் உனக்கு எத்தகைய பயனையும் தராது. எவ்வளவு காலந்தான் நீ பிறரின் இறக்கை மூலம் பறக்க முடியும். உனக்கே சொந்தமான பூங்காவில் உன் இறக்கை மூலம் பறக்க கற்றுக்கொள்"**

பாமர மக்களுக்காகவே அல்லாமா இக்பால் கவிதை வடித்தார். இவரது கவிதைகளில் படிப்பினைகள் இருந்தன. ஆழ்ந்த, புரட்சிகரமான திருப்பங்களை உள்ளத்தில் பாய்ச்சின.

20 ஆம் நூற்றாண்டில் உருதுக் கவிஞர்கள் சகலரும் மரபுக் கவிதைகளையே பாடினர். பெண்ணையும், விண்ணையும் வண்டையும் பூவையும் வர்ணித்து பாடினர். சூரியன், சந்திரன், கடல், காற்று, ஆகாயம் இவைதான் அக்கால கவிஞர்களின் பொருள் நாதமாக திகழ்ந்தன. ஆனால் அதே காலத்து மகா கவி இக்பால் அவர்கள் பாடியது மக்களைத்தான். உழைக்கும் மக்களையும் அடிமைப்படுத்தப்பட்ட மக்களையும் பாடினார். சில் தெறிக்கும் கண்ணீர் என்ற சொல் வீச்சுக்களால் இளைஞர் சமுதாயத்தை கவர்ந்திழுத்தார் அவர். இக்பால் அவர்கள் சுண்டியிழுக்கும் விதத்தைப் பாருங்கள்:

**ஓ... இளைஞனே!**
**இளைப்பாறுகிறாயா?**
**இளைப்பாறும் நேரம்**
**உனக்கெங்கிருக்கிறது?**
**உன் சமூகத்தை வழிநடத்த**
**வேண்டிய பொறுப்பு**
**உன் தோள்களில் உள்ளபோது**
**உன்னால் இளைப்பாற**
**முடிகிறதா?**


அல்லாமா இக்பாலிடம் மத உணர்ச்சி இருந்தது. அந்த மத உணர்ச்சியில் எந்தவிதமான குறுகிய தன்மைகளும் தனிப்போக்குகளும் காணப்படவில்லை. கவிதைத் துறையிலும் சரி, பொது வாழ்விலும் சரி, மார்க்க விடயத்திலும் சரி குறுகிய சிந்தனையும் போக்கும் அவரிடம் கிஞ்சித்தும் இருக்கவில்லை.

–லரீப் சுலைமான்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. உறுப்பினராக பலஸ்தீன் விண்ணப்பித்தால் கைதிகளை விடுவிக்கமாட்டோம்

## இஸ்ரேல் தெரிவிப்பு



ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் உறுப்பினராகும் முயற்சியை பலஸ்தீன் மீண்டும் தொடங்கியுள்ளது. பல ஆண்டுகளாக நீடித்துவரும் இஸ்ரேல் - பலஸ்தீன பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி கடந்த ஆண்டு ஜுலை மாதம் இரு நாடுகளிடையே பேச்சுவார்த்தையைத் தொடங்கினார்.

பேச்சுவார்த்தையின் போது, ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் உறுப்பினராகும் முயற்சியைக் கைவிடவும், இஸ்ரேல் மீது சட்டநடவடிக்கை எடுப்பதை நிறுத்திக் கொள்ளவும் பலஸ்தீன் ஒப்புக்கொண்டது. அதற்குப் பதிலாக, இஸ்ரேலிய சிறைகளில் பல ஆண்டுகளாக அடைத்து வைக்கப்பட்டுள்ள பலஸ்தீனியர்கள் 104 பேரை ஏப்ரல் 29 ஆம் திகதிக்குள் படிப்படியாக விடுவிக்க இஸ்ரேல் ஒப்புக் கொண்டது.

அதன்படி, சிறையிலிருந்து பலஸ்தீனியர்களை விடுவித்து வந்த இஸ்ரேல் அரசு, எஞ்சியுள்ள 26 பேரை விடுவிக்க திடீரென்று மறுத்துவிட்டது. இதனால் அதிருப்தியடைந்த பலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ், ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் உறுப்பினராகும் முயற்சியை மீண்டும் தொடங்கியுள்ளார்.

## மலேசிய விமானம் தேடுதலுக்கு 11 மில்லியன் டொலர்கள் செலவு

மலேசிய விமானம் தேடுதல் செலவு 11 மில்லியன் டொலர்களை பிடித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த மாதம் 8ஆம் திகதி விண்ணில் பயணித்த போது மாயமான மலேசிய விமானம் தேடுதல் வேட்டையில் அதிக செலவு வைத்துள்ளது.

இது குறித்து சிட்னி மார்னிங் ஹெரால்ட் வெளியிட்டுள்ள செய்தியில், அமெரிக்க கடற்படையில் இதுவரை 3.6 மில்லியன் டொலர்கள் தேடுதல் வேட்டைக்காக ஒதுக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து இடத்தைக் கண்டறியும் பிஞ்சர் லொகேட்டர் நிறுவுதல், கடல் நீருக்கடியில் தேடுதல் வேட்டை மற்றும் விமான கருப்புப் பெட்டி கண்டறிதல் உள்ளிட்டவற்றுக்கு 3.3 மில்லியன் டொலர் செலவழித்துள்ளனர்.

# 8 இலட்சம் பேரைப் பலிகொண்ட ருவாண்டா இனப்படுகொலை நிகழ்ந்து 20 வருட நிறைவு

1994 ஆம் ஆண்டு ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் ஹுட்டு இனத்தார் துத்ஸி இனத்தவர் மீது நிகழ்த்திய இனப்படுகொலையால் 8 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர்.

வரலாற்றில் நிகழ்ந்த மிக மோசமான இனப்படுகொலைகளில் ஒன்று எனக் கருதப்படும் இச்சம்பவம் நிகழ்ந்து இன்றுடன் 20 வருடங்கள் ஆகின்றன.

இந்நிலையில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் இந்த இனப்படுகொலையை ஐ.நா. தடுக்கத் தவறியது உண்மை என்றும் இது வெட்கக்கேடானது என்றும் தெரிவித்துள்ளார். இந்த இனப்படுகொலை நிகழ்ந்த பின்னர் இதில் சம்பந்தப்பட்ட சுமார் 20 இலட்சம் பேர் மீது உள்நாட்டு நீதிமன்றங்கள் மற்றும் அண்டை நாடான தன்ஸானிய நீதிமன்றம் ஆகியவற்றில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# சிரிய அகதிகள் முகாமில் கலவரம்



வடக்கு ஜோர்தானில் சாதரிலுள்ள சிரிய அகதிகள் தங்கியிருக்கும் முகாமில் கலவரம் நடந்தது. இதில் 22 ஜோர்தான் பாதுகாப்பு படையினருக்கு காயம் ஏற்பட்டது. அகதி ஒருவர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியானது. ஆனால், இதனை ஜோர்தான் அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

ஏராளமான அகதிகள் காயமடைந்தனர். கூடாரங்கள் மற்றும் வாகனங்களை தீ வைத்துக் கொளுத்த முயன்ற அகதிகளைக் கலைக்க பொலிஸார் கண்ணீர் புகை பிரயோகித்தனர். 1,06,000 சிரிய அகதிகள் இம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு துவங்கப்பட்ட இம் முகாமில் அடிப்படை வசதிகள் இல்லை என்று குற்றஞ்சாட்டி போராட்டங்கள் நடைபெறுவது வழக்கம். சிரியாவின் எல்லையிலிருந்து 12 கி.மீ. தொலைவிலுள்ள பாலைவனத்தில் இந்த முகாம் அமைந்துள்ளது. கிழக்கு கென்யாவில் ததாப் அகதி முகாமுக்கு அடுத்து உலகிலேயே மிகப் பெரிய அகதிமுகாமாக சாதரி திகழ்கிறது.

முகாமை விட்டு சட்டவிரோதமாக வெளியேற முயன்ற அகதிகளை கைது செய்ததைத் தொடர்ந்து கலவரம் வெடித்ததாக ஜோர்தான் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# கடும் பட்டினியை நோக்கி ரோஹிங்கிய முஸ்லிம்கள்

## -ஐ.நா. தெரிவிப்பு-



மியன்மாரின் மேற்கு முகாம்களில் தங்கியிருக்கும் ரோஹிங்கிய முஸ்லிம்கள் கடுமையான பட்டினியை நோக்கி நகருவதாக ஐ.நா. எச்சரித்துள்ளது. குறைந்த நாட்களுக்கு தேவையான சுத்தமான குடிநீரும் உணவும் மட்டுமே மீதமிருப்பதாகவும் உணவு விநியோக குழுக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் நிலைமையை மோசமாக்கியிருப்பதாகவும் ஐ.நா. வின் மனித உரிமை ஒருங்கிணைப்பு செயலகம் அறிவித்துள்ளது.

ராக்கேன் மாநில முகாம்களில் தங்கியுள்ள 20 ஆயிரத்திற்கும் அதிகமான ரோஹிங்கிய முஸ்லிம்கள் பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளனர். மனித உரிமை அமைப்புகள் மீது தீவிரவாத புத்தர்கள் நடத்திய தாக்குதல் காரணமாக உணவு விநியோகம் தடைப்பட்டது. இதன் மூலம் நெருக்கடி உருவாகியுள்ளது.

உதவிகளை விநியோகிக்கும் குழுக்களில் ரோஹிங்கிய முஸ்லிம்கள் இடம் பெற்றிருந்தனர் என்று குற்றஞ்சாட்டி இத்தாக்குதல் நடந்தது. உதவிகளை விநியோகிக்கும் குழுவினர் மதச் சின்னங்களை மோசமாக பயன்படுத்தியதாகவும் முஸ்லிம்களுக்கு மட்டுமே உதவிகளை வழங்கியதாகவும் புத்தர்கள் குற்றஞ்சாட்டினர். இத்தாக்குதல் குறித்து மிகுந்த கவலை தெரிவித்த மனித உரிமை அமைப்புகள் மியன்மாரில் செயல்பாடுகளை நிறுத்தி வைத்துள்ளனர்.

மியன்மாரின் மக்கள் தொகையில் 5 சதவீதம் கொண்ட ரோஹிங்கிய முஸ்லிம்கள் அங்கு கடுமையான கொடுமைகளுக்கும் பாரபட்சங்களுக்கும் இலக்காகி வருகின்றனர். நாட்டின் குடியுரிமை கிடைக்காத இம்மக்கள் மீது அரச ஆதரவுடன் புத்த தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். புத்த தீவிரவாதிகளின் தாக்குதலால் நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டு, ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

# சுவீடனில் இனி 6 மணிநேரம் மட்டுமே வேலை நேரம்

சுவீடன் நாட்டில் முழு சம்பளத்துடன் ஆறு மணிநேரம் மட்டுமே வேலை செய்யும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய வேலை நேர மாற்றத்தினால் ஊழியர்களின் உடல் மற்றும் மனம் புத்துணர்ச்சியுடன் இருக்கும் என்றும் ஊழியர்களின் விடுமுறைகள் குறையும் என்றும், வேலையும் சுறுசுறுப்பாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றன.

சுவீடன் நாட்டிலுள்ள Gothenburg என்ற நகரின் மேயர், ஆறு மணிநேரம் வேலை என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். அரச ஊழியர்கள் அடிக்கடி உடல்நிலை சரியில்லாத காரணத்தால் விடுமுறை எடுக்கின்றனர் என்றும் அதற்கு காரணம் அவர்கள் 8 மணிநேரம் தொடர்ந்து வேலை செய்வதால் உடல் மற்றும் மன அழுத்தம் ஏற்படுகிறது என்றும் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டன.

## அணு உலை கதிர்வீச்சால் 1000 குழந்தைகளுக்கு புற்றுநோய்

அணு உலையிலிருந்து கதிர்வீச்சு பாதிப்பு பற்றி உலக நாடுகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது. என்றாலும், இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் இன்னும் அணு உலைகளை அமைப்பதில் தீவிரங்காட்டி வருகின்றன.

ஜப்பான் நாட்டிலுள்ள புகுஷிமா அணு உலையிலிருந்து வெளிப்படும் அதிக கதிர்வீச்சால் குழந்தைகள் தைரோய்ட் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

18 நாடுகளை சேர்ந்த 80 விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் 1000 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிப்புக்குள்ளானவர்களுக்கு தைராய்டு, இரத்தம், மார்பகம் மற்ற உறுப்புகளும் பாதிக்கும் அபாயமும் உள்ளன.

## சிரியாவில் 65 சதவீத இரசாயன ஆயுதங்கள் அகற்றம்

கடந்த 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சிரியாவில் இரசாயன குண்டு வீச்சில் பொதுமக்கள் 1400 பேருக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதும் சிரியா மீது போர் தொடுக்க அமெரிக்கா ஆயத்தமானது.

இதைத் தொடர்ந்து ரஷ்யா அமெரிக்க கூட்டு உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி சிரியாவிலுள்ள இரசாயன ஆயுதங்களை அகற்றுவதற்கான முயற்சியை ஐ.நா. சர்வதேச இரசாயன தடுப்பு அமைப்பு மேற்கொண்டது.

அதன்படி, சிரியாவிலிருந்து இரசாயன ஆயுதங்களை ஏற்றிச்செல்லும் கப்பல், அமெரிக்க கப்பலுக்கு மாற்றப்படும். இவை பன்னாட்டு கடல் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு அழிக்கப்படும். சிரியாவிலுள்ள 1300 வுடன் இரசாயன ஆயுதங்களை வரும் 2014, ஜுன் மாதத்திற்குள் அகற்றப்பட முடிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொகுப்பு:
எஸ். ஸஜாத் முஹம்மத் (இஸ்லாஹி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் துரோகத்திற்கு முன்னால் துருக்கியின் எதிர்காலக் கனவு

எச்.ஏ. றிஸாம் அல்ஹகீம்
இஸ்தான்புல் பல்கலைக்கழகம், துருக்கி

கடந்த பல மாதங்களாக நாளுக்கு நாள் சூடேறிக் கொண்டே செல்லும் துருக்கியின் அரசியல் நிகழ்வுகள் யார் சரி, யார் பிழை, உண்மையான குழப்பக்காரர்கள் யார் என்பதை தீர்மானித்துக் கொள்வதில் குழப்பநிலையை ஏற்படுத்தியிருந்தன. எனினும், இன்றைய நிலையில் சில அடிப்படைகளைவைத்து நோக்கும்போது குறைந்தபட்சம் யாருடைய பக்கத்தை பலப்படுத்த வேண்டும் என்பதை இலகுவாக புரிந்துகொள்ள முடியும். மாத்திரமன்றி, நாடு எதிர்நோக்கியிருக்கும் அபாயகரமான நிலையையும் எடைபோட்டுப் பார்க்க முடியுமாக உள்ளது.




**பிரதமர் ரஜப் தய்யிப் அர்துகானைப் பொறுத்தவரை தனது அரசியல் வாழ்வு முழுவதும் பல சவால்களையும் போராட்டங்களையும் தாண்டி எந்தவொரு கட்டத்திலும் மக்கள் சக்தியைத் தவிர வேறு எந்தவோர் உலகளாவிய சக்திக்கு முன்னாலும் அடிபணியாத ஒரு கதாநாயகன். குறிப்பாக, நாட்டை மூடிய மர்ம அறைகளுக்குள் இருந்து நிர்வகித்துக் கொண்டிருந்த பல்வேறு சக்திகளுக்கெதிராக தனிநபராக நின்று போராடி மக்களின் உள்ளங்களில் இடம்பிடித்தவர்.**

துருக்கி இன்று எதிர்நோக்கியிருக்கும் குழப்பநிலை, இதற்கு முன் எதிர்கொண்ட அனைத்து சவால்களிலிருந்தும் சற்று வேறுபட்டதாகும். காரணம், ஒருவருக்கொருவர் எதிராக போர்க்கொடி தூக்கியிருக்கும் இருதரப்பினருமே இஸ்லாமியவாதிகள். அதேவேளை, துருக்கியின் இன்றைய வளர்ச்சிக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாரிய பங்களிப்புச் செய்தவர்கள் என்பதோடு, இருதரப்பினருக்கும் பின்னாலிருப்பது ஒரே மக்கள் சக்தி என்பதாகும்.

பிரதமர் ரஜப் தய்யிப் அர்துகானைப் பொறுத்தவரை தனது அரசியல் வாழ்வு முழுவதும் பல சவால்களையும் போராட்டங்களையும் தாண்டி எந்தவொரு கட்டத்திலும் மக்கள் சக்தியைத் தவிர வேறு எந்தவோர் உலகளாவிய சக்திக்கு முன்னாலும் அடிபணியாத ஒரு கதாநாயகன். குறிப்பாக, நாட்டை மூடிய மர்ம அறைகளுக்குள் இருந்து நிர்வகித்துக் கொண்டிருந்த பல்வேறு சக்திகளுக்கெதிராக தனிநபராக நின்று போராடி மக்களின் உள்ளங்களில் இடம்பிடித்தவர். இவையனைத்திற்கும் மத்தியில் கடந்த 80 ஆண்டு காலமாக நாடு காணாத பொருளாதார மற்றும் சகல துறைகளிலுமான அபிவிருத்தியை வெறும் 10 ஆண்டுகளுக்குள் சாதித்துக்காட்டிய ஒரு சாதனையாளர்.

மறுபுறத்தில் குலன் அமைப்பைப் பொறுத்தவரை நாட்டின் கல்வித்துறைக்கு பரியதொரு பங்களிப்புச் செய்த ஓர் அமைப்பு. தூரநோக்குடன் செயலாற்றுகின்ற நாடு தழுவிய ஓர் இயக்கம். அரசியல் மட்டத்தில், மிகவும் செல்வாக்கு மிக்க ஓர் அமுக்கக்குழுவாகவும் இருந்து வந்துள்ளது. சர்வதேச மட்டத்தில் இவ்வமைப்பின் பாரிய வளர்ச்சி பிரமிப்பூட்டத்தக்கதாகும். அமைப்பின் ஊழியர்கள் 160 இற்கு மேற்பட்ட நாடுகளில் இன, மத நல்லிணக்கம் மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றனர். சர்வதேச அளவில் பிரபலமான மதங்களுக்கிடையிலான கலந்துரையாடல் செயற்திட்டத்தில் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய ஒரு குழுவாகவும் குலன் அமைப்பு இருந்து வந்துள்ளது.

அர்துகானின் அரசாங்கமும் குலன் அமைப்பும் அண்மைக்காலம் வரை பரஸ்பரம் ஒருவருக்கொருவர் மிக ஒத்துழைப்பாக இருந்து வந்துள்ளனர். குலன் அமைப்பினருடனான இந்த தீவிர உறவு காரணமாக அரசாங்கம் பிற இஸ்லாமிய அமைப்புகளாலும் எதிர்க்கட்சிகளாலும் அவ்வப்போது கடுமையாக விமர்சிக்கப்பட்டு வந்துள்ளது. உண்மையில் இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கான அடிப்படைக் காரணமும் இங்கிருந்துதான் தோற்றம் பெறுகின்றது. அதாவது, நீதி மற்றும் பாதுகாப்புத் துறையைத் தொடர்ந்து நாட்டின் புலனாய்வுப் பிரிவையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பது குலன் இயக்கத்தின் மிக முக்கிய இலக்காக இருந்தது. ஆனால் இந்த விடயத்தில் யாருடனும் எந்தவிதமான பேரம் பேசலுக்கும் பிரதமர் அர்துகான் தயாராக இருக்கவில்லை. இந்தப் பிரிவு தனக்கு மிகவும் விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதில் மிகத் தெளிவான நிலைப்பாட்டை கொண்டிருந்தார். எனவே, புலனாய்வுப் பிரிவின் தலைவராக தனக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய ஹாகான் ஃபிடான் என்பவரை நியமித்தார். இந்த விடயத்தில் ஏமாற்றமடைந்த குலன் அமைப்பினரின் இதற்குப் பின்னரான செயற்பாடுகள் இவர்கள் மீதிருந்த பரவலான சந்தேகத்தை வலுப்படுத்தக் காரணமாக இருந்தது.

புலனாய்வுப் பிரிவின் தலைவராக ஹாகான் ஃபிடான் நியமிக்கப்பட்டதிலிருந்து அரசாங்கத்துடனான குலன் அமைப்பின் உறவுகளில் பாரிய விரிசல் ஏற்பட்டது. புலனாய்வுப் பிரிவையும் தமது கட்டுப்பட்டிற்குக் கீழ் கொண்டுவருவதன் மூலம் நாட்டு நிர்வாகத்தின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டையும் தமது செல்வாக்கின் கீழ் கொண்டுவரும் இவர்களது திட்டம் தோல்வியடைந்தமையே இந்த விரிசலுக்கான அடிப்படைக் காரணமாகும். இதன் பின்னர் ஹாகான் ஃபிடானை ஈரானிய உளவாளியாக சித்தரிப்பதற்காக குலன் அமைப்பினர் பாரியதொரு பிரயத்தனம் மேற்கொண்டனர். குறிப்பாக, ஹாகான் ஃபிடானும் அர்துகானை சூழவுள்ள ஏனையவர்களும் அர்துகானை பிழையாக வழிநடத்துவதாக ஒரு குற்றச்சாட்டு இவர்களால் முன்வைக்கப்பட்டது.

இந்த விரிசல் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட இருந்த தனியார் பகுதிநேர வகுப்புகளை (நாட்டிலுள்ள 25 வீதமான தனியார் பகுதிநேர வகுப்புகள் குலன் அமைப்புக்கு சொந்தமானவை என்பதும் இவ்வகுப்புகள் இயக்கத்திற்குத் தேவையான மனித வளத்தை உள்வாங்கும் மிக முக்கிய நிறுவனம் என்பதும் குறிப்பிடத்தக்கது.) தனியார் பாடசாலைகளாக மாற்றும் சட்டமூலத்தை தொடர்ந்து வெளிப்படையான மோதலாக மாறத் தொடங்கியது. இதனால் குலன் அமைப்பிற்கு சில பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் இருந்தமை உண்மை என்ற போதிலும் குலன் அமைப்பிற்கு சொந்தமான ஊடகங்கள், நீதிக்காக குரல் கொடுப்பதை விடுத்து, அரசாங்கத்தின் மீது வெறுப்பூட்டுவதற்கான முயற்சிகளையே மேற்கொண்டனர். இந்த முறுகல்நிலை தொடர்ந்து கொண்டிருக்கையில், அடுக்கடுக்காக அரங்கேறிய துருக்கி அரசியலில் பாரிய அதிர்வுகளை ஏற்படுத்திய பல நிகழ்வுகள் இந்த சந்தேகத்தை மென்மேலும் வலுப்படுத்தியது.

இம்முயற்சிகள் எதிர்பார்த்த விளைவுகளை கொடுக்காததைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகள் மற்றும் குலன் அமைப்புக்கு சொந்தமான ஊடகங்களால் அரசாங்கத்தின் மீது சேறுபூசும் நடவடிக்கைகள் மிகவும் திட்டமிடப்பட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அர்துகான் அரசாங்கத்தை பயங்கரவாதிகளுக்கு உதவி புரிபவர்களாகவும் தீவிரவாதிகளை போஷித்து வளர்ப்பவர்களாகவும் காண்பிக்க மேற்கொள்ளப்பட்ட பகீரத முயற்சி. நிலைமையை மென்மேலும் மோசமாக்கியது. சிரியா மக்களுக்காக துருக்கி அரசாங்கத்தாலும் நன்கொடை நிறுவனங்களாலும் அனுப்பி வைக்கப்பட்ட உதவிக் கொள்கலன்கள் சிரியாவிலுள்ள அல்காயிதா தீவிரவாதிகளுக்கு ஆயுதம் கொண்டு செல்லப்படுகின்றன என்ற போர்வையில் தடுக்க முயற்சித்தமை இதற்கு நல்ல உதாரணமாகும்.

மிகவும் திட்டமிடப்பட்டு கன கச்சிதமாக அரங்கேற்றப்பட்ட இந்நிகழ்வுகள் அரச தரப்பை பாரிய அதிர்ச்சிக்குள்ளாக்கியது மாத்திரமன்றி, எல்லைமீறிச் செல்லும் நிகழ்வுகளை வழமை போன்ற சாதாரண நிர்வாக பொறிமுறையினூடாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியாதிருந்தமை, அரச ஊழியர்கள் அரச தரப்பிலிருந்து வரும் கட்டளைகளுக்கு தலை சாய்க்காது வெளியிலிருந்து வரும் அநாமேதேய கட்டளைகளுக்கேற்ப செயற்பட்டமை என்பன அரச பொறிமுறையில் எதிர் நிலைப்பாட்டை ஏற்படுத்தியது. எனவே, நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக வேகமாக சில சட்ட திருத்தங்களை செய்வதற்கும் பொலிஸ் அதிகாரிகள், அரச வழக்கறிஞர்கள் உட்பட சந்தேகத்திற்கிடமான அரச அதிகாரிகளை இடமாற்றம் செய்வதற்கும் அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

இவ்வாறான ஒரு நிலையில் ஊடகங்களிளுக்கு கசிந்த தொலைபேசி ஒட்டுக்கேட்டல் விவகாரம் நாடு முழுவதும் பாரிய அதிர்வுகளை தோற்றுவித்தது. அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் இராணுவத் தளபதிகள், ஊடகவியலாளர்கள், நன்கொடை நிறுவனங்கள் என பலதரப்பட்ட 2000 இற்கும் மேற்பட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களின் தொலைபேசி அழைப்புகள் கடந்த மூன்று வருடங்களாக ஒட்டுக்கேட்கப்பட்டுள்ளன. இதேபோன்று நாடுமுழுவதும் பிரதேசவாரியாக கிட்டத்தட்ட 3 இலட்சம் பேரின் தொலைபேசி அழைப்புகள் ஒட்டுக் கேட்கப்பட்டுள்ளன. தேசிய இரகசியங்களாகக் கருதப்படும் இவ் உரையாடல்கள் வெளிநாட்டு புலனாய்வு நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்பட்டிருக்கலாம் என்ற பலமான சந்தேகம் அரச தரப்பில் காணப்படுகின்றது.

இந்நிகழ்வுகள் துருக்கியின் அரச கட்டமைப்புக்குள் ஊடுருவியிருக்கும் ஒருவகையான சமாந்தரக் கட்டமைப்பின் உள்ளமையும் குறித்த கட்டமைப்பின் தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்கியிருப்பதும் உறுதியாகி இருக்கின்றது.


இவை பாரிய தேசத் துரோக நடவடிக்கையே அன்றி, வேறில்லை. ஆனால் இதற்குப் பின்னால் இருக்கும் மிகப் பெரிய கேள்வி, குலன் அமைப்பைப் போன்ற ஓர் இஸ்லாமிய அமைப்பு இவ்வாறான கீழ்த்தரமான வேலையை செய்ய முன்வருமா என்பதாகும். உண்மையில் இக்கட்டமைப்பின் உள்ளமை உறுதி செய்யப்பட்டிருக்கின்ற நிலையில் யார் இவர்கள் என்பது சம்பந்தமான இரண்டு வகையான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன.

முதலாவது, அரச பொறிமுறைக்குள்ளும் குலன் அமைப்பிற்குள்ளும் ஊடுருவியிருக்கும் ஒரு குழு இரு தரப்பிற்குமே பிழையான தகவல்களை வழங்குவதன் மூலமும் ஆங்காங்கே இருதரப்பையும் சீற்றமூட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் ஒருவரையொருவர் மோதவிட்டு அரச தரப்பையும் குலன் அமைப்பையும் பலமிழக்கச் செய்ய முனைகின்றது.

இரண்டாவது, அரச பொரிமுறைக்குள் ஊடுருவியிருக்கும் குறித்த சமாந்தரக் கட்டமைப்பு முற்றுமுழுதாக குலன் அமைப்பின் ஒரு செயற்திட்டம் என்பதும் குலன் அமைப்பின் மேல் மட்டத்திலிருந்து வரும் கட்டளைகளுக்கு ஏற்பவே இவர்கள் செயற்படுகின்றனர் என்பதுமாகும். இந்த சாத்தியப்பாட்டை வலுப்படுத்தும் பலமான ஆதாரங்கள் அம்பலத்திற்கு வந்திருக்கின்றன.

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Facebook அறிமுகம்

Facebook முகப்பில் உளள பல விடயங்கள் தொடர்பாக பலரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவற்றைத் தெளிவுபடுத்தும் நோக்கோடு மிகச் சிறிய விளக்கங்களோடு இப்பகுதியைத் தொகுத்துத் தருகிறேன்.

Facebook இல் காணப்படும் பகுதிகளை பிரதானமாக பின்வருமாறு பிரிக்கலாம்:

1. Graph Search
2. Profile & Timeline
3. Home & Newsfeed
4. Pages
5. Groups
6. Apps
7. Message
8. Event

இவைதான் Facebook இன் பிரதான பகுதிகளாக இருப்பினும் அதன் கட்டமைப்பைப் பொறுத்தவரையில் சற்று வித்தியாசமாக அமைந்துள்ளது. மேலே உள்ள அனைத்தையும் உள்ளடக்கிய வாறு அதன் கட்டமைப்பை இவ்வாறு பிரிக்கலாம்:

1. Header
2. Right Menu
3. Reminder & Advertisement
4. Activity Feed & Chat
5. Status update & Newsfeed

## Header




### Graph Search

Facebook இல் காணப்படும் தேடல் வசதியே இது. கூகுளில் தேடும்போது இணையதளங்களிலுள்ள பல விடயங்கள் எமக்குக் கிடைப்பதுபோல இதில் தேடுகின்றபோது Facebook இல் காணப்படும் நபர்கள், பக்கங்கள் மற்றும் புகைப்படங்கள் போன்ற பல விடயங்களை இதில் பெற்றுக் கொள்ளலாம்.

### Timeline & Home Button

Timeline என்பது ஒருவரினது தனிப்பட்ட பக்கம் போன்றது. அதில் அவர் பதிவேற்றுகின்ற விடயம் உட்பட பல விடயங்கள் காணப்படும். இதனை Facebook profile பற்றிப் பார்க்கின்றபோது விரிவாகப் பார்ப்போம்.

Home என்பது உங்கள் Facebook கணக்கிற்கு உள் நுழைந்ததும் தோன்றும் முதல் பக்கம் ஆகும்.

இவ்வாறு இரண்டு பட்டண்கள் காணப்படுவதற்கான காரணம், ஒருவர் Facebook இல் எங்கு சென்றாலும் மீண்டும் முதல் பக்கத்திற்கு வருவதற்கு உதவியாக Home Button உம் உங்கள் Profile ஐப் பார்வையிடுவதற்கு வசதியாக Timeline Button உம் காணப்படுகின்றன.

### Notifications




Notifications என்றால் உங்களுக்கு ஒரு செய்தி வந்துள்ளது என்பதற்கான அறிவித்தல் குறிகாட்டியாகும்.

அதாவது, பொதுவாக Facebook இன் Header இல் 03 வகையான Notifications காணப்படும்.

1. Friend Request

உங்களுக்கு யாராவது நட்பு அழைப்பு விடுத்திருந்தால் அது Friend Request ஆகக் காட்டப்படும்.


2. Message

உங்களுக்கு யாராவது Message அனுப்பியிருந்தால் அதுவும் Notifications ஆகக் காட்டப்படும்.

3. Notifications

உங்களை யாராவது Tag பண்ணியிருந்தால் அல்லது நீங்கள் Like பண்ணிய பக்கங்களிலிருந்து Get Notifications என்பதை நீங்கள் தெரிவு செய்திருந்தால் அவை Notifications ஆகக் காட்டப்படும்.

### Privacy Shortcut




Facebook இல் உங்கள் privacy இற்கான சில Shortcut இதில் காணப்படும். Privacy தொடர்பாக பார்க்கும் போது விரிவாகப் பார்க்கலாம்.

Use facebook as:

நீங்கள் Facebook page களை நிர்வகிப்பவராயின் இவ்வாறான ஒரு வசதி உங்களுக்குக் கிடைக்கும்.

- Create Page
- Manage Page
- Create Ad
- Manage Ad
- Activity log
- Setting
- Log out

என்பன காணப்படும்.

மிகுதி அடுத்த இதழில்...

ஜே.எம். அஸீம் (நளீமி)
www.azeemzain.org
azeemnaleemi@gmail.com

# கவலைப்படாதே சகோதரா

காட்டில் பலசாலியான ஒரு சிங்கம் இருந்தது. அது எப்போது பார்த்தாலும் கவலைப்பட்டுக் கொண்டே இருக்கும்.

எனக்கு இவ்வளவு பலம் இருந்தும் இரும்பு போன்ற நகங்களும் பற்களும் இருந்தும் என்ன உபயோகம்? கேவலம், இந்தக் காட்டுச் சேவல் கூவுகிற சத்தம் என்னை நடுங்கவைக்கிறது. இப்படிப் பயந்துகொண்டே வாழ்வது ஒரு வாழ்க்கையா? என்று தன்னைத்தானே நொந்துகொண்டது.

அதே சமயம், அங்கே ஒரு யானை வந்தது. அது மிகவும் கவலையுடன் தன் காதுகளை முன்னும் பின்னும் அடித்துக்கொண்டே நகர்ந்தது.


அதைப் பார்த்த சிங்கம், ஏய் ஜம்போ! உனக்கு என்ன கவலை? யாருமே உன்னை எதிர்த்து சண்டைபோட மாட்டார்களே! உன் உடலைப் பார்த்தாலே, எல்லா மிருகங்களும் பயந்து ஓடுமே... எதற்காக நீ கவலையோடு இருக்கிறாய்? என்று ஆச்சரியத்துடன் கேட்டது.

அதற்கு யானை, இதோ... என் காதுக்கு பக்கத்தில் பறக்கும் குளவியைப் பார்த்தாயா? இது என் காதுக்குள் நுழைந்து கொட்டிவிட்டால், அவ்வளவுதான்... என் உயிரே போய்விடும்! அதற்காகத்தான் இது என் காதுக்குள் போய்விடாதபடி, காதுகளை ஆட்டிக்கொண்டு கவலையோடு நடக்கிறேன் என்றது.

அதனைக் கேட்ட சிங்கம் யோசித்தது. இவ்வளவு பெரிய உடம்பை வைத்திருக்கும் யானை கவலைப்படாது என்று நினைத்தால், அதுகூடக் கவலைப்படுகிறதே. அப்படியானால், பூமியில் இருக்கும் எல்லா உயிர்களுக்கும் ஏதாவது ஒரு கவலை இருக்கத்தான் செய்யும் போலிருக்கிறது!

கவலைப்படுவதால் வாழ்க்கை ஒன்றும் நமக்கேற்றமாதிரி மாறப்போவதில்லை. அது மட்டுமல்லாமல், கவலைப்பட்டு, கவலைப்பட்டு நம் கண்ணெதிரே இருக்கும் ஜாலியான விஷயங்களைப் பார்த்து சந்தோஷமாகக்கூட வாழமுடியாமல் போய்விட்டதே என்று அது புரிந்துகொண்டது.

அன்றிலிருந்து சிங்கம் கவலைப்படுவதை விட்டுவிட்டு ஜாலியாக வாழத் தொடங்கியது.






# பாட்டி வீட்டுப் பழம் பானை

பாட்டி வீட்டுப் பழம் பானையடா
அந்தப் பானை ஒரு புறம் ஓட்டையடா
ஓட்டை வழி ஒரு சுண்டெலியும் அதன்
உள்ளே புகுந்து நெல் தின்றதடா
உள்ளே புகுந்து நெல் தின்று தின்று
வயிறு ஊதிப் புடைத்துப் பருத்தடா
மெள்ள வெளியில் வருவதற்கும்
ஓட்டை மெத்தச் சிறிதாகிப் போச்சுதடா
பானையைக் காலை திறந்தவுடன்
அந்தப் பாட்டியின் பக்கமாய் வந்த ஒரு
பூனை எலியினைக் கண்டதடா
அதை அப்படியே கௌவிச் சென்றதடா
கள்ள வழியில் செல்பவரை எமன்
காலடி பற்றித் தொடர்வானடா!
நல்ல வழியில் செல்பவர்க்கு இறைவன்
நாளும் துணையாக நிற்பானடா!

குழந்தைக் கவிஞர், அழ.வள்ளியப்பா




# ஒரு வரிச் செய்திகள்

- அன்னாசிப் பழத்துக்கு விதைகள் கிடையாது
- குதிரைக்கு கருப்பு நிறம் மட்டுமே தெரியும்
- யானைக்கு வெள்ளை நிறம் பிடிக்காது
- உலகிலேயே மிகவும் அபாயகரமான பிராணியாகக் கருதப்படுவது ஈ
- உலகிலேயே மிக அமைதியான நகரம் ரங்கூன்
- சுறா மீனுக்கு இரண்டு கருப்பைகள் உள்ளன
- ஆப்கானிஸ்தானில் புகையிரத வசதி இல்லை

# உங்களால் முடியுமா?

உகங்ளால் இப்பகக்த்தை பக்டிக முந்டிதால் உகங்ளை பாட்ராடியே ஆக வேடுண்ம். 100குக் 55 மகக்ளால் மடுட்மே இபப்டி பக்டிக முயுடிம்.

நீகங்கள் எபப்டி தைஇ பக்டிறீகிகர்ள் என்று உளாகங்ளேயே நபம் முயடில்லைவியா?

ஆசச்ரிமாயன ஆறற்ல் கொடண்து மதனினின் ளைமூ. ஒரு ஆய்ராச்யிசில், கேபிம்டரிஜ் பகல்க்லைழகம் இந்த உமைண்யை கடுண்பிடித்ள்துளது. எத்முக்துகள் எந்த வசையிரில் உளள்து எபன்து முகிக்மியல்லை. முதல் எத்முதும் கசிடையாக உள்ள எத்துமும், சயாரின இத்டதில் உளள்தா எபன்தை மடுட்ம் பாத்ர்தால் போதும். எனாதல் எறான்ல், மதனினின் மூளை முதல் எத்முயுதைம், கைடசி எத்முயுதைம் மடுட்மே பக்டிகும். பாக்யுகிள்ள எத்முதுகக்ள் தாகனாவே உவாள்பங்கப்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவுற்றிருக்கும் பெண்கள் கவனத்திற்கு



இன்றைய வணிக உலகம் எல்லோரையும் அமிலக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறதோ என்று தோன்றுகிறது. புற்றிலுள்ள ஈசல் போலக் கிளம்பும் வாசனைப் பொருட்கள் கருவிலிருக்கும் குழந்தையையே பாதிப்படைய வைக்கிறது எனும் அதிர்ச்சியான ஆராய்ச்சி முடிவு ஒன்றை வெளியிட்டுள்ளனர் ஸ் கொட்லாந்து எடின்பரா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.

மற்றோரைப் போலவே தாய்மை நிலையிலிருக்கும் பெண்களும் முகப் பூச்சுகளையும் வாசனை பொருட்களையும் பயன்படுத்துகின்றனர். ஊடகங்களும் தேவையற்ற பொருட்களை தாயின் அத்தியாவசியத் தேவை என விளம்பரம் செய்கின்றன. ஆனால், அவை தாய் தன்னை அறியாமலேயே தன் குழந்தைக்கு வழங்கும் நோய் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது, இந்த ஆய்வு.

குறிப்பாக, கருவில் இருக்கும் குழந்தை ஆணாய் இருந்தால் பிற்காலத்தில் ஆண்மைக் குறைவு, குறைந்த உயிரணுக்கள் எண்ணிக்கை போன்ற சிக்கல்கள் வருவதற்கு வாய்ப்பு அதிகமாக இருக்கிறது.

எட்டு வாரம் முதல் பன்னிரெண்டு வாரங்கள் வரையிலான தாய்மைக் காலத்தில் கருவிலிருக்கும் குழந்தைகளின் இனப்பெருக்க உறுப்புகள் உருவாகின்றன. சில ஓமோன்கள் இந்தக் காலகட்டத்தில் தூண்டப்பட்டு ஆண் குழந்தைகளின் இனப்பெருக்க உறுப்புகளுக்கான அடித்தளத்தை அமைக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் தாய் பயன்படுத்தும் வாசனை பொருட்கள் குழந்தையின் ஓமோன் தூண்டுதலைத் தடைசெய்கின்றன.

இந்த அமிலங்களால் புற்றுநோய் வரும் வாய்ப்பு கூட இருப்பதாக அவ்வாய்வு மேலும் தெரிவிக்கிறது. எனவே, தாய்மை நிலையில் இருக்கும் பெண்கள் அழகு, வாசனைப் பொருட்களை அறவே தவிர்ப்பதே நல்லது என வலியுறுத்துகிறது, அந்த ஆய்வு.



## மின்சாரம் இல்லையா?

மின்சார விளக்கை எப்போதும் நம்பிக் கொண்டிருக்க வேண்டாம். இரவில் திடீரென மின் தடையால் விளக்கு அணைந்துவிட்டால், சுலபமாக எடுக்கக் கூடிய இடத்தில் மெழுகுவர்த்தியையும் தீப்பெட்டியையும் எப்போதும் தயாராக வைத்திருக்கவும்.

மெழுகுவர்த்தியை ஏற்றி, அதற்கு பின்புறம் முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றை வைத்தால், அதிக வெளிச்சம் கிடைக்கும்.

எமர்ஜென்சி லைட் ஒன்றை வாங்கி வைத்துக்கொள்ளவும்.


மண்ணெண்ணெய் ஊற்றி ஏற்றப் படும் லாந்தர் விளக்கு ஒன்றும் கைவசம் இருக்கட்டும்.

பனை ஓலை விசிறிகளை வாங்கி வைத்துக்கொள்ளவும்.

மண் பானை மற்றும் சட்டிகள் இருந்தால் தண்ணீர், பால் மற்றும் காய்கறிகளை வைத்துக்கொள்ள உதவும்.

டோர்ச் லைட் மிக முக்கியம்.






தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

**நன்மை தரும் ஏழு**

1) ஏழ்மையிலும் நேர்மை
2) கோபத்திலும் பொறுமை
3) தோல்வியிலும் விடாமுயற்சி
4) வறுமையிலும் உதவி செய்யும் மனம்
5) துன்பத்திலும் துணிவு
6) செல்வத்திலும் எளிமை
7) பதவியிலும் பணிவு

**வழிகாட்டும் ஏழு**

1) சிந்தித்து பேச வேண்டும்
2) உண்மையே பேச வேண்டும்
3) அன்பாக பேச வேண்டும்
4) மெதுவாக பேச வேண்டும்
5) சமயம் அறிந்து பேச வேண்டும்
6) இனிமையாக பேச வேண்டும்
7) பேசாதிருக்க பழக வேண்டும்

**நல்வாழ்வுக்கான ஏழு**

1) மகிழ்ச்சியாக இருக்க பழகுங்கள்
2) பரிசுத்தமாக சிரிக்கக் கற்று கொள்ளுங்கள்
3) பிறருக்கு உதவுங்கள்
4) யாரையும் வெறுக்காதீர்கள்
5) சுறுசுறுப்பாக இருங்கள்
6) ஒவ்வொரு நாளையும் உற்சாகமாக வரவேற்க தயாராகுங்கள்
7) மகிழ்ச்சியாக இருக்க முயற்சி செய்யுங்கள்

**கவனிக்க ஏழு**

1) கவனி உன் வார்த்தைகளை
2) கவனி உன் செயல்களை
3) கவனி உன் எண்ணங்களை
4) கவனி உன் நடத்தையை
5) கவனி உன் இதயத்தை
6) கவனி உன் முதுகை
7) கவனி உன் வாழ்க்கையை







# அரிசி வகைகளும் அதன் பயன்களும்

எமது உணவில் முக்கிய இடம்பிடிப்பது அரிசி உணவே. அரிசி உணவில்தான் எத்தனை வகைகள். அரிசி உணவில் மட்டுமல்ல அரிசியிலும் ஏராளமான வகைகள் உள்ளன. அவற்றுக்கு தனித்தனியாக நன்மைகளும் உள்ளன.

**புழுங்கல் அரிசி**

தற்போது நாம் சாப்பிடும் புழுங்கல் அரிசி பாலிஷ் செய்வதாகக் கூறி அதிலுள்ள ஏராளமான விட்டமின்களும் சத்துக்களும் நீக்கப்பட்டு விடுகின்றன. பல முறை தண்ணீரில் கழுவி, நன்கு வேகவைத்து கஞ்சியை வடித்துவிட்டு வெறும் சக்கையாக சாப்பிட்டு வருகிறோம். எனவே, பாலிஷ் செய்யப்படாத அரிசியே உடலுக்கு ஏற்ற உணவாக இருக்கும்.

**புழுங்கல் அரிசியிலுள்ள நன்மைகள்**

புழுங்கல் அரிசி எளிதாக, விரைவாக ஜீரணம் ஆகக்கூடிய தன்மைகொண்ட உணவாகும். அரிசி சாதம் முழுமையாக ஜீரணமாக ஒரு மணிநேரம் கூட போதுமானது. பைபர் குறைவாக உள்ள உணவாகவும் புழுங்கல் அரிசி உள்ளது. எளிதாக ஜீரணம் ஆகக்கூடிய உணவுப் பொருட்களை சாப்பிட வேண்டிய குழந்தைகள், வயதானவர்களுக்கு புழுங்கல் அரிசி சாதம் ஏற்ற உணவாக இருக்கும்.

**பச்சரிசி**

நெல்லை அவிக்காமல் அதிலிருந்து அரிசியை எடுப்பதே பச்சரிசியாகும். இது அவிக்கப்படாத அரிசி என்பதால், ஜீரணம் ஆக கடினமாகவும் அதிக நேரம் எடுக்கும் உணவாகவும் கருதப்படுகிறது. பச்சரிசி சாப்பிட்டால் உடல் சதைப் பிடிப்பு ஏற்படும் என்று கூறுவார்கள். எனவே, உடல் மெலிந்தவர்கள் பச்சரிசியை சாப்பிடலாம்.

**பச்சரிசியின் நன்மைகள்**

பச்சரிசியை சாப்பிட்டால் உடலில் கொழுப்புச் சத்து அதிகமாகும். உடல் மெலிந்து கொழுப்புச் சத்தே இல்லாமல் பலவீனமாக உள்ளவர்கள் பச்சரிசி சாதம் சாப்பிடலாம். இதனால் உடலும் பருமனாகும். ஆனால், வயிறு மற்றும் ஜீரண உறுப்புகளில் பிரச்சினை உள்ளவர்கள் பச்சரிசியை தவிர்க்க வேண்டும்.

**சிகப்பரிசி**

சிகப்பரிசி உடல் நலனுக்கு மிகவும் ஏற்ற உணவாகும். ஆனால், இந்தியாவில் சிகப்பரிசியை பயன்படுத்தி உணவு தயாரிப்பது மிகவும் அரிது. புழுங்கல் அரிசியை விட இது விலை அதிகம் என்பதாலும் இதன் சுவை மற்ற [illegible] தில்லை என்ப[illegible] பயன்படுத்துவது மிக மிகக் குறைவு. ஒரு சில மாநிலங்களில் மட்டும் சிகப்பரிசியை உணவுக்குப் பயன்படுத்துகிறார்கள்.

**சிகப்பரிசியின் நன்மைகள்**

சிகப்பரிசியில் அதிகமான பைபர் உள்ளது. இதனை சாப்பிடுவதால், இரத்தத்தில் அதிகமான கொழுப்பு சேர்வது தவிர்க்கப்படுகிறது. மேலும், சிகப்பரிசியில் எண்ணெய்த் தன்மை இருப்பதால் இரத்த அழுத்தம் குறைகிறது. உடலுக்குத் தேவையான கொழுப்புச் சத்து போதிய அளவுக்குக் கிடைக்கிறது. மேலும், சிகப்பரிசி சாதத்தை சாப்பிட்டால்,



உணவில் சர்க்கரையின் அளவு சேர்வது மிக தாமதமாக நடைபெறும். சிகப்பரிசியில் மேலும் ஏராளமான விட்டமின்களும் சத்துக்களும் உள்ளன. இது இயற்கையிலேயே உடலுக்கு ஏற்ற உணவாகும்.

**பாஸ்மதி அரிசி**

இந்தியாவில் உற்பத்தியாகும் அரிசியில் பாஸ்மதி அரிசியும் ஒன்று. எவ்வாறு புழுங்கல் அரிசியில் பல்வேறு ரகங்களும் பல்வேறு விலைகளிலும் விற்கப்படுகிறதோ அதுபோலவே, பாஸ்மதி அரிசியிலும் ஏராளமான வகைகள் உள்ளன. பாஸ்மதி அரிசி வெள்ளை மற்றும் பிரவுன் நிறங்களில் உள்ளது.

மற்றைய அனைத்து அரிசி வகைகளையும் விட பாஸ்மதி அரிசியில் நிறைய பைபர் அடங்கியுள்ளது. இதில் பல வகையான உணவு வகைகளை தயாரிக்கலாம். இந்த அரிசிக்கென்று தனியாக மணமும் சுவையுமுண்டு. இதில் உடலுக்கு நன்மை பயக்கும் சில வேதி குணங்களும் அடங்கியிருப்பதால், மற்றைய ஏனைய அரிசிகளை விட, பாஸ்மதி அரிசி உடலுக்கு பல நன்மைகளை தருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் வாக்குகளை...

(09 ஆம் பக்கத் தொடர்)

வெற்றிலை சின்னத்துக்கும் யானை சின்னத்துக்கும் வாக்களிப்போர் தொகை அதிகரித்து வருவதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை. மொத்தத்தில் இ.தொ.கா. வைச் சுற்றி நிறைய எதிரிகள். இதன் செல்வாக்கை மழுங்கடித்து வாக்குகளைத் தனதாக்கிக் கொள்வதற்கு பேரினவாதக் கட்சிகளும் அதன் அடிவருடிகளும் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன.

மேல் மாகாணத்தில் அதற்குக் கிடைத்த பின்னடைவு இந்த எதிர்க்கட்சிகளுக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் நிச்சயம் அளித்திருக்க வேண்டும்.

ஆனால், இவற்றை எல்லாம் இக்கட்சி ஆழ அகலமாக ஆராய்ந்து விவாதித்த மாதிரித் தெரியவில்லை. ஏனெனில் அங்கே தலையாட்டுபவருக்கே மரியாதையே தவிர, ஆய்வாளர்களுக்கு அல்ல. கூடி விவாதித்து முடிவுகள் எடுக்கும் பண்பும் பழக்கமும் அங்கிருந்தால் இந்தளவுக்கு செல்வாக்கு சுருங்கிச் செல்லுமா என்ன?

இராதா கிருஷ்ணனை கொழும்பில் பிரதான வேட்பாளராக அது நிறுத்தியது மிகப் பெரிய தவறான முடிவு. இராதா கிருஷ்ணன் என்றைக்குமே தேர்தலில் வேட்பாளராக நின்று வெற்றி பெற்றவர் அல்ல. அவர் மக்களால் விரும்பப்படும் ஆளுமை கொண்ட ஓர் அரசியல்வாதியும் அல்ல. ஆலயில்லா ஊரில் வேப்பம் பூ சர்க்கரையாம் என்கிற மாதிரி அரசியலுக்கு வந்தவர், இராதா கிருஷ்ணன். வேளார் குலத்தவரின் வாக்குகளை சேகரிப்பதற்காக நிறுத்தப்பட்டார் என்று வைத்துக் கொண்டாலும், மேல் மாகரண வாழ் வேளாளர்கள் இவருக்கு வாக்களித்த மாதிரியும் தெரியவில்லை. ஆக, மேல் மாகாணத்தில் சேவல் சின்னத்தில் இராதா கிருஷ்ணனை முன்னிலைப் படுத்தி களமிறங்க வேண்டும் என்ற யோசனையை முன்மொழிந்த புண்ணியவான் யாறென்றே கேட்கத் தோன்றுகிறது.

இ.தொ.கா. மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் தலைவர்களை வளர்க்கத் தவறியது தோல்விக்கு பிரதான காரணம். தேர்தலுக்காக திடீரென ஒரு குரங்கைப் பிடித்துவந்து இதுதான் பிள்ளையார் என்றால் வாக்காளர்கள் அதை நம்புவதற்கு முட்டாள்களா? யோகராஜனை போஷித்து வைத்துக் கொள்ளாமல் திடீரென ஒருவரைப் பிடித்துவந்து இவருக்கு வாக்களியுங்கள் என்றால் வாக்கு கிடைக்குமா? இ.தொ.கா. மேல் மாகாணத்தில் நிறுத்திய வேட்பாளர்களில் ஒருவர் கூட 'ஸ்டார்' வேட்பாளர் கிடையாது.

மேல் மாகாணத்தில் தனக்கு பின்னடைவு என்பதை புரிந்து கொண்டிருந்தால் இ.தொ.கா. ஒரு கூட்டணியை அமைக்க முன்வந்திருக்க வேண்டும். அல்லது மனோ கணேசனின் வெற்றிக்காக மேல் மாகாணத்தில் போட்டியிடாமல் இருந்திருக்க வேண்டும். சப்ரகமுவ மாகாணத் தேர்தலில் மலையகக் கட்சிகள் போட்டியிடுமானால் தமிழ்ப் பிரதிநிதித்துவம் அடிபடும் என்பதால், ஒரு போட்டித் தவிர்ப்பு செய்து கொள்ளப்பட்டது.

அத்தேர்தலில் இ.தொ.கா. மட்டுமே பொது வேட்பாளர் என்ற அடிப்படையில் போட்டியிட, ஏனைய கட்சிகள் ஆதரவளித்தன. இரத்தினபுரி மாவட்டத்தில் ஒருவரும் கேகாலை மாவட்டத்தில் ஒருவருமாக இரண்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் அந்த இருவரும் பொது உறுப்பினர்களாக செயல்படாமல் இ.தொ.கா. உறுப்பினர்களாகவே செயல்படுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். இது ஒரு கபடத்தனம்.

இதனால்தான் பொது வேட்பாளர்கள் என்ற பேச்சு மேல் மாகாணத்தில் எழவில்லை. இ.தொ.கா.வும் கிருஷ்ணாவின் நவோதயாவும் ஏன் களத்தில் இறங்கின என்பதற்கான காரணத்தை மக்கள் அறிந்தே வைத்திருந்தனர். வாக்குகளை சிதறடிக்க வந்தவர்களுக்கு தமிழ் வாக்காளர்கள் நல்ல பாடம் புகட்டியிருக்கிறார்கள் என்ற அளவில் மகிழ்ச்சியே!

## இனவாத தீயில்...



(05 ஆம் பக்கத் தொடர்)

வில்பத்து சரணாலயத்து எல்லையில் பூக்குளம் என்ற சிங்களக் கிராமமொன்றை அமைத்து, 150 இற்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றியபோது வனஜீவராசி அதிகாரிகளும் இந்த இனவாதிகளும் எங்கிருந்தனர்?

முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்துக்காக இப்படி இனவாத சிந்தனையுடன் செயற்படும் இவர்களை தட்டிக்கேட்க யாரும் இல்லையா?

இந்த செயற்பாடுகளை சர்வதேசமயப் படுத்தி இனவாதிகளின் கொட்டத்தை அடக்க அரசியல்வாதிகளும் முஸ்லிம் சிவில் அமைப்புகளும் புத்திஜீவிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய காலம் வந்திருக்கிறது.

இவ்விடயத்தில் அனைத்து இஸ்லாமிய இயக்கங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இலங்கையிலுள்ள அனைத்து நாட்டு தூதரகங்களுக்கும் இவ்விடயம் தெரியப் படுத்தப்பட வேண்டும்.

பௌத்த சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இதன் உண்மை நிலை தெரியப் படுத்தப்பட வேண்டும்.

உணர்ச்சிவசப்பட்டு ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு ஊர்வலங்கள் என இறங்குவதற்கு முன்னர் சட்டரீதியாக அணுகி வெற்றி பெற முயற்சிக்க வேண்டும். இவ்விடயத்தில் முஸ்லிம் சட்ட ஆலோசகர்களும் சட்டத் தரணிகளும் பொறுப்புணர்ச்சியுடனும் சமூக சிந்தனையுடனும் நடந்துகொள்ள வேண்டும்.

வில்பத்து காட்டில் எரிந்து கொண்டிருக்கும் இனவாதத் தீயை அணைத்துவிட திட்டமிட்டு காய்நகர்த்த வேண்டும்.

## பாராளுமன்ற...

(05 ஆம் பக்கத் தொடர்)

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு மாதகாலத்துக்கு பாராளுமன்ற அமர்வுகளை பகிஷ்கரிக்கப் போவதாக செய்தி வெளியாகியிருந்ததை தான் பத்திரிகைகளில் படித்ததாகவும் அதில் எந்தவோர் உண்மையும் இல்லை என்றும் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை சர்வதேச ரீதியில் இழிவுபடுத்த திரைமறைவில் செயற்படும் ஒரு சிலரின் திட்டமிட்ட பொய்யுரைப்பே இது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

என்னதான் நடக்குது இவர்களுக்குள்ளே?

என்று கேட்பதைத் தவிர மகா ஜனங்களுக்கு வேறு வழியில்லைதான்.

இதில் யார்விட்ட அறிக்கை உண்மையானது, யார் சொல்வது பொய்யானது? என்றெல்லாம் ஜோசித்து, நமக்கெதிராக யாரும் குரல் கொடுக்கமாட்டார்கள் என்று இவர்களுக்குத் தெரியும். உலகக் கிண்ண கிரிக்கற் வெற்றியும் தமிழ் - சிங்கள புத்தாண்டு பிக்னிக்கிலும் மூழ்கியிருக்கும் முஸ்லிம் சமூகம் நமது இந்த 'டூப்புகளையெல்லாம்' பெரிதாக அலட்டிக்கொள்ளாது, கிலுகிலுப்புக்காகவேனும் அறிக்கை மட்டும் விட்டுக் கொள்வோம். பாராளுமன்றமாவது, பகிஷ்கரிப்பாவது என்ற நிலைப்பாடுதான் இவர்களுடையதே அன்றி, வேறில்லை.

எனவே, பாராளுமன்ற பகிஷ்கரிப்பு என்பதெல்லாம் வெறும் பம்மாத்துத்தான்.

## சர்வதேச பாடசாலைகள்...



(06 ஆம் பக்கத் தொடர்)

எல்லாவற்றுக்கும் மேலாக இவை கௌரவ ஸீ.டப்ளியூ.டப்ளியூ. கன்னங்கரா அவர்கள் அறிமுகப்படுத்தியது. இலவச கல்வியானது ஏழை, பணக்காரன் என்ற வேறுபாட்டை உடைத்தெறிந்து இந் நாட்டின் பிள்ளைகள் எல்லோரும் சமமானவர்கள் என்ற உயரிய கொள்கையைப் போதிக்கின்றது. இதனால், இலவசக் கல்வியானது போற்றப்படவும் காக்கப்படவும் வேண்டியதாகும்.

### முஸ்லிம் பெற்றோரின் கவனத்திற்கு

சர்வதேச பாடசாலைகளுக்கு தம் பிள்ளைகளை அனுப்ப விரும்பும் பெற்றோர் இயன்றவரை இஸ்லாமிய சர்வதேச பாடசாலைகளைத் தெரிவு செய்வதே சிறந்ததாகும். ஏனெனில், மாற்று மதத்தவர்களால் நடத்தப்படுகின்ற பெரும்பாலான பாடசாலைகள் மாணவரிடையே மேற்கத்தேய கலாசாரங்களையே வளர்க்கின்றன. சில பாடசாலைகள் தமது மார்க்க அனுஷ்டாண நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு முஸ்லிம் மாணவர்களையும் நிர்ப்பந்திக்கின்றன. இவற்றுக்குச் செல்லும் முஸ்லிம் பெண் பிள்ளைகள் அறை குறை ஆடைகளோடு மேடை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். சில சர்வதேச பாடசாலைகள் ஹிஜாப் அணிவதற்கு தடைவிதித்துள்ளன. மற்றும் சில பாடசாலைகளில் ஹிஜாபை பகிரங்கமாக விமர்சிக்கின்றன. மேலும் முஸ்லிம் பெண் பிள்ளைகளுக்கு தமது மார்க்க விதிமுறைகளுக்கேற்ப சீருடை அணிவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

சிலர் விடுகின்ற மற்றுமொரு தவறுதான், தமது பொருளாதார நிலைமைகளைக் கருத்தில் கொள்ளாது சர்வதேச பாடசாலைகளில் தமது பிள்ளைகளை சேர்த்துவிட்டு பணம் செலுத்த வழியின்றி திண்டாடுகின்றனர். சிலபோது மாதாந்தக் கட்டணங்களைக்கூட சரிவர செலுத்த முடியாமையினால் இவர்களது பிள்ளைகள் மாதக்கணக்கில் வகுப்பிலிருந்து இடைநிறுத்தப்படுகின்றனர். இறுதியில் தொடர்ந்து பணம் செலுத்த வழியின்றி பிள்ளை ஆங்கில மொழிமூலம் 4ஆம் 5ஆம் தரம் வரை கற்றிருக்கின்ற நிலையில் அவர்களை அரச பாடசாலை ஒன்றில் சேர்த்து விடுகின்றனர். அவ்வளவு காலமும் ஆங்கில மொழிமூலம் கற்றுவிட்டு அரச பாடசாலையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலம் கற்கவேண்டி இருப்பது அடுத்த பிரச்சினையாகி விடுகின்றது. இந் நிலைமையில் அரச பாடசாலை அதிபர்கள் கூட இப்பிள்ளைகளை எந்த வகுப்பில் சேர்ப்பது என்ற பாரிய பிரச்சினைக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது.

இதனால், பிள்ளைகளின் கல்வியே பாதிப்படைகிறது.

கல்வி என்பது ஒரு சமூகத்தின் முதுகெலும்பாகும். தம் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்க விரும்பும் பெற்றோர் எப்போதும் இஸ்லாமிய நெறிமுறைகளின் அடிப்படையில் அமைந்த, தமது வருமானத்துக்கு ஏற்ப பாடசாலைகளைத் தெரிவு செய்வதே அறிவுடைமையாகும்.

## மாபெரும் துரோகத்திற்கு...



(13 ஆம் பக்கத் தொடர்)

*1)* ஆரம்ப முதலே அரசாங்கத்தின் மீதான சேறுபூசும் நடவடிக்கையில் குலன் அமைப்புக்கு சொந்தமான ஊடகங்கள் மும்முரமாக ஈடுபட்டமை. குறிப்பாக, அரசாங்கத்தை பயங்கரவாதக் குழுவென்று முத்திரை குத்துவது மாத்திரந்தான் குறை வென்ற அளவுக்கு அரசாங்கத்தை அல் காயிதா போன்ற அமைப்புகளுடன் தொடர்புபடுத்தி சர்வதேச மட்டத்தில் அதன் செல்வாக்கை இழக்கச் செய்ய முற்பட்டமை. அமைப்பின் அரசாங்கத்துடனான உறவை முறித்துக் கொள்வதற்கான காரணமாகக் கூட இந்த விடயத்தை பகிரங்கமாக முன்மொழிந்தமை. போதாக் குறைக்கு எதிர்காலத்தில் அரசாங்கம் பயங்கரவாதத்திற்கு உதவி செய்த குற்றத்திற்காக சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்கப்படலாம் என்று குஷித்த ஊடகங்கள் மிகவும் உறுதியாக எதிர்வு கூறின.

*2.* குலன் அமைப்பின் இஸ்தாபகரும் தலைவருமான பத்ஹுல்லாஹ் குலன் அமெரிக்காவில் குடிகொண்டிருப்பதும் துருக்கியில் பல வருடங்களாக சுமுகமான நிலை காணப்படுகின்ற போதிலும் மிகவும் பிடிவாதத் தன்மையுடன் தாய் மண்ணுக்கு திரும்பாமலிருப்பதுமாகும். இவரது இந் நிலைப்பாடு பல சந்தேகங்களுக்கு வழி கோலுவதாக உள்ளது.

*3.* குலன் அமைப்பின் பிழையான போக்கை காரணங்காட்டி பத்குல்லாஹ் குலனுக்கு மிகவும் நெருக்கமான பலர் அவ்வமைப்பிலிருந்து ஒதுங்கிக் கொண்டமையும், அமைப்பின் இரகசிய நடவடிக்கைகள், செயற்பாடுகள் தொடர்பாக அவர்களால் வெளிவிடப்பட்ட அறிக்கைகளும் இந்த அமைப்பின் உண்மை நோக்கங்களை அம்பலப்படுத்தியிருக்கின்றன.

*4.* குலன் அமைப்பின் அனைத்து அங்கத்தவர்களிடமும் காணப்படும் மார்க்கத்திற்கு முற்றிலும் முரணான ஒரு வகையான குறுட்டு நம்பிக்கையாகும். அதாவது இவர்களது நம்பிக்கைப்படி பத்குல்லாஹ் குலன் ஆன்மிகரீதியில் அதி உச்சமட்டத்தை அடைந்த ஓர் இறை நேசர். முடிவுகள் எடுக்கும்போது எப்போதுமே ஆன்மிக உலகில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் மஷூரா செய்தே முடிவுகளை எடுப்பார், எனவே அவர் எடுக்கும் முடிவுகளில் எந்தவித தவறுக்கும் இடமிருக்காது; அனைத்தும் சரியானதே என்ற நம்பிக்கை.

விளைவு இன்று துருக்கியில் இஸ்லாமியவாதிகளுக்கு மத்தியில் குலன் அமைப்பு ஓர் இஸ்லாமிய அமைப்பாக நோக்கப்படுவதில்லை. தமது உலகளாவிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இஸ்லாத்தை போர்வையாக பயன்படுத்தும் ஒருவகை புல்லுருவிகளாகவே பலராலும் நோக்கப்படுகின்றன. ஏறக்குறைய ஏனைய அனைத்து இஸ்லாமிய அமைப்புகளுமே இவர்களுக்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டுள்ளன.

இவ்விடத்தில் அர்துகானையும் அவரது அரசாங்கத்தையும் மிகவும் தூயவர்களாகவும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்களாகவும் சித்தரிக்க முற்படவில்லை. எனினும் அவரது ஆதரவாளர்களுக்கு இன்றுவரை அவ்வாறான ஒரு சுய விமர்சனம் செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவே இல்லை. காரணம் அவரது ஆதரவாளர்கள் அவரிடம் வைத்திருக்கும் அன்பும் நம்பிக்கையுமாகும்.

இந்நிகழ்வுகளே அண்மைய துருக்கிய தேர்தலில் அர்துகானை அமோக வெற்றியீட்ட வழிவகுத்திருக்கிறது. எனினும் துருக்கியின் சமூக வாழ்வில் ஏற்படுத்தியிருக்கும் வடு மிகப் பாரதூரமானது. துருக்கி சமூக நிலைக்கு [illegible] எடுக்கலாம்.

## நோம்புக்கு...

முன் பக்கத் தொடர்

இலங்கை அரசாங்கத்தின் பெயரில் அனுப்பப்பட்டிருந்ததால் அது அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு ஏற்ப பண்டிகைக் கால பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். ரமழான் மாதத்துக்கென சவூதியிலிருந்து மீண்டும் பேரீச்சம் பழம் [illegible] என்பது பற்றி இப்போதைக்கு எதுவும் கூறமுடியாது என்றும் அது சவூதி அரசாங்கத்தைப் பொறுத்த விடயம் என்றும் அந்த அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நூற்றுக்கணக்கான ...

முன் பக்கத் தொடர்

இவை 1990 ஆம் ஆண்டு போரின் போது காணாமல்போன முஸ்லிம்களின் எலும்புக்கூடுகளாக இருக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு குறிப்பு

# அறிவுலகம்

## பொது அறிவுச் சஞ்சிகை

ஏ. எம்.பாயிஸ்




உலகில் நாளுக்கு நாள் பல்வேறு விடயங்கள் புதிது புதிதாக நடந்துகொண்டே இருக்கின்றன. அவற்றையெல்லாம் மக்கள் தேடித் தேடி கற்றுக்கொண்டு தமது அறிவினை வளர்த்துக் கொள்கின்றனர்.

அச்சு ஊடகங்களின் வெளியீடுகளான பத்திரிகைகள் சஞ்சிகைகளின், மக்கள் அதன் பயன்பாடுகளை உணர்ந்து ஆவணமாக வைத்துக்கொள்ளும் நோக்கோடும் இன்றும் இவற்றை வாங்கிப் படிப்போரின் எண்ணிக்கையும் மெல்ல மெல்ல நகரத்தான் செல்கின்றன. அத்தோடு அச்சு ஊடகங்களின் புதிய வரவுகளும் வாசகர் மத்தியில் காலூன்றத்தான் செய்கின்றன.

மக்களிடம் கொண்டு செல்வதற்காக ஊடகங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. இதில் இலத்திரனியல் ஊடகங்கள், அச்சு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் முக்கியமானவையாகும். ஆனால் காலத்தின் நவீனத்திற்கேற்ப பல்வேறு ஊடக வடிவங்கள் மக்கள் பாவனைக்கு வந்ததால் அச்சு ஊடகங்களின் செல்வாக்கு மெல்ல மெல்ல குறைந்து வருவதாகவே உணரப்படுகிறது.

அப்படியொரு புதிய வரவுதான் அறிவுலகம் சஞ்சிகையாகும். இச்சஞ்சிகை அறிவுலகம் பதிப்பகத்தாரரால் இம்மாதத்திலிருந்து (ஏப்ரல்) மாதம் ஒரு முறை வெளிவரும் பொது அறிவுச் சஞ்சிகையாகும்.

இதில் மாணவர்கள், இளைஞர்களுக்குத் தேவையான பல்வேறு பொது அறிவுத் தகவல்கள் மற்றும் சுவாரஸ்யமான கட்டுரைகளும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அழகிய வர்ண கலர் அட்டைகளுடன் பல சுவாரஸ்யமான தகவல்களுடன் வெளிவந்திருக்கும் இச்சஞ்சிகை அனைவரினதும் அறிவுத் தேடலுக்கு உந்து சக்தியாக அமையும் என்பதில் இரு வேறு கருத்துக்கள் கிடையாது.

# மறிச்சுக்கட்டி...

முன் பக்கத் தொடர்

வில்பத்து சரணாலயத்தை ஆக்கிரமித்து முஸ்லிம்கள் அத்துமீறி குடியேறுவதாக பொதுபல சேனா சுமத்தியுள்ள குற்றச்சாட்டை அடுத்து முசலி பிரதேச அபிவிருத்திக் குழுவுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

முசலி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முஸ்லிம்கள் 1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள். அப்போது இப்பிரதேச பிரிவுக்குள் 84.1% முஸ்லிம்கள் வாழ்ந்தனர். 1995 ஆம் ஆண்டு இங்குள்ள அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டபோது முஸ்லிம்கள் புத்தளம் மற்றும் வேறு பிரதேசங்களில் வாழ்ந்ததால் அவர்களால் காணிகளை பெற முடியவில்லை. தற்போது அவர்களுக்கு சொந்தமான காணிகளிலேயே முஸ்லிம்கள் மீள்குடியேறியுள்ளனர். இதில் வெளி இடங்களைச் சேர்ந்த எவரும் உள்வாங்கப்படவில்லை. மேலும் மறிச்சுக்கட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஜாசிம் நகர வீடமைப்புத் திட்டம் உட்பட எந்தவொரு மீள்குடியேற்றத் திட்டமும் வில்பத்து தேசிய சரணாலய எல்லைக்குள் இடம்பெறவில்லை என்பதையும் என்னால் அத்தாட்சிப்படுத்த முடியும்.

# வெள்ளைமணல்...

முன் பக்கத் தொடர்

இந்த நிலம் விமானப்படைக்குரியது என்ற அறிவிப்பு பலகைகளும் நடப்பட்டுள்ளன.

விமானப்படையின் இந்தக் காணி சுவீகரிப்பு காரணமாக அந்த பகுதி மக்களின் வாழ்விடமும் வாழ்வாதாரமும் இழக்கப்படுவதோடு அவர்களின் அன்றாட சுதந்திரமும் இழக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

போருக்கு பின்னர் கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு படையினரின் தேவைக்கு காணி தேவைப்படுமானால், அதுகுறித்து மாகாண முதலமைச்சரின் ஆலோசனை பெறப்படும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதாபய ராஜபஷ தன்னிடம் தெரிவித்துள்ளதாக ஏற்கனவே கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தெரிவித்திருந்தார்.

விமானப்படையினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள குறித்த காணி விவகாரத்தில் முதலமைச்சரின் ஆலோசனை பெறப்பட்டதா? என்பது தொடர்பில் முதலமைச்சரின் பதிலைப் பெற பல தடவை முயன்றபோதிலும் அவரது தொடர்பு கிடைக்கவில்லை என பீபீசி செய்தி வெளியிட்டுள்ளது.

# பயங்கரவாத...

முன் பக்கத் தொடர்

பயங்கரவாத ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு கூட்டமைப்பு Terrorism Research & Analysis Consortium என்ற அமைப்பே இவ்வாறு வெளியிட்டுள்ளது.

பயங்கரவாத அமைப்பாக பெயரிட்டமைக்கான காரணத்தை விளக்கியுள்ள அவ்வமைப்பு, பொதுபல சேனாவின் நடவடிக்கை மென்மையான இலக்குகள் மீது பயங்கரவாத செயல்களை ஒத்ததாக இருக்கிறது எனத் தெரிவித்துள்ளது.

# சுதந்திரத்துக்கு முன்...

முன் பக்கத் தொடர்

ஏனைய இனங்களை மதித்து நடக்கக்கூடிய மனிதத்துவத்தை பெற முடியாவிட்டால், இலங்கையில் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியாது என்று அமைச்சர் சி.இ.டபிள்யு. குணசேகர தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்களுக்கு மாத்திரமன்றி, ஏனைய மக்களுக்கும் சுயமரியாதையும் கௌரவமும் உண்டு. இலங்கையில் சுதந்திரத்துக்கு முன்னர் ஒரு முஸ்லிம் அரசியல் கட்சியேனும் இருக்கவில்லை. ஆனால், தற்போது 10 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அதே போன்று தமிழ், சிங்கள கட்சிகளும் அதிகரித்துள்ளன. அனைத்து இன மக்களும் அவரவரின் இனங்களை பெருமையாக கருதுகிறார்கள்.

# புருணையில் சில நாட்கள்...

தொடர்-24



——பஷீர் அலி

kinniyabasheerali@gmail.com

ச்சே இவர்கள் சட்டத்துக்கு கட்டுப்படுற என்ற பேருல ரொம்பவும் நல்ல பிள்ளையாகத்தான் காட்டிக் கொள்கிறார்கள்.

சலித்துப்போய் கையில் கொண்டு சென்ற தஸ்தாவேஜுகளை மேசையில் கொண்டு வந்து போட்டார் இஸ்மத் அலி.

அடுத்தவாரம் இஸ்மத் அலியும் புருணையிலிருந்து நாடு திரும்பவேண்டும். பட்டப் படிப்பை முடித்து நாடு திரும்பவிருக்கும் இஸ்மத் அலிக்கு பல்கலைக்கழகந்தான் விமான டிகட் வழங்கவேண்டும்.

அதற்கு முன்னர் இஸ்மத் அலி செய்து முடிக்கவேண்டிய சில வேலைகள் இருந்தன. குறிப்பாக, பல்கலைக்கழக நூலக விடுதி, உட்பட உயர்மட்ட அதிகாரிகள் சிலரிடம் ஒப்புதல் பெறவேண்டும். இஸ்மத் அலி பல்கலைக்கழகம் செல்வதும் சலிப்புடன் விடுதிக்கு வருவதுமாக இருந்தார்.

கையொப்பம் பெறும் ஆவணமொன்றில் ஒருவர் பின் ஒருவர் என ஒழுங்கமைப் பின்படியே கையொப்பம் பெற வேண்டுமாம். ஒருவர் இருந்தால் இன்னொருவர் இல்லை. நான் என்ன செய்ய என அலுத்துக் கொள்வார்.

அந்த ஓடர் இல்லாமல் கையொப்பமிட்டாலும் எந்த பிரச்சினையும் இல்லை. இன்று வராதவரிடம் நாளையாவது பெற்றுக் கொள்ளலாந்தானே. ஆனால், இவர்கள் ரூல்ஸை பின்பற்றுவதில் ரொம்பத்தான் நல்ல பிள்ளையாக இருக்கிறார்கள். முதல் நபர் கையொப்பமிட்டால்தான் இரண்டாம் நபர் கையொப்பமிடுவார். ஆனால் இருவருக்குமிடையே எந்த தொடர்புமில்லை. அப்படி இருக்க, ஏன்தான் இப்படி அலைக்கழிக்கிறார்களோ என்று சலித்துக்கொண்டார், அவர்.

நான் புருணையில் தங்கியிருந்த காலத்தில் அதன் யாதார்த்தத்தைக் கண்டு கொண்டேன்.

ஒவ்வோர் இடத்திலும் அவர்களுக்கென பல சட்டதிட்டங்கள், ஒழுங்கமைப்புகளை செய்து வைத்திருக்கிறார்கள். ஆனால், அதனைக் கண்காணித்து, கட்டுப்படுத்திக் கொண்டிருக்க ஆட்கள் அமர்த்தி செலவு செய்வதை எங்குமே காணமுடியாது.

புருணை முழுவதும் சுற்றிவந்தால் கூட வீதியால் குறுக்கறுக்கும் ஓரிரு போக்குவரத்துப் பொலிஸாரைக் காண்பதுகூட அரிதாகவே இருக்கும். ஆனால், ஏதாவது விபத்துக்கள் நடந்துவிட்டால் ஐந்தே நிமிடங்களில் அங்கு வந்து சேர்ந்து விடுவர், போக்குவரத்துப் பொலிஸார்.

புருணைக்கு சென்று ஒரு வாரம் கழித்த நிலையில் இதுவரை ஒரு பொலிஸ்காரரைத் தானும் நான் காணவில்லை. இங்குள்ள பொலிஸாரைக் காட்டுங்கள் என்று நான் கூறியபோது, நண்பர்கள் இருவரும் பொலிஸ் தலைமையகம் இருக்கும் இடத்துக்கு என்னை அழைத்துச் சென்றனர். ஆனால், துரதிஷ்டவசமாக அங்கு எந்தவொரு பொலிஸாரும் கண்களில் தென்படும்படி வெளியில் இருக்கவில்லை.

பொலிஸ்காரர்களின் நடமாட்டத்தைக் கூட அத்தி பூப்பது போன்று அரிதாகவே காணக்கிடைக்கும் நாடு புருணை என எனது நாட்குறிப்பில் பதிந்துகொண்டேன்.

சில சட்டங்களை சுல்தான் பிறப்பிப்பார். அவர் அறிவித்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டவுடன் மக்கள் அதனை வேதவாக்காக ஏற்று செயற்படுத்த ஆரம்பித்துவிடுவர். அடுத்த பேச்சு பேசமாட்டார்கள். இப்படி சட்டத்துக்கு கட்டுப்பட்டு நடப்பதினால் ஊழல்கள் இங்கு இருக்காதே என்றேன்.

ஊழல் இல்லை என்றில்லை. ஆனால் நமது நாட்டுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவாகும். என்று கூறிய இஸ்மத் அலி, அந்தக் கதையை சொன்னார்:

இலங்கையை சேர்ந்த பொறியியலாளர் ஒருவரும் புருணையை சேர்ந்த பொறியியாலளர் ஒருவரும் சிங்கப்பூரில் உயர் படிப்பைத் தொடர்ந்தனராம். பெரும்பாலும் இருவரும் ஒரே பொருளாதாரப் பின்னணியைக் கொண்டவர்கள். மூன்று வருட முடிவில் உயர்படிப்பை முடித்துக்கொண்டு அவரவர் நாட்டுக்கு சென்றுவிட்டனர்.

அதற்கு அடுத்த வருடம், இலங்கை நண்பர் புருணை நண்பரின் வீட்டுக் சென்றிருக்கிறார். அவர் பெரியதொரு மாளிகை அமைத்து சொகுசாக வாழ்வதைக் கண்ட இலங்கை நண்பர் கேட்டார், நாமிருவரும் ஒரே தொழில் செய்து ஒரே ஊதியம் பெறுபவர்கள்தானே. நான் சிறியதொரு விட்டில்தான் வசிக்கிறேன். உன்னால் எப்படி இந்தப் பெரிய வீட்டை அமைக்க முடிந்தது?

தனது வீட்டு ஜன்னல் ஒன்றைத் திறந்து காட்டிய புருணை நண்பர், அதோ பார்! அங்கே பெரிய பாலம் ஒன்று தெரிகிறதா? ஆம், தெரிகிறது. அந்தப் பாலத்தை நிர்மாணிக்க நான் பொறுப்பெடுத்திருந்தேன். அதில் 50 வீதத்தினை அடித்துத்தான் இந்த வீட்டைக் கட்டினேன் என்றாராம்.

இந்த செய்தியைக் கேட்டுக்கொண்டு நாடு திரும்பிவிட்டார், இலங்கை நண்பர்.

அடுத்த வருடம், இலங்கை நண்பரை சந்திக்க புருணை நண்பர் இலங்கை வந்திருந்தார்.

இலங்கை நண்பர் தன்னைவிட பெரியதொரு மாளிகை அமைத்து படாடோபமாக வாழ்வதை அவதானித்த புருணை நண்பர் கேட்டார்:

நானும் நீயும் ஒரே தொழில் செய்து ஒரே ஊதியம் பெறும்போது, உன்னால் மட்டும் எப்படி இப்படியொரு பெரிய மாளிகையை அமைக்க முடிந்தது?

தனது வீட்டின் ஜன்னலைத் திறந்த இலங்கை நண்பர், அதோ பார்! பாலம் ஒன்று தெரிகிறதா?

இல்லையே, தெரியவில்லையே.

நன்றாகப் பார்; தெரிகிறதா?

இல்லையே, ஒரே ஒரு தூண் மட்டும் நிற்கிறது.

அந்த இடத்தில் நிர்மாணிக்க வந்த பாலத்தை நான் பொறுப்பெடுத்திருந்தேன். அதில் 100% இணை அடித்துத் தான் இந்த மாளிகை!!

தொடரும்...



பொலிஸார் இன்றி வெறிச்சோடிக் கிடக்கும் புருணை பொலிஸ் நிலையமொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண ஓலத்தின் அரவணைப்பில் இதுவுமோர் ஊதுகுழல்

*"புள்ளோய்... வம்பட்டியத் தூக்கிட்டு கெதியா வாங்க..."*

"இதென்னது கையில் வாழக்குட்டியெல்லாம்...? எங்க புடிச்சதோ...?"

"அதல்லாம் மறுகாச் செல்றன், கெதியா வாங்கப்பா..."

சாப்பூட்டுக்குள் போனதும் வந்ததுமாக எடுபிடியாகச் செயற்பட்டாள் மனைவி.

"சும்மா சாதாரண வாழல்லடி, கோழிக்குட்டி"

"மெய்யா, கோழிக் குட்டிதானா?"

அந்த நேரம், இவள் கண்ணையும் வாயையும் பார்க்க வேண்டுமே?

'வாழையைத் தாழ வை, தென்னையை தெரிய வை'

ஆழமாக ஒரு குழியைத் தோண்டி கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து, வாழைக்குட்டி நட்டியாயிற்று.

என்ன பிரயோசனம்? இராப்பகலாக தண்ணீர், மாட்டுச் சாணமும் தெளித்து கடினமாய் பராமரித்தவருக்கு முறித்துப்பார்க்க கொடுத்துவைக்காத சமத்து. இதற்கு, அன்றைய திடீர் சுற்று வளைப்புமப்படி.

"சலீம்... சலீம்..."

கருந்தமிழ் உச்சரிப்பு வந்திருந்த திசைவழியே கணவன் நடந்தான்.

"எங்களுக்கு ஜீனைதீன்ட வீட்டக் கொஞ்சம் காட்டனும்"

"சேர்... புள்ளக்கி செரியான காச்சலாரிக்கி, ஒய்த்தா மாமாக்கிட்ட ஊதிப்பாக்க போப்பறம் சேர்..."

"இதுக்கெல்லாம் அவளவு நேரமெடுக்காதே... சீக்கிரமா திரும்பிடலாம் தானே?"

" இன்னரமெல்லாம் ஜீனைதீன் இருக்கமாட்டானே சேர்... பொழுதோட மீனுக்கு வல உடப் போயிருப்பான்"

"எங்களுக்கு ஊட்ட மட்டும் காட்டினாப் போதும்..."

தளபதியின் கண்டிப்பான குரலில் கணவன் அடங்கிப்போவது பூங்கிளியின் செவிகளில் இலேசாகப் பட்டிருக்கவும் மடியில் படுத்திருந்த செல்வனை கட்டாந்தரையில் கிடத்திவிட்டு, படலைக்கு முன்பாக வந்து நின்றாள்.

லாம்பின் ஒளிச் செத்தைகளுக்கூடாக, வேணுமென்றால் இருளுக்கது கறுப்பு நிற காக்கிச் சட்டையாய் காட்டிருக்கலாம், பத்துப் பதினைந்து பேர்கள் மட்டிலும் கணவனைச் சூழநிற்பது தெளிவாகத் தெரிந்தது.

சீரம் அவசரமாய் படபடக்கவும் என்னமோ எதுவோயென்று பதறினாள். ஏதோவொன்று நடைபெறப் போவதாக மனம் சொல்லிற்று. கணவன் திரும்பின பாதி திரும்பாத பாதியுமாய்,

"ஈனக்கி கொஞ்சமா போய் வாறன் புள்ள... சீக்கிரமா வந்திடுவன்... ஒருவேள வாறத்துக்கு சொணங்கினாலும் புள்ளயக் கொண்டு மாமாக்கிட்ட காட்டுங்க..."

அன்றுபோன கணவன்தான்!

கூரையில் படுத்திருந்த பாணிச் சேவல், அதிகாலை வெளிறலில் கூவியிருந்தும் கூட கணவன் திரும்பவே இல்லை. தொண்டையறுபடப் போகும் கெழுத்தி மீன்குஞ்சு ஊமைப் போராட்டத்தில் மென்று துடித்ததுவாக விக்கி விக்கியெழுந்த கணவனின் அன்றைய கரகரப்புக் குரலும் திரும்பி நின்று அனுதாபமாய் பார்த்த பார்வையும் அவளிருதயத்தை வெகுவாகத் தைத்திருந்தன.

நெஞ்சில் நின்றும் அவன் நினைவுகள் நீங்காதிருக்க, அந்த வாழை மரத்தையே பார்த்தாள். முற்றத்தின் மூலை முடுக்குகளெல்லாம் மா மரங்களும் கொய்யா மரங்களும் ஏராளமாய்க் கிடந்தும் அவைகளின் ஓட்டைகளுக்கூடாக ஒளித் தூசுகளில் கண்ணெறிவது போல், கணவனின் கையால் புதைத்திருந்த இந்த ஒற்றை வாழைதான் நேரடியாகப்பட்டது.

மெல்லிடை நொந்துபோகாமல் வெம்மையாய்ப் பார்த்தாள். மல்லிகைப் பந்தலில் தேன்மாரி பொழிவதாய் தேற்றிற்று. அதனைத் தொட்டு உரசிப்பார்ப்பதில், கணவனின் தேமல் முகத்தை நீவிவிடுதலாக ஒரு துள்ளியளவில் சினேகம்.

இதனைக் காட்டிலும், காய்ந்து சொல சொலத்துப்போன இத்திமரம் கல்லெறிபட்டுச் சரசரக்கும் போதல்லாம், கணவன் பாடித்தீர்க்கின்ற நாட்டார் கவியும் கூட இந்தவொரு வாழை பற்றியதால், அதற்கு இப்படியொரு தனிமதிப்பு.

நாற்றாமணக் குளத்தில் தரித்து நிற்கும் வால்குதிரை போல் ஒய்யாரமாய் அமர்ந்திருந்த கணவன் இரண்டாக வெட்டப்பட்டால், அதன் வேதனையும் வலியும் அவளுக்குத்தான்.

முதல் குலை முற்றிப்போனதும் அதைப் பழுக்கவைத்து, கணவனின் பெயரால் கத்தம் பாத்திஹா ஓதுவதாக நேர்ந்து கட்டியிருந்த பொழுதில், அதன் சாபக்கேடு இப்படி.

உயிர்த் துடிப்பற்று மரத்துப்போன வாழையென்றாலும் பறவாயில்லை. வற்றிப்போன அவன் குடலுக்கு கஞ்சியூற்றிய தகப்பனையல்லவா வெட்டிவிட்டான்?



தகரப்பத்தைக்குள் மாங்கன்று புடுங்கப்போய் சாரைப் பாம்பு நக்கிருந்து நடுக்கம் கண்டபோது, அழகர் மலையின் சிற்றாறாய் மந்திருத்து, மண்டையோடும் புதைத்து உயிர்பிச்சை போட்ட தகப்பனையல்லவா அவதூறு செய்துவிட்டான்?

பூங்கிளி வேதனையில் துடித்தாள். பசுங்கிளியை பாலூட்டி வளர்த்து, பூனையின் வாயிலிட்ட வெறிப்பு அவளுக்கு.

வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சிவிட்ட உபாதியில், அடுப்பில் கொதித்த கத்தரிக் குழம்புக்கு கண்ணுறை செய்யும் துணிவிலும் அவளுள்ளம் ஊற்றடைத்துப்போக, எந்தத் தொய்வுகளுமில்லாது பரவசமாய் உம்மிக்கொண்டிருந்த ஆளும் கட்சியின் கற்புநிலைக்கு, மந்தாரப் பேதலிப்பால் பிரவாகிப்போன வான ஊர்வலங்களும் ஐயனார் மேளதாளங்களும் அவள் செவிகளில் குண்டு துளைக்கவில்லை.

அப்போதெல்லாம், எருமைகளுக்கு ஒரே கொண்டாட்டம். களத்தில் குதித்துவிட்டன. மூக்கணம் குற்றிய எருமைகளும் சாணியரைத்துக் கண்ணூறும், பொன்னாடையும் போர்த்திவிட்ட சில எருதுகளும் மூலைமுடுக்குகளில் திரிய ஆரம்பித்தன.

வால்போஸ்டர்களும் துண்டுப் பிரசுரங்களும் போட்டி போடவும் கொண்டையில் பூ முடித்த சில எருமைகள் தேவாங்குகள் போராட்டத்தில் முந்திக்கொண்டனவோ என்னவோ? இனக்கலவரமும் முடிசூட்டு விழாவும் ஒரே பகுதியில் அதே கட்சியைப் பிளவுபடுத்தி முரடர்களைப் பேரம்பேசி ஈர்த்தன.

கர்வம் பிடித்து தலைக்கனம் வேருட்ட குள்ள நரிகளும் பிணந்தின்னிக் கழுகுகளும் போதையில் தலைசுற்றிப் போனதையடுத்து கத்திக் குத்துகளும் வெட்டுக் காயங்களும் குபீரென பாய முதுகு விளைந்த கிழவர்களும் வேடிக்கை காணும் சிறுவர்களும் நசுக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள். இளைஞர் கடத்தலும் கொள்ளையடிப்புகளும் அன்றுதான் முதன் முதலில் ஆரம்பித்தன.

இத்தனையும் பூங்கிளியின் கிராமத்தில்தான். அவள் குடியிருந்த மாயாக்கல்லி முனையில்தான். ஆனால், இன்னுமவள் புலன்களில் குண்டு துளைக்கவே இல்லை.

திணுக்கிட்டாள் பூங்கிளி. உடல் விறைத்துப் போயிருக்க கசிவு நிலத்தின் அகங்காரத்தை விலக்கி திண்ணைக்கட்டின் முதல்படிக்கு வந்தபோது, மகன் செல்வனைப் பற்றிய கவலை அந்தரித்தது.

தாயின் மனம் பித்துத்தான். கரைந்துபோனாள். வெப்பிசாரங்கள் மலையேறவும் இரங்கினாள்; தலையை நீட்டி அவனைத் தேடினாள்.

"டேய்... மனே...?"

அவனைக் காணவேயில்லை.

"ஒருவேள கோணாங்குட்டி தெறிக்கப் போயிருப்பானோ...?"

பரந்து கிடக்கும் மஸ்தார்மாமாவின் ஆலமரதைக் குறுகினாள்.

ஆலையிலே... சோலையிலே...

ஆலம்பாடிச் சந்தையிலே...

கிட்டிப்புள்ளும் பம்பரமும்...

கிறிக்கியடிக்கப் பாலாறு... பாலாறு... பாலாறு...

அவனுக்கு கீழ்மூச்சு முண்டியடித்தது.

"டேய் வெள்ளத் தம்பி... ஒன்னத்தாண்டா கேக்கன்... செல்வனக் கண்டியா...?"

பூங்கிளியின் அவசரப் புடுக்கையால் அவன் தாய்ப்பொல்லை மற்றப் பொடியனிடம் பதுக்கிவிட்டு, முகங்கொடுத்தான்...

"இன்னா... இப்பதாங்கா கொளறிக்கிட்டு நிண்டான்..."

"எங்கலப் பக்கண்டா...?"

"இன்னா, இதால போகா..."

தாயின் மனம் பித்துத்தான். அவன் விரல் நீட்டிய நெத்தலித் தலையனின் பனங்காட்டு வளவுக்குள், ஆட்டுப்பறனில் சுறுண்டுகிடக்கும் தமயனைக் கண்டவளிதயம் என்னபாடுபட்டிருக்கும்?

ஆட்டுப்பிழுக்கையுடன் காறையெலும்பு நொறுங்கிய சொறிநாய் மூத்திரமும் பிணைந்து 'கிசுமுசு கிசுமுசு' வென்ற துர்நாற்ற மயக்கத்திலல்ல; வயிற்றுப்பசியின் கொடுமையால் சுறுண்டு கிடக்கும் மகனை அணுகினாள்.

நேற்றுக் காலையில் முண்டின அரறாத்தல் பாண்துண்டும் எரிஞ்சி வயிறும் ஒண்டிப்போக, இறுகக்கட்டியிருந்த அறுநாக்கொடியும் இளகிப்போய், களிசனும் நழுவி மெலிந்த எலும்புக் கூட்டுடன் மகனைக் கண்டதும், பெற்றவயிறல்லவா? பத்திற்று.

"என்ர தங்க மகனே...!"

அவன், சுடுதியாய் தாவிவிட்ட நாதிப்பு, பெட்டையை உராய்ந்த கடுவனையும் தூக்கியொரு குத்துக் குத்தினது. மகனின் கையைப் பிடித்தாள். அவன், திருகிவிட்டு பெருவெளிப்பக்கமாய் ஓடினான்.

"வா மன... ஒனக்கு ஒண்டும் செய்யமாட்டன்"

"இல்ல, நீ அடிப்பாய்..."

"இல்ல மன... என்ர புள்ள மேல சத்தியமா, ஒனக்கு நான் அடிக்கமாட்டன்... கத்தரிக்கா சுண்டலோட சோறு வெச்சிக்கன்... வா மன போவம்..."

"நீ... முன்னயும் இப்புடித்தான் செல்லிப்பொட்டு, ஊட்டுக்க மறிச்சி வெச்சி என்ற முதுகுல என்னமாத்தான் குத்தின... எனக்கு சோறும் வேண, மண்ணும் வேணா, ஒன்ன நம்பமாட்டன் போ..."

பெத்தமனம் பித்து பிள்ளை மனம் கல்லென்று மகனுடன் கனநேரமாய் வாதாடினாள் பூங்கிளி.

"நான் போறன் மனே... சொணங்கிராத... பின்னால கெதியா வந்து சேந்திடு..."

கிளி நடயைக் கட்டினாள்.

பொழுதும் நெருங்க, நெருங்க பீதியின் ரேகைகள் வினயமாகச் சாய, நிசப்தத்தின் முன்மொழியில் தாளமிசைக்கும் முற்றத்தில் இழையோடிய மாமரத்து ஆந்தையொன்று பதறிக் கொண்டிருந்தது.

"சனியன் புடிச்சதுக்கு வேறடம் கெடக்கிறல்லியா...?"

அவசரத்தில் எழுந்தவள், மூத்திரச்சாக்கில் இடரி படிக்கட்டில் கொண்டுழுந்து பெருவிரலில் உதிரமும் சீறிப்டுப்பாய, என்றுமேயில்லாத ஒரு களைப்பில் மனம் பின்பெயர்ந்தாள்.

கனுவில் கட்டியிருந்த வளர்ப்பு நாய் எச்சிக்கல்லையை மோர்ந்துவிட்டு பரிதாபமாய் அவளைப் பார்த்துக் கொண்டிருந்ததும் குரங்குப் பாய்ச்சலுக்கும், தவளைப் பாய்ச்சலுக்கும் சமரசம் காண்பித்த அண்டங்காகத்தின் பரிதவிப்பும் கூட ஓரெச்சரிப்புத்தான். அந்த எச்சரிப்பு, நாதியுடன் கூடிய அனர்த்தங்கள். மரண ஓலத்தின் சூசகம்.

வால்போஸ்டர்களை கையிலேந்திய வண்ணம் நான்கு பிணங்கள் தாமரைக் கொடியின் முதுகெழும்பு போல் சிதறிக் கிடக்கின்றதாம் என்ற, அபாயக்குரல்.

"நாசமாய் பெயித்திருவானுகள்... சின்னப் புள்ளயள்ள கைல பசவாளியக் குடுத்திட்டானுகளே...?"

ஒழுங்கைப் பக்கமாய் இப்படி சில விமர்சனங்கள்...

*லரீப் சுலைமான்*

அவள் விம்மினாள்; சிதறினாள்; பெருவெளிப் பக்கமாய் ஓடினாள்.

ஆம்! செல்வன் பயணிக்கிறான்... மயானத்தை நோக்கிப் பயணிக்கிறான். இப்போது, அவன் துடுப்புக் காரனல்ல; நிதானமாய் பயணிக்கிறான்.

"நானிருந்து உனக்கென்னம்மா பிரயோசனம்...? இனிமேல் உன்னைத் தீண்ட மாட்டேனும்மா... உன் மனதை துன்புறுத்த மாட்டேனும்மா... உனக்கு இடைஞ்சல் தரமாட்டேனும்மா... நான் வெட்டியது ஒரு வாழைதான், கவலைப் படாதீங்க... ஒன்றுக்காக நூறு வாழைகளை உவந்ளிப்பேன்..."

தாய் மரத்தின் அடியில் புதியதொரு குட்டி அரும்பி நின்றது. பூங்கிளி தடவிப் பார்க்கிறாள்; அணைத்துப் பார்க்கிறாள்; முத்தமிடுகிறாள். இப்போது அவள் பார்வையில் தெரிவதல்லாம் செல்வமகன் மட்டுமேதான். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய பாம்புகள்

நல்ல உயிரை
பலி கொடுத்து
இரத்த பானம் சுவைக்கும்
கறுத்த மனம் படைத்த
வெறுத்த குணம் தழைக்கும்
சரிந்த மனித இனம்!
சான்றுக்கு உண்டு – சமூகத்தில்
சாதிக்க நினைக்குது
சதிசெய்யத் துடிக்குது
சதுக்கத்தில்!

பண்பினைப் பரிகாசம் செய்து
பாதகத்தின் வழிவகுத்து
மானமதை மழுங்கச் செய்கிறாராம்
மக்களும் அதை நம்புகிறாராம்!

பொறாமை நெருப்பிற்கு
கர்வ எண்ணை இட்டு
பகை சமைக்கும்
வீடுதான் அவர் உள்ளமா?
உங்கள்
வாய் நிறைய
வார்த்தை விஷ வெள்ளமா?

நல்ல பெயர் வாங்குபவரும்
நலம் ஒழுக நடப்பவரும்
பண்பாட்டில் உயர்ந்தவரும்
பரவலாகச் சிறந்தவரும்
கலைதனில் எழுந்தவரும்
கல்வியிலே மிளிர்ந்தவரும்
கலாசாரம் உற்றவரும்
கண்ணியங்கள் பெற்றவரும்
கணக்கில்லை உங்கள் – கண்களில்
மட்டம் தட்டி மடித்து விட
திட்டம் தீட்டி வதைத்து விட!

நாவெனும் ஆயுதமும்
நஞ்சூறும் மொழி வகையும்
பஞ்சு போன்ற மனங்களை
பந்தாடிச் சிரிக்கிறது
பாவத்தைச் சுமக்கிறது!

சமூகத்தில்
தன் இடமும் சிறக்கவில்லை
தனி இடமும் கிடைக்கவில்லை
கிடைத்த இடம் இழுக்குற்றது
அறியாமல் அலப்புகிறார்
அடுத்தவரை கழுவுகிறார்
கருக்குகின்ற பாவத்தினை
கணக்கின்றிப் பெருக்குகிறார்

அருகில் கிடந்து
அருகி ஒதுங்கும் – குறுணிக்கற்கள்
அடர்ந்து வரும் அருவியினை
அடைத்திடுமா அழித்திடுமா?

சமுதாய பாம்புகளே!
ஆழ்ந்து சிந்திப்பவர்கள்
அரங்கம் ஏறினால்
ஆட்டம் கண்டிடுவீர்
அங்கலாய்த்துப் போய்விடுவீர்!

கடல் சேர கரை தேடும்
ஆறுகளுக்கும் ஏரிகளுக்கும்
கற்களும் முட்களும்
கடைசி வரை தடையில்லை
காழ்ப்புணர்ச்சியுள்ளவர்க்கு – சமூகத்தில்
தலைதூக்க தரமில்லை!

எஸ். சிபானி முஹம்மட்
ஒலுவில்




# தேசாபிமானிகள்

இரவெல்லாம் இருளென்னும் கருவறைக்குள்
அடங்கிக் கிடந்த ஞாயிறு
மெல்ல மெல்ல கருவறையை விட்டும்
நகருகின்றதே!
கிழக்குத் திசை வானப்பெண்ணின்
அழகொளிரும் அத்திசையெங்கும்
உதிரக் கசிவு தெரின்றதே!

வானப்பெண்ணின் பிரசவம் ஞாயிறு
நிகழ்வுற்றதுமே இப்பெண்ணின்
அழகிய முகம் முற்றாக வெளிறி
பிரகாசிக்கின்றதே எங்கும்
புயல் மழையில் போராடி
இடி மின்னல்களுக்கும் முகங்கொடுத்து
சொந்த மண்ணிலே வேர்விட்டு
தலைநிமிர்ந்து நிற்கின்றனவே
சில பனைமரங்கள் அங்கே!


கச்சை இழுத்துக்கட்டி காடு திருத்தி
வயல்களினிலே குதித்த
உழவர் குழுவினரின் கைகளிலே
உழைப்பிற்கான கருவிகள்
உடம்பினிலே வியர்வைத் துளிகள்
குடும்பப் பாரத்தினை தாங்கிநிற்கும்
அத்திவாரங்கள் இவர்கள்
அத்துடன் ஒரு தேசத்தை
உயர்த்தி விடுவதற்காக
மாடாய் உழைத்து தேகங்களை
தேய்த்திடும்
தேசாபிமானிகள் அவர்கள்

எம்.எம். அலி அக்பர்

# உரிமை பறிக்கப்பட்ட உலகமிது

தூரத்துப் பச்சை
போன்றேனும்
மிகச் சிறியளவு
சுதந்திரம் கூட – இங்கில்லை...
கதையிழந்து
ஜனநாயகமோ
அராஜகத்தின் காலடியினுள்
அப்படியே
நசுங்குண்டு போகிறது...
பசிபிடித்த
ஆட்டுக் கூட்டம்
பச்சைக் காட்டை
மேய்வது போல
பாசிசம் பிடித்த கூட்டங்கள்
மனிதத்தை
சப்பித் துப்புகின்றனர்...
வாழ்தலின்
இருப்புக்கான
அத்தனை வழிகளும்
அடைக்கப்பட்டு
அட்டூழியத்தின்
கொடி மட்டும்
உயரத்தில் பறக்கிறது...
“உரிமை பறிக்கப்பட்ட
உலகமிது”
இதை உரத்துச்
சொல்கையில்
உயிர்களும் பறிக்கப்படலாம்...

அட்டாளை நிநி



# ஓர் அழைப்பு

சடவாதிகளே!
படைப்பாளனின்
மன்னிப்பாளனின் பக்கம்

உம் நம்பிக்கை
அங்கவீனத்துக்கு
காணாதுபோன விமானம்
ஓர் அத்தாட்சி

உம் சின்ன மூளையை
நம்பிய உமக்கு அதற்கப்பாலுமுள்ள
மறைவான சக்திக்கு
ஓர் ஆதாரம்

படைத்தவன் பக்கம்
நீ மீளுவதற்காய்
எம் படைப்பாளன் தந்த
ஓர் அவகாசம்

பேச மறுத்த உன்
தொழிநுட்பங்களே உன்னை
உலக ரட்சகன் பால் அழைக்கும்
ஓர் அழைப்பு
மீண்டும் அழைக்கிறேன்
மீண்டுவிடு
உன் சடத்துவ விமானம்
இன்னும் பாடம் புகட்டவில்லையா?

சனீரா அப்துல் மஜீத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேசம்

## இணையதளம்

## வெகு விரைவில்...

செய்திகள்
சிறப்புக் கட்டுரைகள்
அரசியல் அலசல்
விஷேட செவ்விகள்... என
பல்சுவை அம்சங்களுடன்
இணைய உலகில்
உலா வரும் உங்கள்
உள்ளத்தை கொள்ளை
கொள்ளும்!

www.engalthesam.lk

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

www.facebook.com/engalthesamJmf

**JUST MEDIA FOUNDATION**

77, DEMETAGODA ROAD, COLOMBO 09, SRI LANKA.
Tel: 2698771 email: jmflanka@gmail.com fb.com/jmfsrilanka



# LAW

**LLB (Hons)** From UNIVERSITY OF WOLVERHAMPTON

The BTEC HND in Law delivered by BCAS Campus is awarded by the Edexcel, UK. Major portion of the curriculum is contextualized on existing legal system in Sri Lanka. The student is assessed through Examination( Open and Closed books) , Time Controlled Assessment, scenario based course works , written and viva voce examinations plus presentations.

On successful completion of the HND, the students are accepted for LLB (Hons) top-up which is again delivered locally for the University of Wolverhampton, UK. This degree awarded by the said university has been recognized by the Council of Legal Education, Sri Lanka making way for the students for direct entry to the Sri Lanka Law College.

The flying faculty of the UK University is substantially involved in the delivery process while the assessments and examinations are exclusively conducted by the university itself. This set-up gives the local students a harmonious blend of local and international learning experience as the students enjoy lectures delivered by the flying faculty with the online library facility made available.

## BTEC HND - edexcel

| Semester 1 | Semester 2 | Semester 3 | Semester 4 |
|---|---|---|---|
| + Legal System | + Constitutional Law | + Evidence | + Commercial Law |
| + Law of Contract | + Company Law | + Law of Property | + International Law |
| + Criminal Law | + Family Law | + Human Rights Law | + Jurisprudence |
| + Law of tort | + Employment Law | + Interpretation of Statutes | + Project on Legal Research |

## LLB (Hons) – 3rd Year Structure

| Year Long Modules | Semester 1 | Semester 2 |
|---|---|---|
| + Research Methods & Project | + International Trade & finance Law | + Contemporary Issues on European Law |
| + Equity & Trusts | + Counter Terrorism Law Policy & Practice | + Law of Criminal Evidence |

BCAS Awarded "Performance Excellence" for the years 2010 & 2011 by Edexcel - UK

Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD

15 YEARS

Hotline : 077 311 4105

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

**Colombo Campus :**
32, Dharmarama Road, Colombo 06.
Tel : (+94) 11 250 1145 , (+94) 11 255 9255
Email : info@bcas.lk www.bcas.lk

**Kandy Campus :**
344, Peradeniya Road, Kandy. Tel : 081 222 4731

**Batti Campus :**
294, 1/4 Trinco Road, Batticalo. Tel : 065 222 8451

**Wayamba Campus :**
103, Dambulla Road, Kurunegala. Tel : 037 2221144

**Jaffna Campus :**
16, Point Pedro Road, Jaffna. Tel : 077 710 2131




மாவனல்லையில்

# MITT

வழங்கும் தமிழ் மொழி மூல
தொழில் நுட்பப் பாடநெறிகள்

## வளமான எதிர்காலத்திற்கு தொழிற்கல்வி வாய்ப்பு




**G.C.E. O/L முடித்து விட்டீர்களா?**
தொழில் ஒன்றைக் கற்று
தொழில் வாய்ப்பைப் பெற
இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

**இப்பயிற்சி நெறி.........**
- கோட்பாடுகள் மற்றும் செயல் முறைகளைக் கொண்டது
- தேர்ச்சியும் அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளர்களை உள்ளடக்கியுள்ளது.

| Courses | Duration Months |
|---|---|
| Automobile Mechanic | 18 |
| AC & Refrigeration Mechanic | 12 |
| Automobile Electrician | 12 |
| Domestic Electrician (Wiring) | 12 |
| Plumbing / Welding | 6 |
| Mobile Phone Repairing | 2 |

தேவையானோருக்கு விடுதி மற்றும் உணவு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

ஸகாத் பெறத்தகுதியான மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வசதிகள் செய்து கொடுக்கப்படும்



எமது நிறுவனம் அரசாங்க அங்கீகாரம் பெற்றுள்ளது. (TVEC PO8/0073)

பதிவுகளுக்கு உங்கள் பெயர், விலாசத்துடன் MITT என Type செய்து 0777 412097 எனும் இலக்கத்திற்கு SMS அனுப்பவும்

விண்ணப்ப முடிவுத்திகதி 2014 மே 15

**MAWANELLA INSTITUTE OF TECHNICAL TRAINING**
UDATHENNAWATTA, GANETHENNE, HINGULA, MAWANELLA
TEL: 035 2240944 | 0777 412097 || EMAIL: techmaw@gmail.com
CONDU... M.M. SUHAIL ... 0777 429998

MITT Established : 1983

INSIGHT


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Printed at AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.